# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 12, விய-திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜூலை 28, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்."

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்

### (அ) விடுதியில் இயங்கேணி வேலை செய்யாதது

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. Hostel–ல் lift வேலை செய்யவில்லை. அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள்.

# 2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

## (அ) இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்—ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதே அவையில் நான் படித்தளித்த அறிக்கையின் தொடர்ச்சியாக இந்த அறிக்கையினை இந்த அவையில் வைக்கின்றேன்:

தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் குறித்த சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் கூட்டம் 27-7-2006 அன்று மாலையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், குழு உறுப்பினர்களான நானும், திரு. டி. சுதர்சனம், திரு. கோ.க. மணி, திரு. சி. கோவிந்தசாமி, திரு. ஸ்வ. சிவபுண்ணியம், திரு. கு. செல்வம், திரு. எச். அப்துல் பாசித், திரு. ஜெகன்மூர்த்தி மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டோம்.

எல்காட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. உமாசங்கர், ஐ.ஏ.எஸ்., முதற்கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காகத் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், 24-7-2006 அன்று பத்து நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, அன்று மாலை 3-15 மணியளவில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் எல்காட் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டன என்றும், தொழில்நுட்பத் தகுதிகள் பெற்ற ஏழு நிறுவனங்களின் விலைப் புள்ளிகள் விரிவாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன என்றும், அவற்றுள் வீடியோகான் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் மிகக் குறைந்த விலையான

2006 ஜூலை 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

(L–1) ரூ. 3,088.55 என்று குறிப்பிட்டிருந்தது என்றும் தெரிவித்தார். பின்னர் மிகக் குறைந்த விலையைக் குறித்திருந்த வீடியோகான் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது ரூ. 2,965 என்று விலை நிர்ணயம் செய்ய ஒத்துக்கொள்ளப்பட்டது என்றும், இதன் அடிப்படையில் L–2 மற்றும் L–3 ஆகிய இரண்டு நிறுவனங்கள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டு, அவர்கள் L–1 விலைக்கு ஒத்துக்கொள்ளத் தயாரா என்று தொழில்நுட்பக் குழு கேட்டுக்கொண்டபோது, அந்த இரண்டு நிறுவனங்களும் ஒப்புக்கொண்டதையும் நிர்வாக இயக்குநர் விளக்கினார். மீதமுள்ள மூன்று நிறுவனங்கள் L–1 விலைக்கேற்ப விலைக் குறைப்புச் செய்ய இயலாது என்று எழுத்துமூலம் தெரிவித்துவிட்டனர்.

வீடியோகான் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், புதுடெல்லி ரூ. 2,965 என்ற விலையில் 15,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம், மும்பை ரூ. 2,965 என்ற விலையில் 7,500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், டிக்சன் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், நொய்டா நிறுவனம் ரூ. 2,965 என்ற விலையில் 7,500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கிட முன்வந்துள்ளன என்று குழுவின் முன்பு நிர்வாக இயக்குநர் விளக்கினார்.

இந்த முடிவுகளைக் குழு ஒருமனதாக ஏற்றுக்கொண்டு, அவ்வாறே பணிகளைத் தொடரலாம் என்ற முடிவினை எடுத்துள்ளது என்பதை இந்த அவையின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 9-35

## 3. மருங்கூர் அரசுப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கும் என்கிற நல்ல உத்தரவை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார். அந்த வகையில் என்னுடைய தொகுதியில் மருங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்காகப் பெற்றோர்—ஆசிரியர் கழகத்தால் ரூபாய் 2 இலட்சம் கட்டப்பட்டிருந்தும், அதற்கான இட வசதியும் இருந்தும், ஏதோ ஒரு சிறு தவறின் காரணமாக விடுபட்ட காரணத்தினால், இன்று அங்கு படிக்கக்கூடிய 120—க்கும் மேற்பட்ட 10 ஆம் வகுப்பு தேறிய மாணவர்கள், தாங்கள் வேறு எந்தப் பள்ளியிலும் சேர முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டு, அங்கு இருக்கக்கூடிய பெற்றோர்களும், அந்த மாணவர்களும் இன்றிலிருந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் என்ற ஒரு போராட்டத்தையும், பல்வேறு அறப் போராட்டங்களையும் அங்கு தொடங்கியுள்ளதால், காவல் துறையினர் அங்கு குவிக்கப்பட்டு, ஒரு பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது. ஆதலால், இந்த ஆண்டே அந்த மாணவர்கள் தொடர்ந்து அங்கு மேல்நிலைக் கல்வி படிப்பதற்கு ஏதுவாக இங்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களும் கருணை உள்ளத்தோடு ஒரு நல்ல அறிவிப்பை வெளியிட வேண்டும் என்ற என்னுடைய அன்பான வேண்டுகோளை என் தொகுதி மக்களின் சார்பாக வைத்து, அமர்கிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், அவருடைய தொகுதியிலே இருக்கக்கூடிய மருங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு, அங்கே இருக்கக்கூடிய பொது மக்கள் போராட்டத்திலே குதித்திருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியினை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த முறை தமிழகத்திலே, குறிப்பாக வட மாவட்டங்களிலே, எழுத்தறிவு குறைவாக இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களிலே சிறப்பான முறையிலே, இந்த ஆட்சிக் காலத்திலே கல்வி அறிவினை மேம்படுத்திட வேண்டுமென்ற நோக்கத்தோடு, 100 உயர்நிலைப்

2006 ஜூலை 28] [திரு. தங்கம் தென்னரசு]

பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக, 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அறிவிப்பினை, அது குறித்த ஆணையினை வெளியிட்டு, அதற்கான பட்டியல் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க ஜூன் மாத இறுதிக்குள்ளாகத் தயாரிக்கப்பட்டு, அதற்கு அரசாணை வெளியிடப்பட்டது. அதிலே பெரும் பகுதியான பள்ளிகள், நம்முடைய விழுப்புரம், கடலூர், அதேபோல, திருவண்ணாமலை,, வேலூர் போன்ற கல்வி அறிவிலே குறைந்திருக்கக்கூடிய மாவட்டங்களுக்கு இந்த முறை முன்னுரிமை அளிக்கப்பட்டு, முழுமையாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளி அந்தப் பட்டியலிலே இடம் பெறவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அரசுக்கு இருக்கக்கூடிய சிக்கல் எல்லாம், 100 பள்ளிகளை நாம் தேர்ந்தெடுக்கின்றபோது, பணம் கட்டி இருக்கக்கூடிய 200-க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து அரசுக்கு அந்தக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, அதற்கு இருக்கக்கூடிய வரன்முறைகளின்படி, கூடுமான அளவிலே நாங்கள் அந்தப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். நிதிநிலையையும் கருத்திலே கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நான் ஆலோசனையையும் பெற்று, வரக்கூடிய இந்த ஆண்டிலோ அல்லது வரும் ஆண்டுகளிலோ நிச்சயமாக அந்தக் கோரிக்கையை நாங்கள் பரிசீலிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெகன்மூர்த்தி. (குறுக்கீடு) உட்காருங்கள், அமைச்சர் விளக்கம் சொல்லியாகிவிட்டது. திரு. ஜெகன்மூர்த்தி, பேசுங்கள்.

***திரு. மு. ஜெகன்மூர்த்தி:** 13-வது சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

## 1. தகவல் கோரல்–தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்து ஒரு மாதத்திற்கும் மேலாக நாட்கள் தள்ளிக்கொண்டு போய்க்கொண்டிருக்கின்றன. பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்துத்தான் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் சபையில் என்ன கவன ஈர்ப்புகள் சொல்கிறார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டு, அதற்குரிய பதிலைச் சொல்லலாம். மொத்தமாக, அவர்களுக்குப் பேசுவதற்கே மறுப்புத் தெரிவிப்பது... (குறுக்கீடுகள்) '

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் அனுமதியைக் கேட்டுத்தான் நீங்கள் கேட்க வேண்டும். (குறுக்கீடு) முதலிலே உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதுதான் அனுமதி கேட்கிறார்கள், கொடுங்கள். என்ன கோரிக்கை என்று கேட்டு, கோரிக்கையைச் சொன்ன பிறகு எடுக்கவில்லை என்றால்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நீங்கள் கொடுத்தவை பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனை செய்து அதற்குப் பிறகு முடிவு எடுப்போம். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன் அல்லவா? உட்காருங்கள் அவ்வளவு பேரும். பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்க முடியும். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெகன்மூர்த்தி.

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** ஐந்தாவது முறையாக அரியணையிலே அமர்ந்துள்ள ஐம்பெரும் காப்பியமே, வணங்கி மகிழ்கிறேன். புரட்சி பாரதத்திற்கு அரசியல் முகவரி தந்து, அரக்கோணத்தில் வெற்றி பெறச் செய்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிசீலனையில் இருக்கிறது என்று நான் சொன்னதற்குப் பிறகும், நீங்கள் அதற்குப் பிறகும் அதிலே முரண்டு பிடித்தால் நான் என்ன பண்ணுவது? (குறுக்கீடுகள்) எல்லாமும் என் ஆய்வில் இருக்கின்றன என்று நான் சொல்கிறேன்

2006 ஜூலை 28] [பேரவைத் தலைவர்]

அல்லவா? ஆய்வில் இருக்கின்றன. நான் பரிசீலனை செய்து, அவற்றை அனுமதிக்கலாமா, அனுமதிக்கக்கூடாதா என்று முடிவெடுத்ததற்குப் பிறகுதான் சொல்ல முடியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லா கவன ஈர்ப்பு அறிவிப்புகளும், நீங்கள் கொடுத்த அவ்வளவும் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. அவற்றின்மீது பரிசீலனையை முடித்து, அனுமதிக்கலாமா, வேண்டாமா என்று முடிவெடுத்ததற்குப் பிறகுதான் நீங்கள் அவை பற்றிப் பேச முடியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஜெகன்மூர்த்தி, பேசுங்கள்.

முற்பகல் 9–40

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** புரட்சி பாரதத்திற்கு அரசியல் முகவரி தந்து, அரக்கோணத்தில் வெற்றி பெறச் செய்து, தொகுதி மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்கும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர் பேசும்போது இடையூறு செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காலகட்டத்திலேயும் நிதிநிலை அறிக்கை... (குறுக்கீடு) தலைவர் அவர்களே, எந்தவொரு காலகட்டத்திலேயும், எந்த ஆட்சி இருந்தபோதும், நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதம் நடைபெறுகிறபோது, அந்தப் பொது விவாதத்தில் அந்தந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள், அவர்கள் விரும்புகிற எந்த முக்கியமான பிரச்சினையையும் பேசுவதற்கு முழு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், ஒத்திவைப்புத் தீர்மானமோ அல்லது கவன ஈர்ப்போ, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிகிற வரையில் எடுத்துக்கொள்ளப்படுகிற வழக்கம் இல்லை, இதுவரையில் எடுக்கப்பட்டதும் இல்லை. அது கடந்த காலத்திலேயும் நடைபெற்றது. ஆகவே, வேண்டுமானால், அடுத்த வாரத்தில் மானியங்களை விவாதிக்கிறபோது, அந்த மானியத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சினையாக ஒத்திவைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்போ வருமானால், அதைப் பேரவைத் தலைவர் அவர்கள் உசிதம்போல, விருப்பம்போல ஏற்றுக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

[2006 ஜுலை 28

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புகிற கோரிக்கை என்னவென்று கேட்டு, நீங்கள் எந்த முடிவு சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். கோரிக்கையைச் சொல்வதற்கு முன்னால், உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்தவர்களுக்குத் தெரியும் அல்லவா? கொடுத்தவர்களுக்கு என்ன கோரிக்கை கொடுத்திருக்கிறோம் என்று தெரியும் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அதை வருமா, வராதா என்று ஆய்விலே எடுத்துக்கொண்டிருக்கிறேன். விதி 184-ல், பொது விவாதத்தில் பேசும்போது, இது வராது. கொஞ்சம் பொறுங்கள். ஆய்வு முடித்து அதற்குப் பிறகு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெகன்மூர்த்தி.

## 4. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்-தொடர்ச்சி

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** புரட்சி பாரதத்திற்கு அரசியல் முகவரி தந்து, அரக்கோணத்தில் வெற்றி பெறச் செய்து, தொகுதி மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்கும் உழைக்க வாய்ப்புத் தந்த, தாய் உள்ளத்தோடு என்னை அரவணைத்து, வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை என்பது, டாக்டர் கலைஞர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் அறிக்கையாகவே இருக்கிறது. தித்திக்கும் தேன்பாகாய், ஏழைக்குக் கிடைத்த ஏணியாய், ஊனமுற்றோருக்குக் கிடைத்த ஊன்றுகோலாய், வஞ்சிக்கப்பட்டோருக்குக் கிடைத்த வாழ்க்கை உத்தரவாதமாய் இருக்கிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் தங்கும் விடுதியைப் பராமரிக்க, கல்வித் தரத்தை முன்னேற்ற, ரூபாய் பத்து கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மக்கள் வருவாய் ஈட்டும்

2006 ஜூலை 28] [திரு. மு. ஜெகன்மூர்த்தி]

வகையில், மத்திய அரசு வழங்கி வரும் Special Central Assistance வாயிலாக, Special State Assistance—சிறப்பு மாநில உதவித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில் உருவாக்கி, ரூபாய் இருபத்தைந்து கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை புரட்சி பாரதம் வரவேற்கிறது, நன்றி தெரிவித்துக்கொள்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மனிதக் கழிவை மனிதனே அள்ளுகிற மிகப்பெரும் கொடுமைக்குச் சாவு மணி அடித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் சுமார் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது மிகவும் மதிக்கத்தக்கது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, உலகம் போற்றும் உத்தமத் தலைவராக, புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் ஆகியோரின் மொத்த உருவமாகத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைப் பார்க்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முத்தமிழ் அறிஞர், உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதல்வராக இருக்கின்ற அவையில் நானும் உறுப்பினராக இருக்கிறேன் என்பதை நினைத்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அர்த்த மண்டபத்தின் நிழலைக்கூடத் தொட முடியாத அவல நிலையில் தலித் மக்கள் இருக்கிறபோது, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கலாம் என ஆணை பிறப்பித்து, கருவறைக்குள் காலடி வைக்கச் செய்து, இருட்டைக் கிழித்து வெளிச்சமாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் புகழ் உலகம் இருக்கும் வரை நிலைத்து நிற்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* வரலாறு இருக்கும் வரை பேசும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மனித வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையான, உண்ண உணவுக்காக இரண்டு ரூபாய்க்கு 1 கிலோ அரிசி, பருப்பு, பயறு வகை, சமையல் எண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது, ஏழைகளின் இதயம் குளிர வைக்கும். வாழ்க்கைமீதே நம்பிக்கை ஏற்படுத்தும் திட்டம்.

*முற்பகல் 9-45*

தனியார் சுய நிதிக் கல்லூரிகளின் நிருவாக ஒதுக்கீட்டிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவது, சட்டபூர்வமாக

ஆக்கப்பட்டுள்ளது என்பது, ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்காக இந்திய அரசியல் சாசனத்தின்மூலம் இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தார் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள். அதைச் சட்டபூர்வமாக ஆக்கியுள்ளார் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர் தரிசு நிலம் கொடுத்து, காட்டாமணக்குச் செடி பயிர் செய்து, பயோ டீசல் உற்பத்தி செய்தால் டீசல் விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்கின்ற கோரிக்கையையும் வைத்து, அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைத்து, நலத் திட்ட உதவிகளைச் செய்ய அரசு முடிவெடுத்துள்ளதை புரட்சி பாரதம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

சமூகம், பொருளாதாரம், கல்வியில் முன்னேற்றமே ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்கான அத்தனை கூறுகளும் இடம் பெற்றுள்ளன.

நடந்துகொண்டிருக்கின்ற சிறுதாவூர் பிரச்சினை. அந்த நிலப் பிரச்சினையில் முதல்வர் அவர்கள் நீதிபதி தலைமையில் விசாரணைக் குழுவை அமைத்ததை புரட்சி பாரதம் வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, பஞ்சமி நிலங்களையும் தலித் மக்களுக்கு மீட்டுத் தர, அரசே பஞ்சமி நில மீட்புக் குழுவை நியமித்து ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் திருச்சியிலே நடந்த திராவிட முன்னேற்றக் கழக மண்டல மாநாட்டில் எனக்குப் பேச வாய்ப்புக் கிடைத்தபோது நான் சொன்னேன், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் ஆவதும், ஒரு தலித் முதலமைச்சர் ஆவதும் ஒன்றே என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிரூபிக்கும் வகையாக நிதிநிலை அறிக்கையானது, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட தலித் மற்றும் சிறுபான்மை மக்களின் நலன் காக்கும் பட்ஜெட்டாக இருக்கிறது.

கடைசியாக, எனது தொகுதியான அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றித் தர மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொய்கைநல்லூரில் இருந்து பெரும்புளிபாக்கம் இடையில் கடக்கும் மக்ளின் கால்வாயின்மீது பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தக்கோலத்திற்கும், அனந்தபுரத்திற்கும் இடையே கடக்கும் ஆற்றின்மீது பாலம், வளர்புரத்திற்கும் கிருஷ்ணாபுரத்திற்கும் இடையே பாலம், முதூரில் இருந்து திருத்தணி வரை தார்ச் சாலை, தக்கோலம் முதல் பேரம்பாக்கம் வரை தார்ச் சாலை, அரக்கோணம் எஃகு நகரில் இருந்து நாராயணபுரம் கூட்டுச் சாலை வரை தார்ச் சாலை, அரக்கோணம் பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் ஆகியவற்றை அமைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாணவர்கள் அரசு கலைக் கல்லூரிக்குச் செல்வதற்கு அரக்கோணத்திலிருந்து வேலூருக்கோ, சென்னைக்கோ வரவேண்டிய சூழ்நிலை இருப்பதால், அரக்கோணத்தில் இதுவரை எந்தக் கல்லூரியும் இல்லாத சூழ்நிலையில், அங்கே ஒரு அரசு கலைக் கல்லூரியும், ஒரு செவிலியர் பயிற்சிக் கல்லூரியும் அமைத்துத் தர முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கல்விச் சேவைக்கு முன்னுரிமை தரும் டாக்டர் கலைஞர் அவர்கள் கண்டிப்பாக இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அதிகப்படியான நோயாளிகள் வருவதால், படுக்கை வசதியோ, அறுவை சிகிச்சை வசதியோ இல்லாத சூழ்நிலையில் அதையும் விரிவுபடுத்தி, மருத்துவர்களைக் கூடுதலாகப் பணியமர்த்திட ஆவன செய்ய வேண்டுகிறேன். அரக்கோணம் நகரில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால், இரயில்வே மேம்பாலம் ஒன்றை அமைத்து, போக்குவரத்தைச் சீர்செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில் என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், அரக்கோணம் தொகுதி மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இவ்வளவு நேரம் எனக்குப் பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், என்றென்றும் என்னை வழிநடத்திச் சென்று கொண்டு இருக்கின்ற, ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர் நாடி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் எனது கருத்துகளைக் கூற விரும்புகின்றேன். எதையும் அதனுடைய நிறைகளையும், குறைகளையும் எண்ணிப் பார்த்தே முடிவெடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் நிதிநிலை அறிக்கையின் நிறைகளையும், குறைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்றாலும், நிறைகளைப் பற்றிப் பேச இம்மாமன்றத்தில் நிறையப் பேர்கள் உள்ளனர். ஆனால் குறைகளைச் சுட்டிக்காட்ட எதிர் வரிசையில் எங்களைப் போன்ற ஒரு சிலரே உள்ளனர். நிதிநிலை அறிக்கையில் உள்ள குறைபாடுகளை, எனக்குத் தெரிந்த வரையில் எடுத்துச் சொல்கிறபோது நேரம் கருதியும், நிலைமை கருதியும் நிறைகளை எடுத்துச் சொல்லவில்லையே தவிர, ஒருதலைப்பட்சமாகப் பேசுவதாக ஆகாது. குறைகளை நாங்கள் சுட்டிக்காட்டுகின்றபோது அவற்றை நிவர்த்திக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே தவிர, எதற்கெடுத்தாலும் குற்றம் சாட்டுகின்ற மனப்போக்கு அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் நேற்று அமைச்சர் அவர்கள், நிச்சயமாக விரைவில் தீர்வு காண்பேன் என்று சொன்னதற்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு 100-க்கு 60 பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். விவசாயக் கடன்களில் அவர்கள் மிகவும் நசுங்கிப் போயிருக்கின்றார்கள். அவர்கள் கடனை, அதாவது, கூட்டுறவுச் சங்கக் கடனை, அவர்களை நலிவிலிருந்து மீட்பதற்காக 6,866 கோடி ரூபாய்க்கான கூட்டுறவுக் கடனை ரத்துச் செய்துள்ளதை வரவேற்கின்றேன். ஆனால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் முறை, எதிர்பார்க்கின்ற பலனைத் தராது என்றே நம்புகின்றேன். கூட்டுறவுக் கடனைச் செலுத்த முடியாமல், மேலும் கடன் பெற இயலாத நிலையில், விவசாயம் செய்ய முடியாமல் இருப்பதாலேயே கூட்டுறவுக் கடன் ரத்துச் செய்யப்படுகின்றது. ஆனால் இதை 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதன்மூலம், மேலும் 5 ஆண்டுகள் வரை விவசாயிகள் பெரும்பாலோர் கடன் பெற இயலாமல் போய்விடும். ஏற்கெனவே

கஷ்டத்திலே இருப்பவர்களை இன்னும் 5 ஆண்டுகள் காத்திருக்கச் செய்வது சரியாக இராது. விவசாயிகள் என்னிடம் வந்து பேசும்போது, அரசு விவசாயக் கடன் ரத்திற்குச் சான்றிதழ் கொடுக்கின்றார்கள். அந்தச் சான்றிதழைக் கொண்டு போய் வங்கியில் நீட்டினால், அந்த வங்கியிலே என்ன சொல்கிறார்கள் என்றால், 'அரசாங்கம் இன்னும் பணம் கொடுக்கவில்லை, அரசாங்கம் பணம் கொடுத்தவுடனே திரும்பவும் உங்களுக்குக் கடன் கொடுக்கிறேன்' என்று சொல்வதாகத்தான் எல்லோருமே சொல்கின்றார்கள். ஆகவே இந்த ஆண்டிலேயே மொத்தக் கடனையும் ரத்துச் செய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பம் முதலே சொல்லிக்கொண்டிருக்கின்றேன். அப்படி எந்தப் பகுதியில், எந்தச் சங்கத்தில், யார் சொன்னார்கள் என்பதை விவரமாகத் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்குக் கடன் அளிக்க ஆவன செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் வாங்கிய 6,866 கோடி ரூபாயும் இப்போது முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. வருடம் கொஞ்சம், கொஞ்சமாகத் தள்ளுபடி செய்ததல்ல. முழுவதுமாகவே தள்ளுபடி செய்து, அவர்கள் கடனாளிகள் இல்லை என்ற சான்றிதழும் வழங்கப்பட்டுவிட்டது. அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் NABARD வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகையைத்தான் 5 ஆண்டுகளில் நாங்கள் திருப்பிக் கொடுப்பதற்காகத்தான், நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் கொடுத்து, புதிய கடன் கொடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன் அனைத்தும் ரத்து என்று சொல்லிவிட்டீர்கள். ஆனால் ledger இருக்கிறது. கூட்டுறவுக் கடன் வாங்கியவர்களுக்கு ஒரு ledger book இருக்கிறது. அதிலே nil என்று போட்டு, யார் கடன் வாங்கினார்களோ அவர்களுடைய

கையொப்பமும், அந்தச் செயலாளருடைய கையொப்பமும் அங்கே இருக்க வேண்டும். இரண்டாவதாக, கடன் அனைத்தும் ரத்து என்று சொன்னதற்குப் பிறகு, அங்கே இருக்கின்ற தேசிய வங்கியிலே அவர்கள் கடன் கேட்கின்றபோது உங்கள் கூட்டுறவு வங்கியிலே கடன் இருக்கிறதா? இல்லை என்று கடிதம் பெற்று வாருங்கள் என்று சொல்கின்றபோது, அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய அறிவிப்பின்படி, அவர்களுக்கெல்லாம் கடனே இல்லை என்ற சான்றிதழே வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு சில இடங்களில் சில பிரச்சினைகளால் வழங்கப்படாமல் இருக்கின்றது. அதைப் பற்றிக் கவலையே இல்லை. கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. (குறுக்கீடு) அரசாக முன் வந்து முதலமைச்சருடைய ஆணையை ஏற்று அதைச் செய்திருக்கிறோம். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. அநேகமாக இன்றோடு அது முடிவடையும் என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விஜயகாந்த். (குறுக்கீடு) தெளிவான விளக்கம் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் விஜயகாந்த். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

*முற்பகல் 9–55*

***மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 453 கோடி ரூபாய் NABARD வங்கிக்குக் கடன் செலுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதனை ஏற்றுக்கொண்ட NABARD வங்கி அலுவலர்கள், அதிகாரிகள் refinancing-ல், அதிகபட்சமாகக் கடன் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்ற சூழ்நிலையில் விவசாயிகள் கடன் பெறுவதிலே எந்தவிதத் தடையும், சிக்கலும் இருக்காது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விஜயகாந்த், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, please, point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை. உட்காருங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டதற்கு ஒரு clarification. One second please.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கொறடா எல்லாவற்றையும் சொல்லிவிட்டார், உட்காருங்கள்.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் ஈரோட்டிலிருந்து வந்த விவசாயிகள் சொன்ன கருத்துகளைத்தான் இங்கே சொன்னேன். அந்தக் கருத்துகள் உண்மையாக இருந்தால் நான் சம்பந்தப்பட்ட மந்திரியிடம் அதைப் பற்றித் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த ஆண்டிலேயே மொத்தக் கடனையும் ரத்துச் செய்யும் வகையில் முதலமைச்சர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி—இதைச் சொல்லலாமா, வேண்டாமா என்று—ஏனென்றால், மந்திரி அவர்கள் விளக்கம் கொடுத்ததனால், சொல்ல வேண்டாம் என்று நான் நினைக்கிறேன். NABARD வங்கிமூலமாக மொத்தக் கடனும் ரத்துச் செய்யப்படுகிறது என்பதால், அதைப் பற்றிச் சொல்லவில்லை. வேண்டாம் என்று நினைக்கிறேன். மேலும், விவசாயிகள் கடன் சுமை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. அதிலே மத்திய அரசு சொல்லியிருக்கிறது. வட்டி விகிதத்தை 7 சதவீதம் ஆக்கினால் ரொம்ப நன்றாக இருக்கும். உடனடியாகத் தமிழக அரசு 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக ஆக்கியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்திலே அண்டை மாநிலமான கர்நாடகா மாநிலத்திலே 4 சதவீதமாக விவசாயிகளுக்குக் கொடுத்தது மாதிரி முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு அந்த வட்டியை 4 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று தாழ்மையுடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே ஆளுநர் உரையிலே நான் கேட்டுக்கொண்டபடி, விவசாயிகளுடைய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையைப் பெற்றுத் தருவதன்மூலமே, அவர்களைக் கடன் சுமையிலிருந்து நிரந்தரமாகக் காப்பாற்ற முடியும். நல்ல விதை, நல்ல உரம், நல்ல விளைச்சல் என்று அரசு முக்கோண வடிவில் விவசாயத்தை

விளம்பரப்படுத்துகின்றது. அது மட்டும் போதாது. நல்ல விலையும் தேவை. ஆகவே, நல்ல விதை, நல்ல உரம், நல்ல விளைச்சல், நல்ல விலை என்னும் நான்கு பக்கச் சதுரமாக விவசாயத் தொழிலை ஆக்குவதன்மூலமே அவர்களது வாழ்வில் விளக்கேற்ற முடியும். விவசாயிகளை நம்பித்தான் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு மொத்த உணவு உற்பத்தி 95 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என்று நிர்ணயித்துள்ளது. ஆனால், முதல் போட்டு விவசாயத்தில் ஈடுபட விவசாயிகளுக்கு, நம்பிக்கையூட்டும் வகையில் விளைபொருட்களுக்கு குறிப்பாக, நெல்லுக்கு உரிய விலையும், ஊக்கத் தொகையும் அரசு நிர்ணயித்து இப்போதே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மொத்தம் உள்ள சுமார் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்படுத்தி, ஒவ்வொரு ஏழை விவசாயக் குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் நிலம் வழங்குவதாகத் தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்மூலம் சுமார் 28 இலட்சம் குடும்பங்கள் பலன் பெறும் என்ற நம்பிக்கை நாட்டு மக்களிடத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இப்போது முதலுக்கே மோசம் என்ற வகையில், கிராமம் வாரியாகத் தரிசு நிலங்கள் குறித்துப் புள்ளிவிவரங்கள் இப்பொழுதுதான் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்பது அதிர்ச்சி தருவதாக அமைந்துள்ளது. இதற்கு, முந்தைய ஆட்சியின் நிதிநிலை அறிக்கைதான் காரணம் என்று கை காட்டுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று வாக்குறுதி அளிக்கிறபோது, அதற்கான முழுப் பொறுப்பையும் அந்த இயக்கம்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், மக்கள் அந்த வாக்குறுதியை நம்பித்தான் அந்த இயக்கத்திற்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தின்மூலம் எத்தனை இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்கள் பலன் பெறும் என்பதை இந்த அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்கீழ் பலன் பெறுவோர் செலுத்த வேண்டிய கட்டணம் உண்டா? அப்படியானால், அரசே அதைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2006 ஜூலை 28] [திரு. விஜயகாந்த்]

பாசனத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் ஆறுகளில் அவ்வப்போது ஏற்படும் வெள்ள நீரை, ஏரிகள், கால்வாய்கள், வடிகால்கள் போன்றவற்றின்மூலம் நிரப்புவது ஒருபுறம் இருந்தாலும், தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகளை இணைப்பதன்மூலம், ஒரு நீர்ப் படுகையிலிருந்து இன்னொரு நீர்ப் படுகைக்கு வெள்ள நீரை எடுத்துச் செல்லத் திட்டம் வகுப்பதே நிரந்தரத் தீர்வாக அமையும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மலிவு விலையில் அரிசி தரும் திட்டத்தின்மூலம் தரப்படும் அரிசி தரமானதாக இல்லையென்ற குறைபாடு பல இடங்களில் உள்ளது. அதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விளக்கம் சொல்லியிருந்தாலும், சில இடங்களில் நல்ல அரிசியும், பல இடங்களில் இன்னும் தரம் குறைவாகவுமே இருக்கிறது என்றுதான் என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால், இரண்டு ரூபாய்க்குத் தருவது மட்டும் பெரிதல்ல. அது தரமானதாகவும் இருந்தால்தான், ஏழை மக்கள் 20 கிலோ அரிசியையும் வாங்கிப் பயன்படுத்துவார்கள். தேவைப்பட்டால், தமிழ்நாடு அரசு தனது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் தமிழ்நாட்டிலே நெல் கொள்முதலை அதிகரித்து, தரமான அரிசியை வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வீடுதோறும், குறிப்பிட்ட நாட்களில் ரேஷன் பொருட்களைச் சரியான அளவில் பிளாஸ்டிக் பைகளில் அடைத்து விநியோகிக்க ஏற்பாடு செய்தால், போலி குடும்ப அட்டைகள் ஒழிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், தகுதியற்றவர்கள் மலிவு விலையில் அரிசி பெறுவதைத் தடுக்கும் வாய்ப்பும் உள்ளது. உணவுப் பொருட்களின் கடத்தலையும் இதன்மூலம் தடுக்க வழி பிறக்கும்.

*முற்பகல் 10–00*

பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் ஏழை மாணவர்களுக்குக் கல்விக் கட்டணமும், தங்கும் விடுதிக் கட்டணமும் அரசே ஏற்கும் என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் அரசு பொறியியல் கல்லூரிகளில் மட்டும கட்டணக் குறைப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் நடத்தும் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளைப் பற்றி எத்தகைய குறிப்பும் காணப்படவில்லை. திறமை உள்ள ஏழை மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் வகையில் இந்தச் சலுகையை அரசு ஏன் வழங்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

உடல் ஊனமுற்றவர்கள் பேருந்துகளில் தனியாகப் பயணம் செய்வதில் பல சிரமங்களுக்கு ஆளாவதால், அவர்களுக்கு இலவச bus pass அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வாலும், இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வாலும், வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் ஏழை, நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வருமானம் அதே நிலையில் இருக்க, செலவுகள் அதிகமாவதால் இதுவரையில் இருந்த ஏழ்மை ஒழியாதது மட்டுமல்ல, ஏழைகள் அதிகமாகிக்கொண்டே வருகிறார்கள்.

பிள்ளைகளின் படிப்புச் செலவு, குடும்பத்தில் மருத்துவச் செலவு, வீட்டு வாடகை, போக்குவரத்துச் செலவு என்று செலவுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. குடும்பச் செலவுப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தச் சலுகையும் இல்லை. அவர்களது வருவாயைப் பெருக்கும் வழிவகைகளோ அல்லது செலவுகளைக் குறைக்கும் சலுகைகளோ இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. படித்த, படிக்காத இளைஞர்கள் பல இலட்சக்கணக்கில் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். அவர்கள் தாங்கள் விரும்பும் கைத்தொழிலில் இலவசப் பயிற்சி பெற தொழிற்பயிற்சிக் கூடங்கள் ஏராளமாக அமைக்கப்படவில்லை. மேலும் அப்படிப் பயிற்சி பெறும் இளைஞர்கள், தாங்களே முன்வந்து தொழில் துவங்க, முதலீட்டுக்கான திட்டம் எதுவும் இல்லை. படித்த இளைஞர்களுக்கு, வேலையில்லாத காலத்தில் 3 ஆண்டுகளுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் வரவேற்கத்தக்கது. என்றாலும், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்கு அது தீர்வு ஆகாது. தீவிரவாதத்தைக் கண்டிப்பதும், நடவடிக்கை எடுப்பதும் மட்டும் போதாது. சாதிச் சண்டைகளுக்கும், சமய மோதல்களுக்கும், தீவிரவாதத்திற்கும் இன்றைய இளைஞர்கள் இரையாகின்றார்கள் என்றால், அதற்கு வேலையில்லாத் திண்டாட்டமும் ஒரு காரணம். ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, தொலைநோக்குக் கொண்ட ஒரு விரிவான திட்டம் தேவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எனது விருத்தாசலம் தொகுதியில், முந்திரிச் சாகுபடியைப் பொறுத்தவரையில், விலை வீழ்ச்சியே அந்தத் தொழில் வளராததற்கு முக்கியக் காரணம் ஆகும். ஏற்கெனவே கடலூரில் ஏற்றுமதி வளாகத்திற்கு இந்திய அரசு, தனியாருடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட

ஒப்புதல் அளித்துள்ளது. அது இயங்காமல் முடங்கிக் கிடக்கிறது. அதைச் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பதன்மூலம் முந்திரிச் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரிதும் பயன் அடைவர். தமிழ்நாடு அரசு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். முந்திரிப் பருப்பு மட்டுமல்லாது, முந்திரித் தோல், முந்திரிப் பழம் முதலிய பொருட்களைப் பயன்படுத்தி, தொடர்புடைய தொழிற்சாலைகளை எனது தொகுதியில் அமைக்க அரசு ஊக்கம் தரக் கேட்டுக்கொள்கிறேன். இதனால், விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானமும், வேலைவாய்ப்பும் கிடைக்கும். அங்கு அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அமைத்து, அந்தப் பகுதியின் பின்தங்கிய மக்களுக்கு வசதி செய்து தரக் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலத்தில் மூடப்பட்ட பீங்கான் தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலத்தில், அங்குள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைப் பயன்படுத்தி ஒரு வேளாண்மைக் கல்லூரி துவக்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் வட்டம், கம்மாபுரம் ஒன்றியத்தில் ஓடும் வெள்ளாற்றின் குறுக்கே சு.கீரனூர் மற்றும் தேவங்குடி ஊராட்சிகளை இணைக்கும் வகையில் ஒரு பாலம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். அப்பகுதியில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் போக்குவரத்து வசதிக்கு அது மிகவும் இன்றியமையாததாகும்.

சேத்தியாத்தோப்பு— விருத்தாசலம் நெடுஞ்சாலைப் போக்குவரத்து நெரிசலினைத் தவிர்க்க, இன்னும் ஒரு மடங்கு அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுத்தாறில் கடந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெலாந்துறை அணைக்கட்டும், மதகுகளும் பெருத்த சேதத்திற்கு ஆளாகின. இதைச் சரிசெய்து, அணையின் இரு கரைகளையும் பலப்படுத்த NABARD வங்கிமூலம் உதவி பெற்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். வருகிற மழைக்காலத்திற்குள் இதை நிறைவேற்ற அவசர நடவடிக்கை தேவை என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

விருத்தாசலம் நகரில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் போதிய கட்டட வசதி, ஆய்வக வசதி, சுற்றுச் சுவர்

ஆகிய வசதிகளைச் செய்து தரக் கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவமனையில் போதிய சிறப்பு மருத்துவர்களை நியமிக்கக் கேட்டுக் கொள்கிறேன். X–Ray Machine நிறுவப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போதிய ஊட்டச் சத்து இன்மையால், பெருமளவுக்கு சவலைக் குழந்தைகளாகவும், ஊனமுற்ற குழந்தைகளாகவும், ஏழைக் குடும்பங்களில் ஏராளமான சிறுவர், சிறுமியர் உள்ளனர். இந்த நிலையை மாற்ற, மகப்பேறுக் காலத்திற்கு முன்னர் 3 மாதங்களுக்கும், மகப்பேறுக் காலத்திற்கு பின்னர் 3 மாதத்திற்கும், மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் வீதம் ஏழைக் கர்ப்பிணிப் பெண்களின் ஊட்டச் சத்து உணவிற்காக வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இது போதாது. கருவுற்ற நாள் முதல், குழந்தை பிறந்த 3 ஆண்டுகள் வரை, மாதம் ஒன்றுக்குக் குறைந்தது ரூ.500–ஆவது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு யூனிசெப் நிறுவனத்தின் உதவியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கென ஒதுக்கப்படும் தொகை நாளாவட்டத்தில் குறைந்து வருகிறது. மாநில அரசு நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளோ அதிகரித்து வருகின்றன. நிதியாதாரங்களோ குறைந்து வருகின்றன. அது மட்டுமல்லாமல், 12–வது நிதிக் குழுவின் பரிந்துரைகளும் தமிழ்நாட்டுக்குப் பாதகமாக அமைந்துள்ளன என்பது தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு நிதிப் பங்களிப்புக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதியை நீக்குவதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்டத்திற்கு ரூ.12,500 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது நல்ல செய்தி ஆகும். ஆனால், இந்தத் திட்ட அளவை எட்டுவதற்கு மாநில அரசின் சார்பில் கூடுதலாகத் திரட்டப்பட வேண்டிய நிதியாதாரங்கள் எவ்வளவு என்று தெரிவிக்கப்படவில்லை. கட்டணங்களையும், வரிகளையும் இதன்மூலம் எவ்வளவு உயர்த்த வேண்டியிருக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன. போதிய நிதியாதாரங்களைத் திரட்டுவதும், இந்திய அரசிடமிருந்து வர வேண்டிய நிதியுதவிகளைப் பெறுவதும், தவிர்க்க வேண்டிய செலவுகளைத் தவிர்ப்பதும், வீண் செலவுகளை அறவே அகற்றுவதும் நிதிநிலையறிக்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சிறந்த அம்சங்களாகும். அந்த வகையில் பணக்காரர்களுக்கும், அவர்கள் பயன்படுத்தும் ஆடம்பரப் பொருட்களுக்கும் வரி விதித்து, அவற்றின்மூலம் ஏழைகளுக்கு வசதிகளைப் பெருக்குவதே அரசின் கடமையாகும்.

வரி இல்லாத வரவு-செலவுத் திட்டம் என்பது மட்டும் பெருமைக்குரியதல்ல. தாங்கத் தகுந்தவர்களுக்கு வரி விதிப்பதும், தாங்க இயலாதவர்களுக்கு வசதியைப் பெருக்குவதும் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கைக்கு அடையாளம் ஆகும். இது குறித்து அண்ணா அவர்கள் "Tap the rich and pat the poor" என்று சொன்னதை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். வருவாய்ப் பற்றாக்குறை ரூ.1,129 கோடியை ஈடுகட்ட, வரி விதிப்பதற்குப் பதிலாக வளர்ச்சித் திட்டங்களுக்கான மூலதனச் செலவினத்திலிருந்து ஈடுகட்டப்படுகிறது. நிதிப் பற்றாக்குறை ரூ.7,453 கோடி கடன்மூலம் சரிசெய்யப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே மாநில அரசின் கடன் சுமை, கடந்த ஆண்டுகளில் 2 மடங்காக அதிகரித்து வரும் நிலையில், மேலும் கடன்களை வாங்கி நிதிநிலையைச் சமன் செய்வது, பணக்காரர்கள்மீதும் வரியை விதிக்க இந்த அரசு தயங்குகிறது என்பதையே காட்டுகிறது. வசதி படைத்த பலருக்கும் மேலும் வசதிகள் பெருகிடவும், வறியவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட நிதிப்பங்கீடு திருப்பிவிடப்படாததாலும், ஏழை, நடுத்தர மக்களைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கை பெருத்த ஏமாற்றத்தைத் தருகிறது என்று கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விஜயகாந்த் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு விவசாயிகள் ஏதாவது உறுப்பினர் கட்டணத்தைச் செலுத்த வேண்டுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, அப்படிப்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேரும்பொழுது எந்தக் கட்டணமும் செலுத்தப்படத் தேவையில்லை என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் உறுப்பினர்களாகப் புதுப்பிக்கும்போது Renewal fees—புதுப்பிப்பதற்குக்கூட கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது, இங்கே நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் கொடுப்பதைப் பற்றிச்

சொன்னார்கள். கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்ட 55 இலட்சம் ஏக்கர் நிலம் அல்லது 50 இலட்சம் ஏக்கர் நிலம்—தரிசு நிலங்களைப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கும், தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரிய நிறுவனங்களுக்கும் அவற்றை வழங்கி, தமிழ்நாட்டிலே பெரிய பொருளாதாரப் புரட்சியைச் செய்யப் போகின்றோம் என்று 2001 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தார்கள். அதையே சாக்காக எடுத்துக்கொண்டு நாங்கள் தேர்தல் அறிக்கையிலே தெரிவித்ததாகச் சொல்லியிருக்கின்றார்கள். எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரிசு நிலங்கள் மற்றும் தரிசு நிலங்கள் என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. தரிசு நிலம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. தரிசு நிலம் என்பது அரசு தரிசு நிலத்தை, நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கண்டிப்பாக அதைப் பண்படுத்தி வழங்குவோம் என்று தெளிவாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபோக, பட்டா தரிசு நிலங்களை அவர்கள் விரும்பினால், அதையும் பண்படுத்தி, சிறு, குறு விவசாயிகளுக்குக் கொடுப்போம் என்று நிதிநிலை அறிக்கையிலும், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்று ஏதோ தெரிவித்தனர்.)*

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது யாரும் குறுக்கிடக்கூடாது, உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** அ.தி.மு.க. ஆட்சியிலே அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதாக அறிவித்தும், அப்படி வழங்காமல் பல இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்துள்ளதை மீட்டு, தமிழகத்தில் உள்ள மொத்தம் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, (குறுக்கீடு) அதைத்தான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை correct–ஆகச் சொல்லியிருக்கிறேன். 55 இலட்சம்

ஏக்கர் நிலங்களைப் பண்படுத்தி (குறுக்கீடு) நீங்கள் அரசு தரிசு நிலங்கள் என்று சொல்லவில்லை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி வி. ஜெயராமன், அமைதியாக உட்காருங்கள். அடிக்கடி நீங்கள் குறுக்கிட்டு இடையூறு செய்கின்றீர்கள். அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே தெளிவாக, அ.தி.மு.க. ஆட்சியில் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதாக அறிவித்தும், அப்படி வழங்காமல் பல இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்த்ததை மீட்டு— கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த அரசுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் என்று தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்து, கம்யூனிஸ்ட் தோழர்கள் எல்லாம் இங்கேயே அதைப் பற்றி வெளிப்படுத்தி, அதை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையை ஏற்றுத்தான் தேர்தல் அறிக்கையிலே, அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, 55 இலட்சம் ஏக்கர் என்று நாங்கள் கணக்கிட்டது வேண்டுமானால், அதை எந்த அடிப்படையிலே கணக்கிட்டோம் என்பது தவறாகக்கூட இருக்கலாம். ஆனால் அதற்குக் காரணம், கடந்த ஆட்சியிலே குறிப்பிட்டதைத்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதுகூட அந்த 55 இலட்சம் ஏக்கர் நிலமும்— இங்கே சொன்னதுபோல, 55 இலட்சம் ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தி, அது நிலச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 55 இலட்சம் ஏக்கர் நிலம் என்பது கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்கள் கணக்கிட்டது, விவசாயம் செய்யாமல் இருக்கின்ற தரிசு நிலங்களைத்தான் கணக்கிட்டிருக்கிறார்கள். தரிசு நிலம், மேய்ச்சல் நிலம் 55 இலட்சம் ஏக்கர் தமிழ்நாட்டில் இருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதிலே தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்கள் எல்லாம் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அதை எப்படிப் பன்னாட்டு நிறுவனம், பெரிய நிறுவனங்களுக்குக் கொடுக்க முடியும்?

அதைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் எல்லாம், பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கவே கூடாது, அதை ஏழையெளிய மக்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று இதே அவையிலும் கேட்டார்கள், வெளியிலேயும் போராடியது இடதுசாரிக் கட்சிகள். (மேசையைத் தட்டும் ஒலி) இது இந்த நாட்டுக்கே தெரியும், உண்மை. அதை மறுத்துவிட்டு (குறுக்கீடு) நான்தான் தெளிவாகச் சொல்கிறேனே? நிதிநிலை அறிக்கையிலும் தெளிவாக நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். எங்களுடைய முதலமைச்சர், சொல்வதையும் செய்யக்கூடிய முதலமைச்சர், சொல்லாததையும் செய்யக்கூடிய முதலமைச்சர் இந்திய வரலாற்றிலே தலைவர் கலைஞர் என்று நான் நேற்று இந்த அவையில் பதிவு செய்திருக்கிறேன். நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, தமிழக அரசியல் வரலாற்றிலே—நேற்று நான் ஒரு உதாரணத்தைச் சொன்னேன்—1971 ஆம் ஆண்டு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் இருந்த காலத்திலேதான் 15 standard acre கொண்டு வந்தார்கள். 30 ஏக்கராவை 15-ஆகக் கொண்டு வந்து, 1,73,000 ஏக்கர் நிலத்தை எடுத்தார்கள். நீங்கள் செய்தீர்களா? ஏழை எளிய மக்களுக்கு எந்த நிலத்தைக் கொடுத்தீர்கள் நீங்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கும் கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவதற்கு இதில் எந்தவிதமான யோக்கியதையும் இல்லை. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு நிலம் கொடுத்த ஒரே தலைவர் கலைஞர்தான். (குறுக்கீடு) அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 63 ஆயிரம் ஏக்கர் நிலத்தை 1971 ஆம் வருடம் எடுத்துக் கொடுத்தார். நிலத்தை மீட்டு, பணக்காரர்களிடமிருந்து எடுத்து, மீட்டு ஏழைகளுக்கு வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆக, இந்த அரசு சொன்னதைக் கண்டிப்பாகச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.வினுடைய தேர்தல் அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, "தமிழகத்தில் மொத்தம் உள்ள சுமார் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஒவ்வொரு ஏழை விவசாயக் குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் வீதம் வழங்குவோம்." இதற்குத்தான் நாங்கள் பதிலைக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இவர்கள், கடந்த கால அண்ணா தி.மு.க. ஆட்சியில் 55 இலட்சம் ஏக்கர் இருந்தது, 20 இலட்சம் எக்டேர் இருந்தது என்கிற

பழைய பஞ்சாங்கத்தையெல்லாம் பாடிக்கொண்டிருக்கின்றார்கள். உங்களுடைய தேர்தல் அறிக்கையில், 2006 சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே...

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல வேண்டிய கருத்தை ஒரே வரியிலே சொல்லி முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உங்களுடைய தி.மு.க. தேர்தல் அறிக்கையில், 2006-ல் நடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் நீங்கள் மக்களுக்கு அளித்த வாக்குறுதி என்ன? அதை நீங்கள் நிறைவேற்றுவீர்களா, நிறைவேற்ற முடியாதா என்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதற்குரிய பதிலை நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான நிலங்களை முதல்வர் கலைஞர் அவர்கள், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிச்சயமாக, கண்டிப்பாகக் கொடுப்பார். அதிலே எந்தச் சந்தேகமும் கிடையாது. (குறுக்கீடு) அரசுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு என்பதைத்தான் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; வழங்குவார்கள், கண்டிப்பாகக் கொடுக்கப்படும். மீதமுள்ள நிலங்களை அங்கிருக்கிற ஏழைகளுக்குத்தான், அதையும் பண்படுத்திக் கொடுப்பார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது தேர்தல் அறிக்கைகள் என்பவை—வழக்கமாக வாக்களித்த வாக்காளர்கள் கையில் இருக்கின்ற மை காய்வதற்கு முன்னாலே மறக்கப்பட்டுவிடக்கூடிய ஒரு அறிக்கைதான் தேர்தல் அறிக்கை. ஆனால்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதி காக்க வேண்டும். அமைதியாக இருங்கள். உறுப்பினர் பேசும்போது அமைதியாக இருக்க வேண்டும் முதலில். ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது எழுந்திருக்காதீர்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்**: ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள் தயாரித்த தேர்தல் அறிக்கை, இன்று கிருஸ்துவர்கள் பைபிளை எடுத்துச் செல்வதைப்போல, இஸ்லாமியர்கள் குரானை எடுத்துச் செல்வதைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) இந்துக்கள் பகவத் கீதையை எடுத்துச் செல்வதைப்போல, நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தினசரி கையில் அந்தத் தேர்தல் அறிக்கையோடு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவைக்கு வருவது, இந்தத் தேர்தல் அறிக்கைக்கு எவ்வளவு பெரிய தாக்கம் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு ஆரோக்கியமான விவாதம். வரக்கூடிய நாட்களிலும் ஒவ்வொரு நாளும் நீங்கள் இந்தத் தேர்தல் அறிக்கையை உங்களோடு எடுத்து வந்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிக்கையிலே இருப்பதைப் பற்றியெல்லாம் நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதைச் செய்வதற்குத் தோதாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குவது என்பது, ஒரு 5,000 ஆண்டு காலமாகத் தொடர்ந்து நடந்து வருகின்ற ஒரு இயக்கம். மேற்கு வங்க மாநிலத்திலே ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சி, இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, அது ஒரு அற்புதமான தத்துவம். பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு, ஏகபோக முதலாளிகளுக்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பன்னாட்டு நிறுவனங்களுக்கு, ஏகபோக முதலாளிகளுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்கிற உணர்வை மாற்றி, நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடு, இடையூறு இருக்கக்கூடாது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** உணர்வுதான் முக்கியமேயொழிய— ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இதிலே நிலம் என்பது இறைவன் கொடுத்த வரம். அதை யாரும் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. தமிழகத்திலே இத்தனை இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்பது, இந்த அரசு நினைத்தாலும் சரி, எந்த அரசு நினைத்தாலும் சரி, அந்த

நிலத்தை ஒரு ஏக்கர் அளவுகூட கூட்ட முடியாது. ஆனால் நாம் என்ன செய்யலாம் என்று சொன்னால், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தன் தொகுதிக்குள் இருக்கின்ற தரிசு நிலத்தைப் பற்றிய விவரங்களை அரசினுடைய பார்வைக்குக் கொண்டு வந்து, அந்த நிலத்தை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலே முதலில் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த விவாதத்தை இதோடு முடித்துவிட்டு, ஏழைகளுக்கு இலவசமாக 2 ஏக்கர் நிலம் வழங்குவோம் என்பதோடு நிறைவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் குறிப்பிட்டதைப் பற்றிக் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். என் கையிலே இருப்பது, அ.தி.மு.க.வினுடைய நிதிநிலை அறிக்கை, 2001–2002. அதிலே அன்றைய மாண்புமிகு நிதியமைச்சர் திரு. பொன்னையன் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், "பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வரும் 5 ஆண்டு காலத்திற்குள் மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்னும் மிகப் பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டம் ஒன்றை ஏற்கெனவே அறிவித்துள்ளார்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் கடந்த கால ஆட்சியிலே செய்யாத காரணத்தால், தி.மு.க. ஆட்சியிலே, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்தத் தரிசு நிலங்களை எடுத்து, பண்படுத்தி, நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுப்போம் என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னோம். நிதிநிலை அறிக்கையிலேயும் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு)

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) நீங்கள் அடிக்கடிக் குறுக்கிடுகிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of clarification. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லட்டும். நீங்கள் முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் கருத்தைச் சொல்லட்டும். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் கருத்தைச் சொல்லட்டும், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாடு குறித்து, கடைசியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தினுடைய நிதிநிலை அறிக்கையில், *(குறுக்கீடு)* நான் நிதிநிலை அறிக்கையில் உள்ளதைச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து கொஞ்சம் அமைதியாகக் கேளுங்கள். அந்த நிதிநிலை அறிக்கையில் நீங்கள் சொல்லியது, 50 இலட்சம் ஏக்கர் நிலத்தை... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதி காக்க வேண்டும். சும்மா கத்தி பிரயோசனம் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றுவதற்கு முயற்சி எடுப்போம் என்று சொன்னார்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், இன்னொரு உறுப்பினர் பேசும்போது எதற்கு நீங்கள் எழுந்திருக்கிறீர்கள்? உட்காருங்கள் முதலில்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான விஷயம் இது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புக் கொடுப்போம், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றிய ஒரு முக்கியமான விவாதம் நடந்தது. இந்த விவாதத்தின்மீது, அந்த நிலங்களை யாருக்கு அளிக்கப் போகிறீர்கள், தனியார் முதலாளிகளுக்கு, பெரும் முதலாளிகளுக்கு, வெளிநாட்டு முதலாளிகளுக்கு அளிக்கப் போகிறீர்களே என்று இந்த அவையிலே நாங்கள் கேட்டோம். எங்களது மூத்த உறுப்பினராக இருந்த, மார்க்சிஸ்டு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் அதை வலியுறுத்திக் கேட்டார். கேட்டபொழுது, அன்றைய உங்களது முதலமைச்சர்,

முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்னது. ஹேமச்சந்திரன் எதைக் கேட்டாலும் நான் பதில் சொல்ல மாட்டேன் என்று இந்த அவையிலேயே அவர் சொன்னார். ஆகவே, தரிசு நிலத்தைப் பற்றியே பேசுவதற்கு அனுமதி அளிக்காதவர்கள், இப்பொழுது தரிசு நிலம் வேண்டும் என்று கேட்கிறீர்கள் என்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது என்று அன்றைய அரசு அறிவித்த நேரத்தில், அன்றைய முதலமைச்சரை, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அன்றைய மாநிலச் செயலாளர் நல்லக்கண்ணு அவர்களும், மற்ற தலைவர்களும் நேரடியாக இதே கோட்டையிலே முதலமைச்சரை நேரில் சந்தித்து, "அந்த நிலங்களை ஏழை எளிய மக்களுக்கு நீங்கள் பிரித்துக் கொடுக்க வேண்டும், அவர்கள் பெரும் பகுதி உங்களுக்கு ஆதரவாக இருக்கிற ஏழை மக்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அந்த நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குங்கள்" என்று கோரியபோது, "இந்தக் கொள்கையை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. ஆகவே, உங்கள் கொள்கைக்கும், எனது கொள்கைக்கும் மாறுபாடு இருக்கிறது. ஆகவே, நாங்கள் பெரும் ஆலை அதிபர்களுக்குக் கொடுத்து, பண்ணைகளை உருவாக்கி, கூலி விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலை கொடுப்போம்" என்று பேசிய அ.தி.மு.க., அன்றைய முதலமைச்சர், இன்றைக்கு அண்ணா தி.மு.க. நண்பர்கள், தரிசு நிலங்களைப் பற்றி இவ்வளவு அக்கறையோடு பேசுகிற அ.தி.மு.க. உறுப்பினர்கள், உங்கள் ஆட்சிக் காலத்திலே எடுத்த நிலை என்ன என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இந்த அவைக்கு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே தனியார் முதலாளிகளுக்கு, பெரும் பண்ணைகளை வைப்பதற்கு நிலம் ஒதுக்க இருந்ததைத் தடுத்து, இன்றைய முதல்வர்

அவர்கள், ஏழை எளிய மக்களுக்கு நிலங்களை வழங்க முன் வந்திருக்கிறார்கள். அதைத் தடுக்க நினைப்பது அண்ணா தி.மு.க. என்பதையும், அதே சமயத்திலே, இந்தத் தரிசு நிலங்களை ஏழை எளிய மக்களுக்குக் கொடுப்பதை யார் தடுத்தாலும் மக்கள் சும்மா விடமாட்டார்கள். இந்தத் தரிசு நிலங்களை, (குறுக்கீடுகள்) கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே எங்களை எல்லாம் பேச விடாமலேயே செய்தீர்கள். கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் பேச விடாமலேயே செய்தீர்கள். இப்பொழுதும் எதிர்க்கட்சியிலே இருந்தும் எங்களைப் பேசவிடாமல் தடுக்கிறீர்கள். நியாயமா இது? நாங்கள் சொல்ல வருவதைக் கேளுங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) நாங்கள் சொல்ல வருவதை முதலிலே கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இந்தத் தமிழக மக்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலங்களைக் கொடுப்பதற்கு ஆதரவாக இருக்க வேண்டுமே தவிர, எதிரியாக இருக்கக்கூடாது. ஏழைகளை வாழ வைப்பதற்கான நல்ல திட்டங்களைக் கொடுக்கிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உறுதுணையாக இருங்கள், எதிரியாக இருக்காதீர்கள் என்று சொல்லி, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து மூன்று மாதங்கள்கூட இன்னும் ஆகவில்லை. அதற்குள் அது என்ன ஆகிவிட்டது, இது என்ன ஆகிவிட்டது என்று கேட்கிறீர்கள். கேட்க உரிமை உண்டு. ஆனால் நான் ஒன்றே ஒன்று மட்டும் கேட்கிறேன். உங்கள் ஆட்சிக் காலத்திலே, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டித் தருவோம் என்று சொன்னீர்களே, ஐந்தாண்டு காலத்திலே எத்தனை குடும்பத்திற்குக் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன். (குறுக்கீடுகள்) பேசுகிறீர்களா? சரி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம்

2006 ஜூலை 28] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) முதலில் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) அதுதான் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன் அல்லவா? நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு ஒரு மிக முக்கியமான பிரச்சினை பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அரசியல் கட்சிகளுக்கு வாடிக்கையாகப் போய்விட்டது, தேர்தல் மை உலர்வதற்கு முன்னாலேயே தேர்தல் வாக்குறுதிகளை யாரும் நிறைவேற்றுவதில்லை என்ற கருத்தினை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அவர் சார்ந்திருக்கின்ற கட்சிக்கும், அவரோடு கூட்டணியில் இருக்கின்ற கட்சிகளுக்கும்தான் அது பொருந்துமேயொழிய, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதையும் சொல்லி செய்யாமல் விட்டதில்லை என்பதை நான் இந்தச் சட்டமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது சொன்னதுபோல, தரிசு நிலங்களைப் பண்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் கொடுக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையிலே இருந்தால் நாங்கள் யாருமே எதுவும் சொல்லமாட்டோம். ஆனால், அவர்கள் specific-ஆக 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்குரிய கணக்கைத்தான் நாங்கள் இன்றைக்குக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அதைக் கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறார் அல்லவா? உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா? யாரும் எழுந்து நிற்கக்கூடாது. உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்

அவர்கள் ஒரு வினாவை இங்கே எழுப்பியிருக்கிறார். நம்முடைய அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் எடுத்துச் சொன்ன அதே கருத்தைத்தான், அதே ஆதாரத்தைத்தான் நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகின்றேன், ஆனால் சற்று வித்தியாசமாக. 2001—2002, அதாவது ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நிதிநிலை அறிக்கை—நிதி மற்றும் சட்ட அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை. ஆவணி 2, திருவள்ளுவர் ஆண்டு 2032, 2001 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள். அதில், "இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிலவுகின்ற தட்பவெப்ப மண்டலங்களுக்கேற்ப வேளாண் நிலப் பயன்பாட்டின் உத்தியை மாற்றியமைத்து, வேளாண் தொழிலை மேம்படுத்த வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது. இம்மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பின் 43 சதவீதப் பகுதி தற்போது சாகுபடியில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் எக்டேர்"—எக்டேர் என்றால் 2½ ஏக்கர், அதாவது 50 இலட்சம்—"20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்னும் மிகப் பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டம் ஒன்றை ஏற்கெனவே அறிவித்துள்ளார். இத்திட்டம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதோடு, மக்களின் பங்கேற்புடன் நுண்ணிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் பணியையும் உள்ளடக்கியதாக இருக்கும்" என்று சொல்லியிருக்கிறார். 20 இலட்சம் எக்டேர் என்பது 50 இலட்சம் ஏக்கர் என்பது அனைவருக்கும் தெரியும். நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், இப்பொழுது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நீங்கள் 50 இலட்சம் ஏக்கர் என்று சொன்னீர்களே, அது இப்போது எங்கே என்று கண்டுபிடித்து விட்டீர்களா என்று கேட்கிறார். முடிந்தால், அவர்கள் விரும்பினால், முன்னாள் முதலமைச்சரிடத்திலே கேட்டு, இந்த 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்கள் எங்கே இருக்கின்றன என்று அறிந்து, அவற்றை மேம்படுத்த இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

*முற்பகல் 10—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு என்ன இருக்கிறது நீங்கள் சொல்வதற்கு? *(குறுக்கீடு)* சரி, சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய 2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் "20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களைப் படிப்படியாகப் பண்படுத்தி, விளைநிலங்களாக மாற்றுவோம்" என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஐந்தாண்டு காலம் அதற்குரிய பணிகளும் நடைபெற்றிருக்கின்றன. நாங்கள் அதற்குரிய புள்ளிவிவரங்களை, 5 ஆண்டு காலத்தில் எவ்வளவு தரிசு நிலங்களை நாங்கள் பண்படுத்தியிருக்கின்றோம், விளை நிலங்களாக மாற்றியிருக்கின்றோம் என்ற புள்ளிவிவரங்களை நாங்கள் தருவதற்குத் தயாராக இருக்கின்றோம், ஒன்று.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அப்படிப் பண்படுத்தியதையும், பண்படுத்த வேண்டியதையும் சேர்த்துத்தான் நாங்கள் ஏழையெளிய, நிலமற்ற விவசாயிகளுக்குத் தருவதாக வாக்களித்தோம். அது எங்களுடைய ஆசையாக இருக்கலாம். ஆனால் நீங்கள் இப்படி ஒரு தவறான புள்ளிவிவரத்தை நிதிநிலை அறிக்கையிலே தருவீர்கள் என்று நாங்கள் கனவிலும் கருதவில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலம் என்பது அரசு நிலம், அரசுப் புறம்போக்கு, தனியார் நிலங்கள் உட்படத்தான் 20 இலட்சம் எக்டேர் என்பதை, அன்றைக்கே அந்த நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தின்போதே நாங்கள் கூறியிருக்கின்றோம். ஆனால் இன்றைக்கு நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற விவாதமே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலில், அவர்களுடைய தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, வருகின்ற தேர்தலில் வெற்றி பெற்று நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்தத் தேர்தல் அறிக்கை 2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையாக இருக்குமென்று சொன்னார்கள். அதற்காகத்தான் நாங்கள் இன்றைக்குக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்த 55 இலட்சம் ஏக்கர் நிலங்களை 2 ஏக்கர் வீதம் ஏழை மக்களுக்குக் கொடுக்கப் போகின்றீர்களா, இல்லையா என்பதைத்தான் கேட்கின்றோம். அதற்குரிய பதில்தான் தேவை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்படி ஒரு தவறான புள்ளிவிவரத்தை, ஒரு தரமான சர்க்கார் என்று தன்னைச் சொல்லிக்கொண்ட அரசு தரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. தந்துள்ளது. என்ன செய்வது? அதனால்தான் ஏழையெளியவர்களுக்குத் தருகின்ற அந்த நிலம் அரசுக்குச் சொந்தமாக

இருந்தால், அதை 2 ஏக்கர் என்று பிரித்துக் கொடுப்பது என்றும், அப்படி அரசுக்குச் சொந்தமாக இல்லாமல் நிலமற்ற விவசாயிக்கே உரியதாக இருந்தால், அதைப் பண்படுத்தி, அவர்களுக்கே தருவது என்றும் சுய மரியாதை கலந்த பொதுவுடைமைத் தத்துவத்தோடு அந்தத் தேர்தல் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அருண்மொழிதேவன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அருண்மொழிதேவன். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் நிறையப் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) தெளிவான விளக்கம் சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகும் என்ன விளக்கம் வேண்டும் [illegible] றுப்பினர் அருண்மொழிதேவன். (குறுக்கீடு) [illegible] காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, [illegible]கள் சொல்[illegible] 20 [illegible] லட்சம் எக்டேர் நிலங்களைப் பண்படுத்தி. [illegible]னால் தி.மு.க. [illegible] றிக்கையில் சொன்னது, 55 இலட்சம் ஏக்கர் நிலங்களை 2 ஏ[illegible] [illegible] ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்போம் என்பது. அதாவது, 55 இலட்சம் ஏக்கர் நிலம் இருந்தால்தான் 2 ஏக்கர் வீதம் கொடுக்க முடியும். அதைத்தான் நாங்கள் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். எங்கே இருக்கின்றது 55 இலட்சம் ஏக்கர் நிலம் என்றுதான் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எங்கே இருக்கிறது 55 இலட்சம் ஏக்கர் நிலம் என்று கேட்கிறார். இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே படித்த பொன்னையன் இப்போது எங்கே இருக்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அருண்மொழிதேவன். (குறுக்கீடு) உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அருண்மொழிதேவன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் நிறைய நேரம் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இனி விளக்கம் தேவையில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) முதல்வரே நிறைய விளக்கம் சொல்லிவிட்டார். உட்காருங்கள். (குறுக்கீடு)

2006 ஜூலை 28]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதற்கு நான் விளக்கம் கேட்க வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருண்மொழிதேவன், நீங்கள் பேசுகிறீர்களா; அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லவா? (குறுக்கீடு) நீங்கள் நான்கு முறை எழுந்திருந்து விளக்கம் கேட்டுவிட்டீர்கள். இதற்குப் பிறகும் என்ன விளக்கம் நீங்கள் கேட்க வேண்டும்? உங்களுடைய உறுப்பினர்தான் பேசப் போகிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலத்தில் நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தோம். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஓர் உறுப்பினருக்குப் பதில் சொல்லிவிட்டால் மறுபடியும் நாங்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அதற்கு எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பே அளித்ததில்லை. (குறுக்கீடு) இருந்தாலும், தாங்கள் இவ்வளவு பெருந்தன்மையோடு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவருக்கு 4 முறை வாய்ப்புக் கொடுத்ததற்குப் பின்னரும்கூட, முதலமைச்சர் தெளிவான விளக்கத்தைத் தந்ததற்குப் பிறகும்கூட, மீண்டும், மீண்டும் அதைப்பற்றியே பேசுவது, இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்குவதாகும். இந்த அவையினுடைய அலுவல்கள் தொடர்வதற்குத் தாங்கள்தான் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

முற்பகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

*__திரு. ஆ. அருண்மொழிதேவன்:__ பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் முதலமைச்சர்களாக மக்களாட்சி நடத்திய இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தமிழகச் சட்டசபையில், இந்த உண்மைத் தொண்டனுக்கு, சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றி பெறச் செய்ய வைத்து, இன்றைக்குப் பேச வாய்ப்பளித்து எங்களை வழிநடத்திக்கொண்டிருக்கின்ற எங்களது அன்னை, தன்னுடைய தர்மத்தாலும், தான் செய்த சாதனைகளாலும் இன்றும் தமிழக மக்களின்

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம், மனிதருள் புனிதர், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசியல் வாரிசு, ஓய்வறியா உழைப்பாளி, சோதனைகளைச் சாதனைகளாக மாற்றி, தன்னுடைய உழைப்பால் தமிழக மக்களுடைய நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்து, இன்றைக்குத் தமிழக மக்களுடைய பெரும்பாலான வாக்குகளைப் பெற்று, தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவராக, பகைவர்களுக்குச் சுடு தணலாக, ஏழை, எளியவர்களுக்குக் குளிர் நிழலாக, தமிழ்நாட்டு மக்களுக்குத் தாயாக என்றைக்கும் திகழும் எங்களுடைய அன்னை, இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, கடலூர் மாவட்டத்திலே உள்ள ஒன்பது சட்டமன்றத் தொகுதிகளிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்திலே என்னை வெற்றி பெற வைத்த சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளர்களுக்கும், உழைத்த ஜனநாயக மக்கள் கூட்டணியைச் சேர்ந்த அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முதற்கண், கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளை, ஒரு சிலரின் ஆதாயத்திற்காகத் தனியாருக்கு விற்கும் மத்திய அரசின் முடிவை முறியடித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கடலூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், அனைத்துத் தொழிலாளர்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். Please, உட்காருங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இது ஒரு மணல் கோட்டை, கடலிலே பெய்கின்ற மழை, காட்டிலே வீசுகின்ற நிலவொளி. சட்டமன்றத் தேர்தலிலே நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொண்ட தேர்தல் அறிக்கையைச் சொல்லி, மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த இந்தச் சிறுபான்மை அரசு, அதே formula–வைப் பயன்படுத்தி, இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதுபோல, ஒரு கானல் நீர் பட்ஜெட்டை உள்ளாட்சித் தேர்தலை மனதில் கொண்டு தாக்கல் செய்திருப்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கலர் டி.வி. குறித்துப் பல விவாதங்கள் நடைபெற்று முடிந்த நிலையிலே, பொது மக்களுடைய கருத்துகளை இந்த அவையிலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்தில் கலர் டி.வி. இல்லாதவர்கள் கோடிக்கணக்கான பேர் இருக்கின்றபோது, அனைவருக்கும் தருகிறோம் என்று சொல்லிவிட்டு, பட்ஜெட்டிலே வெறும் 30 ஆயிரம் பேருக்கு முதல் கட்டமாக வழங்கப் போகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் இன்றைக்கு என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று சொன்னால், தேர்தல் சமயத்திலே தி.மு.க.வின் சார்பில் ஒட்டப்பட்ட போஸ்டர்களிலே 21 இஞ்ச் கலர் டி.வி. வழங்குவதுபோலப் படத்தை அச்சிட்டு வெளியிட்டுவிட்டு, இப்பொழுது 14 இஞ்ச் டி.வி. தருகிறோம் என்று சொல்கிறார்களே, அதிலும் முதல் கட்டமாக 30 ஆயிரம் பேருக்கு மட்டும் தருகிறோம் என்று சொல்கிறார்களே, பட்ஜெட்டிலே தெளிவாக, தொடர்ந்து எப்படிக் கொடுக்கப்படும், எவ்வளவு நாட்களுக்குள் கொடுக்கப்படும் என்று சொல்லவில்லையே என்கிற ரீதியிலே, இது எப்போது கிடைக்கும், இது என்ன ஏமாற்று வேலை என்று மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. சென்ற தி.மு.க. ஆட்சியிலே சமத்துவபுரங்களிலே வீடுகள் ஒதுக்கப்பட்டபோது, தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மட்டும் வீடு ஒதுக்கப்பட்டது. அந்த வகையிலே இப்பொழுது பட்ஜெட்டிலே, சமத்துவபுரங்களில் உள்ளவர்களுக்கு முதல் கட்டமாக கலர் டி.வி. வழங்கப்படும், வழங்கப்படும் என்று இரண்டு, மூன்று category–களிலே சொல்லியிருந்தாலுங்கூட, சமத்துவபுரங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து பட்ஜெட்டிலே அறிவித்திருப்பதை மாற்றி, தி.மு.க. உறுப்பினர் அட்டை

...ளவர்களுக்கு மட்டும் கலர் டி.வி. வழங்கப்படும் என்று அறிவித்திருந்தால், அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, (குறுக்கீடு) தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்தது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 10—40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ சமத்துவபுரங்களிலே இருக்கின்றவர்களெல்லாம் தி.மு.க. உறுப்பினர்கள் என்று குறிப்பிடுகிறார். (குறுக்கீடுகள்) நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். அங்கேயிருக்கக்கூடிய ஐயர், ஐயங்கார் எல்லாம் தி.மு.க.—விலே உறுப்பினர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே இருக்கக்கூடிய 30 சதவிகிதம் பேர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களா? எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு சட்டமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், எந்தத் தி.மு.க. அமைச்சரும் தலையிட்டு அந்த வீடுகளை ஒதுக்கவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் வீடுகளைத் தேர்வு செய்தார்கள். அ.தி.மு.க. ஆட்சியிலேதான் மத்திய அரசு கொடுத்த 1,000 கோடி ரூபாயை ஆளுங்கட்சிக்காரர்களுக்கு சென்னையிலே, வீட்டுக்கு ரூ.2,000 கொடுத்தீர்களே தவிர, அதைப்போல தி.மு.க. ஆட்சி என்றைக்கும் செய்யாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். அருண்மொழிதேவன், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) இராமன் (குறுக்கீடு) இராமன், உட்காருங்கள் (குறுக்கீடு) உறுப்பினர் இராமன், உட்காருங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். இராமன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** எப்படி வீடு ஒதுக்கப்பட்டது என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சியிலே தமிழகம் அமைதிப் பூங்காவாகத்

திகழ்ந்துகொண்டிருந்தது. சமூக விரோதிகள் அழிக்கப்பட்டு, ரவுடிகள் ஒழிக்கப்பட்டு, கட்டப் பஞ்சாயத்து ஒழிக்கப்பட்டு, அன்றைக்குக் கள்ளச்சாராயத்தை அறவே ஒழித்து, தமிழகத்தினுடைய அனைத்துத் தரப்பு மக்களும் அமைதியாக வாழ்ந்துகொண்டு இருக்கின்ற ஒரு சூழ்நிலை இந்த ஆட்சி பொறுப்பேற்ற நாளே மாறி, இன்னும் சொல்லப் போனால், வாக்கு எண்ணிக்கை முடிகின்ற நேரத்திலே, தி.மு.க. வெற்றி பெறப் போகிறது, ஆட்சி அமைக்கப் போகிறது என்ற சூழ்நிலை உருவானவுடனேயே, சமூக விரோதிகள் தலையெடுக்க ஆரம்பித்து, அன்றைக்குத் தமிழகத்தில் கள்ளச்சாராயம் ஆறாக ஊற்றெடுக்க ஆரம்பித்து, இந்த அறுபது நாட்களிலே ஆறாக ஓடிக்கொண்டிருக்கிற அவல நிலையை இந்த மன்றத்தின் வாயிலாகச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கடுமையான வறட்சி; முதல் 2, 3 ஆண்டு காலங்களிலே கடுமையான வறட்சி. அதற்குப் பிறகு யாருமே கேள்விப்பட்டிராத சுனாமி. பிறகு, கடும் வெள்ளம். இப்படிப்பட்ட இயற்கைப் பேரழிவுகள். கடுமையான வறட்சியைத் தன்னுடைய நிர்வாகத் திறமையால் சமாளித்து, மக்களைக் காத்து, யாருமே கேள்விப்பட்டிருக்காத சுனாமியை எதிர்கொண்டு, பல தலைவர்கள் சுனாமி என்று சொன்னவுடன் மாடிகளை நோக்கி ஓடிய நேரத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று, மக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு, இன்றைக்கு சுனாமி என்ற சுவடே தெரியாத நிலையிலே சுனாமியை விரட்டியடித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிறகு தொடர்ந்து பெய்த கன மழை. கன மழை என்று சொன்னால், இங்கே நாம் தலைமுறை, தலைமுறையாகப் பார்த்திராத மழை. இன்னும் சொல்லப் போனால், எங்களுடைய கடலூர் மாவட்டம் தமிழகத்திலேயே அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அம்மா அவர்கள் நேரடியாக, பாதிக்கப்பட்ட அந்த இடங்களுக்குச் சென்று, நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு, இன்றைக்கு இந்தியாவில் எந்த ஒரு மாநில அரசும் வழங்காத நிவாரணத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட இயற்கைப் பேரழிவுகளுக்கிடையே, தமிழ்நாடு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மின் வெட்டே இல்லாத ஒரு மாநிலமாகத் திகழ்ந்துகொண்டிருந்தது. மின் வெட்டு என்றால் என்ன என்று கேட்கின்ற அளவிலே மக்கள் இருந்த நிலை மாறி, இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன், அறிவிக்கப்படாத மின் வெட்டு நாள்தோறும் நடந்துகொண்டு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதோடு மட்டுமல்ல, விவசாயிகளுக்கு மின்சாரத்தைத் தொடர்ந்து நாள்தோறும் 24 மணி நேரமும் அம்மா அவர்கள் வழங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் விவசாயத்திற்கு வழங்கக்கூடிய மின்சாரம், முறை போட்டு ஒரு வாரத்திற்கு காலை 6 மணி முதல் 12 மணி வரை; மறு வாரத்திற்கு 12 முதல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தரக்கூடாது. முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் அங்கே உட்கார்ந்துகொண்டு இருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சியிலே விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மின்சார பம்புசெட்டுகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டதா என்பதை அவர்தான் தெளிவுபடுத்த வேண்டும். ஏனென்றால், ஒவ்வோர் ஆண்டும் வரவு—செலவுத் திட்டத்திலே மின்சார வாரியத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், விவசாயிகளுக்குப் பகலிலே எவ்வளவு மின்சாரம் தரப்படும், இரவு நேரத்திலே எவ்வளவு மின்சாரம் தரப்படும் என்பது நம்முடைய சபைக் குறிப்புகளிலே இருக்கிறது. அதெல்லாம் தெரியாமல், ஏதோ 24 மணி நேரமும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அம்மா ஆட்சியிலே தரப்பட்டதுபோலப் பேசுவது ஒரு கற்பனை. தயவுசெய்து உண்மைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த subject-க்குப் போங்கள், அருண்மொழிதேவன். *(குறுக்கீடுகள்)* அருண்மொழிதேவன், அடுத்த subject—க்குப் போங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** நான் உண்மையைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று இதைப் பற்றி நிறையப் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) அடுத்த subject–க்குப் போங்கள்.

*முற்பகல் 10–45*

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மேலும், இன்றைக்கு டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்துவிட்டால், சம்பந்தப்பட்ட மின்சார வாரிய ஊழியர்களிடத்திலே, அதிகாரிகளிடத்திலே உடனடியாகத் தெரியப்படுத்தினாலுங்கூட, மாதக் கணக்கிலே (குறுக்கீடு)—நான்கூட எனது தொகுதியிலே இரண்டு இடங்களிலே டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்து, சம்பந்தப்பட்ட.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** அதிகாரிகளிடத்தில் நானே நேரில் முறையிட்டும்கூட, மாதக் கணக்கில் ஆகியும்கூட, இன்னும் அந்த டிரான்ஸ்பார்மர்கள், எங்களுடைய தொகுதியில் மட்டுமல்ல; தமிழகம் முழுவதிலும் மாற்றிக் கொடுக்கப்படாத நிலையிலே, இப்பொழுது விவசாயிகள் படுகின்ற வேதனையை இந்த அவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது கூட்டுறவு வங்கியிலே மறு கடன் வழங்கப்படாத நிலையிலே—பெரும்பாலான வங்கிகளிலே இன்னும் மறு கடன் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. அப்படி வழங்கப்படாத நிலையிலே—விவசாயிகள் தங்களுடைய கரும்புகளை வெட்டிக் கரும்பாலைகளுக்கு அனுப்பி, அதிலிருந்து கூட்டுறவு வங்கிகளுக்கு வரக்கூடிய தொகையை—பல கூட்டுறவு வங்கிகளிலே, குறிப்பிட்டுக்கூட என்னால் சொல்ல முடியும்—தங்களுடைய பணத்தைக் கரும்பு விவசாயிகள் எடுக்கப் போகின்ற சூழ்நிலையிலே, பல கூட்டுறவு வங்கிகளிலே, 'உங்களுடைய பணம் deposit செய்யப்பட்டிருக்கின்றது. மேலேயிருந்து அறிவிப்பு வந்தவுடன் கொடுக்கவிருக்கிறோம்' என்று சொல்லி இழுத்தடிப்புப் பதில்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் கரும்பு விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைத் தொடர முடியாமல்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். விவரமாக எழுதித் தந்தால் நிச்சயமாக யாராக இருந்தாலும், அவர்கள்மீது உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத்தான் அறிவித்திருக்கிறார்கள். அதன்படி இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** 5 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருண்மொழிதேவன், சீக்கிரம் முடிக்க வேண்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** 5 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். உங்களுடைய கொறடாவிடம் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, மத்திய அரசாங்கம் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வந்தது. அந்த நடைமுறைச் சட்டத்திலே திருத்தம் என்பது, ஏழையெளிய பாமர மக்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிடும் என்ற காரணத்தினால், தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கக்கூடிய அனைத்து வழக்கறிஞர் பெருமக்களும் வேலைநிறுத்தம் போன்ற செயல்களிலே ஈடுபட்டுக் கடுமையாக எதிர்த்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, ஒட்டுமொத்த மக்களும் ஆதரவு தருகின்ற வழக்கறிஞர்களுடைய பிரச்சினைக்காக, அம்மா அவர்கள் வழக்கறிஞர்களை அழைத்து, 'இங்கே ஏழையெளிய மக்களைப் பாதிக்கக்கூடிய சட்டத்தை மத்திய அரசாங்கம் அமல்படுத்தச் சொன்னாலுங்கூட, நான் அமல்படுத்தமாட்டேன்; நடைமுறைப்படுத்த மாட்டேன்' என்று அறிவித்தார்கள். ஆனால், இப்பொழுது மத்திய அரசாங்கம் மீண்டும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வந்து கிட்டத்தட்ட 12 அம்சங்களை, இந்தியாவில் இருக்கின்ற, இன்னும் சொல்லப் போனால், தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து வழக்கறிஞர்களும் எதிர்த்து, 'அவற்றை

நடைமுறைப்படுத்தக்கூடாது; நடைமுறைப்படுத்தினால் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள்' என்ற ஒரு கருத்தை வலியுறுத்தி, வேலைநிறுத்தம், தொடர் வேலைநிறுத்தம், மதுரையிலேகூட தொடர்ந்து 14 நாட்களாக வேலைநிறுத்தம் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** நான் பேசி இன்னும் 10 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** இப்படி அம்மா அவர்கள் அன்றைக்குத் துணிச்சலோடு அறிவித்தார்களே, இந்த மத்திய அரசாங்கத்தினுடைய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தினுடைய திருத்தத்திலே இந்த அரசினுடைய நிலையை—ஏனென்று சொன்னால், பல நீதிமன்றங்களிலே வழக்கறிஞர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால், பணி நடைபெறாமல், நீதி கிடைப்பது தாமதப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. வழக்கறிஞர்கள் மட்டுமல்ல; பொது மக்களும் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே இது பற்றி, இந்த அரசினுடைய நிலையை—இந்த அவையின்மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தன்னுடைய வழக்கமான பணியான, குறிக்கோளான, பழிவாங்குகின்ற போக்கினைத் தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நமது அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே, அண்ணா தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் பணி வழங்கப்படாமல், இப்பொழுது அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 4 அல்லது 5 duty-கள் மட்டுமே கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே—ஏனென்று சொன்னால், பணிக்கு என்றைக்குச் செல்கிறார்களோ, அந்த நாளுக்குத்தான் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்குமே தவிர, பணிக்குச் செல்லாத நாளிலே அவர்களுக்கு ஊதியம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை—பல குடும்பங்கள் இப்பொழுது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. என்னுடைய சிதம்பரம் தொகுதியிலே இருக்கின்ற இரண்டு துணைக் கிளைப் பணிமனைகளிலேகூட, கிட்டத்தட்ட 100 தொழிலாளர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த உறுப்பினரை அழைக்கப் போகிறேன். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாதம் 4 அல்லது 5 duty-கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, கிட்டத்தட்ட 12,147 திருக்கோயில்களை, ஆதி திராவிடர் காலனிகளிலே உள்ள திருக்கோயில்களைச் சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. பல கோயில்களில் திருப்பணி நடைபெற்று முடிக்கப்பெற்றிருக்கின்றது. சில கோயில்களிலே இன்னும் பணி தொடங்கப்படாத நிலைகூட உள்ளது. அதேபோல, திருக்கோயில்களில் உள்ள திருத்தேர்களைப் புதுப்பிப்பதற்கு அம்மா அவர்கள் அன்றைக்கு உத்தரவிட்டு நிதி ஒதுக்கியிருந்தார்கள். அந்தப் பணிகளெல்லாம் தொடர்ந்து நடைபெறுமா, நடைபெறாதா என்ற கேள்வி மக்கள் மத்தியிலே எழுந்திருக்கின்றது. பட்ஜெட்டிலும் அது பற்றிக் குறிப்பிடவில்லை. அதைப் பற்றி இந்த அவையின்மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, சமீபத்தில் பெய்த பெருமழையால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டம். கிட்டத்தட்ட 10 மாவட்டங்களில் பெய்யக்கூடிய மழை, வீராணம் ஏரியினுடைய வடிகால் நீர், வெள்ளாறு, மணிமுத்தாறு, கொள்ளிடம், கெடிலம், பெண்ணையாறு போன்ற ஆறுகளிலிருந்து வருகின்ற நீர், கடலில் கலக்கின்ற பகுதியாக உள்ளதால், கடலூர் மாவட்டம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது.

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** விவசாய நிலங்களும், வீடுகளும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு, இன்றைக்கு ஆற்றினுடைய வரைபடத்தையே—குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடலூர் மாவட்டத்தினுடைய வெள்ளாறு, இந்த வெள்ளாற்றினுடைய வரைபடத்தையே—வரைபடத்திலே அந்த ஆற்றினுடைய அமைப்பையே மாற்றக்கூடிய நிலையிலே அந்த மாவட்டம் பாதிக்கப்பட்டது. ஆனால், பாதிக்கப்பட்ட மாவட்டம் என்ற முறையிலே, கடலூர் மாவட்டத்திற்கென்று, வெள்ள நிவாரணப்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பணிகளுக்கென்று, தடுப்புச் சுவர் கட்டுவதற்கோ அல்லது நிவாரணப் பணிகளுக்கென்று, கரைகளைப் பலப்படுத்துவதற்கோ இப்போது எந்தவிதமான பணமும் ஒதுக்கப்படவில்லை, குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, சென்ற பொங்கல் திருநாளிலே ஏழையெளிய மக்களுக்கு இலவச வேஷ்டி-சேலை வழங்கினார்கள். ஆனால், அன்றைக்குத் தேர்தல் அறிவிப்பு காரணமாக சில இடங்களிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கலீலூர் ரஹ்மான். (குறுக்கீடு) முடியுங்கள், முடிக்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) ஒரே வரியிலே உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மூன்று தடவை மணி அடித்துவிட்டேன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவிலே, சிதம்பரத்திலே ஒரு புறவழிச் சாலை அமைக்கின்ற பணியைத் துரிதப்படுத்த வேண்டும். சிதம்பரம் மற்றும் புவனகிரி—இது மிகவும் முக்கியமான பிரச்சினை— தொகுதிகளை உள்ளடக்கிய வெள்ளாற்றிலே கடல் நீர் உள்ளேறுவதால், 20 கிலோ மீட்டர் தூரம் ஏறுவதால், நிலத்தடி நீர் உப்பு நீராக மாறக்கூடிய சூழ்நிலையைச் சரிப்படுத்த வேண்டும்.

சிதம்பரம் தொகுதியில் ஓர் அரசு மகளிர் கல்லூரி அமைக்கப்பட வேண்டும்.

சிதம்பரம் தொகுதியிலே உள்ள ஸ்ரீமுஷ்ணம் பகுதியை, காட்டுமன்னார்கோயில் ஒன்றியத்திலிருந்து பிரித்து, அதைத் தனி ஒன்றியமாக அறிவிக்க வேண்டும்.

அருள்மிகு பூவராகச்சுவாமி திருக்கோயில் உள்ள ஸ்ரீமுஷ்ணம் பகுதி மற்றும் சென்னை மக்களுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முயற்சியிலே குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கின்ற வீராணம் ஏரி ஆகியவற்றை அழகுபடுத்தி, அவற்றைச் சுற்றுலாத் தலமாக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

இந்த பட்ஜெட்டைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொன்னதை மீண்டும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது ஒரு மணல் கோட்டை, கடலிலே பெய்கின்ற மழை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலீலுர் ரஹ்மான்... (குறுக்கீடு) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன் அவர்கள் சமத்துவபுரத்தைப் பற்றி இங்கே பேசுகிறபோது, ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். ஏதோ, சமத்துவபுரத்தில் இருக்கக்கூடியவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களில் இருந்து தேர்வு செய்திருப்பதாக இங்கே பதிவு செய்திருக்கிறார். அது தவறாகப் பதிவாகி விடக்கூடாது என்பதற்காக நான் இந்த விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். சமத்துவபுர வீடுகளைப் பொறுத்தவரையிலே, வருவாய்த் துறைமூலமாக, மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், ஆதி திராவிட நல அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டு, அதற்குப் பிறகு விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, வெளிப்படையான முறையிலேதான் தேர்வு செய்யப்பட்டு, வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன என்பதுதான் உண்மை. அது மட்டுமல்ல, அப்படி வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடியவர்களில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் இருக்கின்றார்கள். அதேபோல, பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலீலுர் ரஹ்மான். (குறுக்கீடு) திரு. இராமன், உட்காருங்கள். உறுப்பினர் பேசும்போது குறுக்கிடாதீர்கள், உட்காருங்கள். குறுக்கீடு இருக்கக்கூடாது. திரு. கலீலுர் ரஹ்மான், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. திரு. இராமன், உட்காருங்கள் நீங்கள்.

***திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய பாரம்பரியமும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க இப்பேரவையில், 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.எஸ்.எஸ். இராமன், ஒரே வார்த்தையிலே சொல்லுங்கள். ஒரே வரியிலே சொல்லுங்கள்.

***டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன் அவர்கள் பேசுகின்றபோது, சமத்துவபுரத்திலே கட்சி அடிப்படையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அது அடிப்படையிலேயே முற்றிலும் தவறான தகவல் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது விஷயமாகத் தெளிவான விவரத்தைச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கலீலூர் ரஹ்மான். (குறுக்கீடு) உட்காருங்கள். அமைச்சர் தெளிவான விவரத்தைச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் விளக்கம் சொன்னதற்குப் பிறகு வேறு ஒன்றுமில்லை. உட்காருங்கள். திரு. கலீலூர் ரஹ்மான், பேசுங்கள்.

முற்பகல் *10—55*

**திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய பாரம்பரியமும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க இப்பேரவையில் *2006—2007* ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பெருமையை சாதாரண தொண்டனாகிய எனக்குத் தந்த தமிழினத் தலைவர், முத்தமிழ்க் காவலர், வாழும் வள்ளுவர், சிறுபான்மைச் சமுதாயத்தின் இதய சூரியன், மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மிகச் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தந்த இனமானத் தலைவர் நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், தமிழகத்தின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம் இளைய தளபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் அவர்களுக்கும், எனது தொகுதிக்கு வருகை தந்து எனது வெற்றிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்த தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்த அரவக்குறிச்சி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கும், அதன் அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கின்றேன்.

தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மூன்று முத்தான திட்டங்களான, ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு விநியோகம் செய்யவும், விவசாயப் பெருங்குடி மக்களது கூட்டுறவுக் கடன்களை வட்டியுடன் ரத்துச் செய்வதற்கும், சத்துணவில் வாரம் 2 முறை முட்டைகள் வழங்கிடவும் உத்தரவைப் பிறப்பித்தார்கள்.

சட்டமன்றத் தேர்தலின்போது இதையெல்லாம் செய்ய முடியுமா, இது சாத்தியப்படாது என்று சொன்னவர்கள் உண்டு. சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு தொகுதிக்கு நன்றி சொல்லச் சென்ற என் போன்றவர்கள் தலைநிமிர்ந்து செல்லக்கூடிய வகையில், அப்படிச் சொன்னவர்கள் எல்லாம் வியக்கக்கூடிய வகையில் மூன்று திட்டங்களை இந்தத் தமிழகத்தில் அமல்படுத்தியதன்மூலம் இந்திய வரலாற்றில் எந்த மாநிலத்திலும், எந்த முதலமைச்சரும் செய்யாத சாதனையைச் சாதித்துக் காட்டிய பெருமை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

2006—2007 நிதிநிலை அறிக்கை புது வரியே இல்லாதது, தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டதையெல்லாம் நிறைவேற்றும் அளவில், தமிழகத்தை இந்திய நாட்டிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கிட அடிக்கோல் நாட்டப்பட்டுவிட்டது என்று வரவேற்றுப் பாராட்டுகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் நாங்கள் இனி தலைநிமிர்ந்து மட்டுமல்ல, நெஞ்சு நிமிர்த்தி நடக்கக்கூடிய வகையில் சாதனை படைத்திட்ட முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டி, அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

நீண்ட நாளைய இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் தலைவர்களான, கண்ணியம் மிக்க காயிதே மில்லத், மரியாதைக்குரிய அப்துல் சமத் சாகிப், பேராசிரியர் காதர் மொய்தீன், இவர்களது கோரிக்கைகள் நிறைவேறும் வகையில், தேர்தல் அறிக்கையிலே உறுதியளித்துள்ளவாறு சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்குத் தனி இட ஒதுக்கீட்டிற்கு வழிவகுத்திட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளதை வரவேற்கின்றேன். நிதிநிலை அறிக்கை, ஏழை எளிய மக்களிலிருந்து, அனைத்துத் தரப்பு மக்களும் பயன்படும் வகையில் உள்ளது என்று வரவேற்றுப் பாராட்டுகின்றேன்.

1996 முதல் 2001 வரை நடந்த தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சித் துறையில் முழுக் கவனம் செலுத்தப்பட்டது. பொது மக்களின் அடிப்படை வசதிகளுக்கான திட்டங்கள் பெருமளவில் செயல்படுத்தப்பட்டன. அந்தப் பொற்கால ஆட்சியைப்போல் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரால் ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 500 கோடி நிதி உதவி செய்து, 2,500 ஊராட்சிகளுக்குத் தலா 20 இலட்சம் ரூபாய் வழங்கி, 5 ஆண்டுகளில் 12,618 ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதை வரவேற்றுப் பாராட்டுகின்றேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும் 58 ஊராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 இலட்சம் வீதம் 5 ஆண்டுகளிலே நிதி ஒதுக்கப்படும்பொழுது, எங்களுடைய 58 ஊராட்சிகளிலே சுமார் 11 கோடியே 60 இலட்சம் ரூபாய் அந்த ஊராட்சிகளுக்கு நிதியாகத் தரப்படவுள்ளது. இதனைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதியுடன் சேர்த்துப் பார்த்தால், அறிவிக்கப்படாத, ஆனால் அவர்களுக்கு வழங்கிடும் தொகுதி மேம்பாட்டு நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிகப்படுத்தித் தர மாட்டார்களா என்று ஏக்கமுடன் இருந்தவர்களுக்குக் கிடைத்த மாபெரும் பரிசு. அதற்காக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—00

1996 முதல் 2001 வரை நடந்த தி.மு.க. ஆட்சியில் உழவர் சந்தை, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மினி பஸ் போக்குவரத்து, ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டம், வருமுன் காப்போம், சத்துணவில் வாரம் ஒரு முட்டை என்பதுபோன்ற பல திட்டங்களைத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தி, செயல்படுத்தி வந்தார்கள். அவையெல்லாம், முந்தைய அரசால், கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் என்பதற்காகக் கிடப்பில் போடப்பட்டுவிட்டன. எங்கள் பகுதியிலே ஒரு பழமொழி சொல்வார்கள்; 'நோன்பிற்கு மாவு இடி என்றால், முடியாது, வீம்பிற்கு மாவு இடிப்பேன்' என்று; அதைப்போல, தி.மு.க. ஆட்சியின் சிறப்பு மிக்க பல திட்டங்களைக் கிடப்பில் போட்டது வீம்பு அல்லவா? மீண்டும் அவற்றையெல்லாம் தமிழகத்தில் அமல்படுத்திட நிதிநிலை அறிக்கையிலே இடம் பெறச் செய்ததை வரவேற்கிறேன்.

இந்திய மருத்துவத் துறையில் இணங்கி உள்ள யுனானி, சித்தா மற்றும் ஆயுர்வேதம் ஆகிய பிரிவுகள் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் திறக்கப்படும் என்னும் நற்செய்தியை நிதிநிலை அறிக்கையிலே 23 ஆம் பக்கம், 57—வது பத்தியில் திட்டவட்டமாக அறிவித்தமைக்கு மனமாரப் பாராட்டி, வரவேற்கின்றேன். இந்திய மருத்துவத்திற்கு உள்ளடங்கிய யுனானி மருத்துவப் பிரிவில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அந்தச் சமூக மாணவர்கள் ஒருக்கால் இல்லாதபட்சத்தில் மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, எனது தொகுதி மக்களின் சார்பாக, எனது தொகுதியின் அவசரத் தேவைகளை நான் இங்கு பதிவு செய்கிறேன். அவற்றை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அரவக்குறிச்சி தொகுதி தமிழகத்திலேயே பரப்பளவில் மிகப் பெரிய தொகுதி. மழை 40 அங்குலத்திற்கும் மிகக் குறைவாகப் பெய்வதால், மிகவும் வறட்சியான பகுதி. விவசாய வளம் இல்லாத பகுதி. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் என் தொகுதியை மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவித்து வளம் பெறச் செய்ய வேண்டுகிறேன்.

எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, அரவக்குறிச்சியிலிருந்து நடாகோவில் மற்றும் அரவக்குறிச்சியிலிருந்து புங்கம்பாடி செல்லும் வழியில், நங்காச்சி ஆற்றின் மேல் இரண்டு மேம்பாலங்கள் கட்டுவதற்கு ஆவன செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் முருங்கைக்காய் விளைச்சல் மிகவும் அதிகம் இருப்பதால், அதனைச் சேமிப்பு செய்யக் குளிர்பதனக் கிடங்கு அமைத்து, விவசாயிகள் பெரிதும் பயன்பட வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் எந்தத் தொழிற்சாலையும் இல்லை. அந்தக் குறையை நீக்கி, தொழிற்சாலைகளை அமைத்திட ஆவன செய்யுமாறு கனிவுடன் வேண்டுகிறேன். எனது தொகுதியில் கலைக் கல்லூரி அல்லது தொழிற்கல்லூரி உருவாக்கிடவும் வேண்டுகிறேன். எனது

தொகுதியில் உழவர் சந்தை எதுவுமேயில்லை. ஆகவே, அந்தக் குறையைப் போக்கிட உழவர் சந்தை அமைக்குமாறு வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு நமது முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அது இன்னும் சுமார் 400 கிராமங்களில் பூர்த்தி அடையாமல் உள்ளது. அத்திட்டத்தை விரைவுபடுத்தி, குடிநீர்த் திட்டத்தைத் தொகுதி முழுக்க விரைவில் நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பகுதியான எனது பகுதியில், குடிநீர்ப் பிரச்சினை தீர வழிவகை செய்ய வேண்டுகிறேன். எனது தொகுதியில் முந்தைய ஆட்சியால் நிறுத்தப்பட்டுவிட்ட 4 பேருந்து வழித்தடங்கள், காங்கேயம்–வெள்ளக்கோவில் வழியாக தென்னிலை வரையிலும், கரூர்–வைரமடை, சின்னதாராபுரம், வேடசந்தூர் வழியாகவும், சின்னதாராபுரத்திலிருந்து பரமத்தி வழியாக கரூர் வரையிலும், கரூரிலிருந்து ஒட்டன்சத்திரம், அரவக்குறிச்சி, கோவிலூர், மார்க்கம்பட்டி, ஐவ்வாதுபட்டி வழியாக மேற்கண்ட நான்கு வழித்தடங்களில், தமிழக அரசின் பேருந்துகளை இயக்கி, பொது மக்களின் துயரத்தை நீக்கிட ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

(முற்பகல் 11–05

1996 முதல் 2001 வரையில் இருந்த கடந்த தி.மு.க. ஆட்சியின்போது அரவக்குறிச்சியில் திருச்சி மண்டலத்தைச் சார்ந்த பணிமனை அமைப்பதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. கடந்த ஆட்சியின்போது அந்த இடத்தை எதுவும் செய்யாமல் கிடப்பில் போட்டுவிட்டார்கள். மேற்கண்ட இடத்தில் பணிமனையை அமைத்து, அரவக்குறிச்சியை மையமாகக் கொண்டு பேருந்துகளை இயக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மனமார நான் வரவேற்றுப் பாராட்டுவதுடன், இந்த அவையில் பேச வாய்ப்பளித்திட்ட பேரவைத் தலைவருக்கு மீண்டும் நான் நன்றி சொல்லி, அமர்கின்றேன். நன்றி, நன்றி, நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து நான் பங்கேற்கின்ற வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்த, டாக்டர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்ற தியாகத் தலைவி, எங்கள் அருமை அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு, தள்ளாத வயதைத் தள்ளிவிட்டு, 83 வயது இளைஞராக என்னுடைய தொகுதியிலே முதன்முதலாகப் பிரச்சாரத்தை ஆரம்பித்து, நான் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும், பொது மக்களுக்கும் தன்னுடைய வேண்டுகோளைச் சமர்ப்பித்து, எனக்கு நல்லாசி வழங்கிச் சென்று, இன்றைக்குத் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பினை ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைமைப் பொறுப்பிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பதற்கு வழிகாட்டிய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என் தொகுதிக்கு வருகை தந்து பிரச்சாரம் செய்து, என்னுடைய வெற்றிக்கு உறுதுணையாக இருந்து வழிவகுத்த மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களுக்கும், என்னுடைய வெற்றியை உறுதி செய்வதற்காக நான் தனிப்பட்ட முறையிலே சென்று இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற தளபதி அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நான் என்னுடைய இயக்கத்தைச் சார்ந்த அனைவரையும் உங்களுக்கு முழுக்க, முழுக்க ஒத்துழைப்புக் கொடுக்கச் சொல்கிறேன் என்று சொல்லி, அதைச் செயல் வடிவம் ஆக்கித் தந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு அமைச்சர் ஜி.கே. வாசன் அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கிருஷ்ணசாமி அவர்களுக்கும், என்னுடைய தொகுதியிலே வந்து மிகச் சிறப்பான பிரச்சாரத்தை நடத்தி முடித்த, என்னுடைய வெற்றிக்கு வழி வகுத்த மாண்புமிகு அமைச்சர் இளங்கோவன் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளரும், இன்றைய தொழிலாளர் நலத் துறை அமைச்சருமான அருமைச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும், கொஞ்சம்கூட சலிப்பு இல்லாமல் நான்காவது முறையாக என்னைத் தேர்ந்தெடுத்து நான் வெற்றி பெறுவதற்காக உதவி செய்த ஸ்ரீபெரும்புதூர் தொகுதி மக்கள் அத்தனை பேர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்தவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசாங்கம் பொறுப்பேற்றவுடனே அமைச்சர்கள் மிக வேகமாகப் பணியாற்றுகின்ற காட்சியினை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக, என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும், 3 ஆம் தேதி நம்முடைய முதல்வர் அவர்களுடைய பிறந்த நாள் விழா. 4 ஆம் தேதி என்னுடைய மாவட்டத்திலே இரண்டு ரூபாய்க்கு அரிசி கொடுக்கின்ற விழா. அதனை எங்கள் மாவட்ட அமைச்சர், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அங்கே துவக்கி வைத்துவிட்டு, எங்களுடைய தொகுதியிலே 2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி என்கின்ற அந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக நாங்கள் போய் அந்தப் பணிகளைச் செய்தோம். 6 ஆம் தேதி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்து, உள்ளாட்சிப் பணிகளுடைய ஆய்வினை நடத்தி முடித்தார்கள். அடுத்தாற்போல, 12 ஆம் தேதி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் ஸ்ரீபெரும்புதூர் மருத்துவமனையிலே இருந்து, குன்றத்தூரிலே மூடுவிழா செய்திருக்கின்ற அந்தப் பிரசவ மருத்துவமனையிலேயிருந்து, படப்பையிலே அமைய இருக்க வேண்டிய மருத்துவமனை உள்ளிட்ட அத்தனையையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அங்கு இருக்கின்ற மக்களையும் சந்தித்து, என்னென்ன திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்பதை அங்கேயே பேசி முடித்து வருகின்ற நல்லதொரு நிகழ்ச்சி அங்கே நடைபெற்றது.

அடுத்தாற்போல, ஜூன் 16 ஆம் தேதி மீண்டும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். செம்பரம்பாக்கம் ஏரி என்பது மிகப் பெரிய ஏரி; என்னுடைய தொகுதியிலே இருக்கின்றது. அங்கே குடிநீர்ப் பிரச்சினையை, குடிநீர் சுத்திகரிக்கின்ற பணி எப்படி நடக்கின்றது என்பதை நேரடியாகவே பார்வையிடுவதற்காக வந்தார்கள். அந்தப் பணியை அங்கே சிறப்பான முறையிலே அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்து வந்திருக்கின்றார்கள்.

அடுத்தாற்போல, 16 ஆம் தேதி மாலை நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். ஜூலை 5 ஆம் தேதி Highways Minister வந்தார். ஜூலை 18 ஆம் தேதி Transport Minister வந்தார். மதியம் Handlooms Minister-ம் வந்தார்கள். இப்படிக் கிட்டத்தட்ட 8 மந்திரிகள் 9 முறை வந்தார்கள். என்னுடைய தொகுதி உள்ளிட்ட பணிகளை நான் அவர்களை வைத்துச் செய்கின்றபொழுது,

என்னுடைய பணி மிகவும் சுலபமாக இருந்தது என்பதை நான் நிச்சயமாக பெருமையோடு கூறிக்கொள்கின்றேன். இது மிகைப்படக் கூறுவதாக இல்லை. மிக வேகமான பணிகளை எப்படியெல்லாம் நடத்த வேண்டுமென்பதற்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகத் திகழ்ந்ததை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11—10*

அதேபோல, பட்ஜெட்டைப் பார்க்கின்றபோது வரி இல்லாத பட்ஜெட். "கண்டேன் சீதையை" என இராமபிரானுக்குக் கிடைத்த அரிய ஆறுதல் செய்திபோல, தமிழகத்து மக்களுக்கு வரி இல்லா பட்ஜெட் ஒரு இனிய செய்தியாகும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், சமூக அங்கத்தில் உள்ள அத்தனை பிரிவினருக்கும் சிறப்பான சலுகைகள் இதில் இடம் பெற்றுள்ளன. இதனைத் தயாரித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாகப் பாராட்டுதல்களை நான் தெரிவிப்பதோடு, இது பாராட்டுக்குரிய நிதிநிலை அறிக்கை என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் அனுபவத்திலேயும், நிர்வாகத் திறனிலேயும் முதிர்ச்சி பெற்றவர்களாக இருக்கின்ற காரணத்தினாலே, இந்த பட்ஜெட்டுக்கு இவ்வளவு பெரிய சிறப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று சொன்னால், அது மிகையாகாது. ஆட்சி வந்தவுடனே, பதவி ஏற்றவுடனே 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள் 7 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி என்று கையெழுத்திட்டு, நாட்டு மக்களுக்குத் தேர்தல் காலத்தில் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிய தமிழக முதல்வரின் நாணயத்தை, நா நயத்தைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஜனநாயக மரபுகளை, குறிப்பாக, பாராளுமன்ற ஜனநாயகத்தைப் போற்றிப் பாதுகாத்திட வேண்டும். 1967—லே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தேர்தலிலே தோற்றார்கள். தோற்றதற்குப் பிறகு, புதிதாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பிலே வந்தது. அப்பொழுது தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னார்கள்; "ஆட்சிக்குப் புதியவர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் எல்லா நெளிவு சுளிவுகளைத் தெரிந்துகொள்வதற்குக் குறைந்தது 6 மாதம் ஆகும். அந்த 6 மாத காலம் வரையிலும் இந்த அரசாங்கத்தை நான்

விமர்சனம் செய்யமாட்டேன். என் கட்சியும் இந்த அரசாங்கத்தை விமர்சனம் செய்யாது" என்று ஒரு மிகப் பெரிய பிரகடனமே செய்தார். அதேபோல, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருக்கின்றபோது அவர் சொன்னார். "காமராஜர் போன்ற தலைவர்கள் எல்லாம் தோற்கடிக்கப் பட்டிருக்கக் கூடாது. அவர் வெற்றி பெற்றிருக்க வேண்டும்" என்று தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இந்த இரண்டு தலைவர்களும் இந்த அறிவிப்பை நமக்கெல்லாம் ஒரு பாடமாகத்தான் சொல்லிச் செய்திருக்கின்றார்கள், அறிவித்திருக்கின்றார்கள். பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென்று சொன்னால், ஆளுங்கட்சியை எதிர்க்கட்சியும், எதிர்க்கட்சியை ஆளுங்கட்சியும் நிச்சயமாக மதித்து நடப்பது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு ஒரு ஆரோக்கியமான அரசியலை உருவாக்கித் தரும் என்று நான் நினைக்கின்றேன்.

நிதிநிலை அறிக்கையிலே ஒரு அறிவிப்பு வெளியாகி இருக்கின்றது. சென்னைப் பல்கலைக்கழக வளாகத்திலேயே திராவிட இயக்க ஆய்வு மையம் ஒன்றினை ஏற்படுத்த இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதை மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். அதே சமயம், நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சி சார்பில் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். நாட்டின் விடுதலைப் போராட்டத்தில், தமிழ்நாட்டில் நிறையப் பங்கு எடுத்துக்கொண்ட தலைவர்கள் இருக்கிறார்கள். அந்த சுதந்திரப் போராட்டத்திற்காகப் பாடுபட்ட தலைவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பெருந்தலைவர் காமராஜர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., டாக்டர் செண்பகராமன், பேட்டை முத்துரங்க முதலியார், திருப்பூர் குமரன், மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதியார் என்று நிறையத் தலைவர்கள், அத்தனை பேரும் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் குறிப்பிடுகின்ற வகையிலே, அவர்களுடைய போராட்டங்களையெல்லாம், போராட்டத் தியாக வேள்வியிலே ஈடுபட்டவர்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக, இங்கே வித்திட்டு, உரம் கொடுத்து, இந்த நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட அந்தத் தியாகசீலர்களையெல்லாம் குறிப்பிடுவதுபோல, நீங்கள் தமிழகத்தில் தேசிய இயக்க ஆய்வு மையத்தினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சுதந்திரப் போராட்டத் தியாகிகள்மீது அளவு கடந்த மதிப்பும், மரியாதையும் உண்டு என்பதை நான் அறிவேன். எனவே, எனது

கோரிக்கையை முதல்வர் அவர்கள் ஏற்பார்கள் என்று நம்புகின்றேன். அதேபோல, திராவிட இயக்க ஆய்வு மையம் அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதற்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை, அதையும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—15*

காமராஜர் அவர்களுடைய பிறந்த நாளைக் 'கல்வி வளர்ச்சி நாளாக' அறிவித்திருக்கின்றீர்கள். அதை உண்மையிலேயே நான் பாராட்டுகின்றேன். காமராஜர் 1975—லே மறைந்தார், பல ஆண்டு காலம் கடந்ததற்குப் பிறகும்கூட அவருடைய பிறந்த நாளையும், அவருடைய நினைவு நாளையும் காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள்தான் கொண்டாடிக்கொண்டிருந்தோம். பொதுக் கூட்டம் போடுவதும், கொடி ஏற்றுவதும் என்கின்ற நிலையை மாற்றி இன்றைக்குத் தமிழகத்தினுடைய மூலை முடுக்குகளிலே இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் எல்லாம் ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து காமராஜருடைய படத்திற்கு மாலை அணிவித்து, காமராஜரைப் பற்றிய பேச்சுப் போட்டியும் நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசையும் கொடுத்து, அங்கே குழந்தைகள் பசியாக இருக்கிற அந்த நேரத்திலே அவர்களுக்கு முட்டைகளைக் கொடுத்து, உணவு கொடுக்கின்ற அந்த இனிய நாளை, அந்த உன்னதமான நாளை டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திலே உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தொண்டர்கள் மட்டுமல்ல, இன்றைக்குக் காமராஜருடைய பக்தர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேரும் உங்களுக்குத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வளவு சிறப்புக்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள், ஆனால் பட்ஜெட், பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது. நிறைய, கொடுக்க வேண்டிய திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள், சலுகைகளை அறிவித்திருக்கிறீர்கள். அந்தச் சலுகைகளை நீங்கள் அறிவிக்கிறபோது, அதற்குரிய வரியை வசூலிப்பதற்குப் பதிலாக, வரியில்லா பட்ஜெட்டாகப் போட்டிருக்கிற காரணத்தாலே, நிதி ஆதாரம் இன்றைக்குப் பற்றாக்குறையாக இருந்தாலுங்கூட, உங்களுடைய பெருமுயற்சியின் காரணமாக அந்த நிதியை நீங்கள் பெறுவீர்கள் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இன்றைக்கு, உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்று சொன்னால், நமக்கு பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. காவிரிப் பிரச்சினை. 1991 ஆம் ஆண்டிலேயே நடுவர் மன்றம் இடைக்கால உத்தரவு போட்டு, 250 டி.எம்.சி. தண்ணீரை நமக்குக் கொடுக்க வேண்டுமென்று அவாகள் அன்றைக்குத் தீர்ப்புக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) 205 டி.எம்.சி.—மன்னிக்க வேண்டும்—205 டி.எம்.சி. கொடுக்க வேண்டுமென்று அறிவிப்புக் கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கும் அந்தத் தீர்ப்பு முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அந்தத் தீர்ப்புக் கொடுத்து 15 ஆண்டுகளுக்கு மேலாகி இருந்தாலுங்கூட, அந்தத் தீர்ப்பின்படி, இன்றைய வரையிலும் கொடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, நேற்றையதினம் நம்முடைய பொதுப் பணித் துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்கள் சொன்னார்கள், நடுவர் மன்றம் தன்னுடைய தீர்ப்பை விரைவிலே அறிவிக்க இருக்கிறது என்று. ஆகவே, நமக்குச் சாதகமான நல்ல தீர்ப்பு வரும் என்று, அவர் சொல்கின்ற அந்தத் தொனியிலே இருந்து நான் அறிந்துகொண்டேன். ஆக, அவர் அறிவித்திருக்கின்றார். நடுவர் மன்றத் தீர்ப்பு வரவிருக்கிறது. எப்பொழுது வரும்? அதனுடைய காலக்கெடு ஆகஸ்டு 7 ஆம் தேதி முடிவடைகிறது. அந்த நடுவர் மன்றத்தினுடைய ஆயுட்காலம் ஆகஸ்டு மாதம் 7 ஆம் தேதி முடிவடைகின்ற நிலையில், இன்றைக்கு 28 ஆம் தேதி. இந்தப் பக்கம் ஓரிரு நாட்கள், அந்தப் பக்கம் ஆறு நாட்கள். மொத்தம் 8 நாட்கள்தான் இடையிலே இருக்கின்றன. இந்த 8 நாட்களுக்குள்ளே அவர்கள் கொடுக்கின்ற தீர்ப்பு என்ன? அல்லது இந்த 8 நாட்களைத் தாண்டிப் போகுமா? இதை யார் கொடுக்கப் போகின்றார்கள் என்கின்ற விவரம் தெரியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், நம்முடைய அரசு இது குறித்து (குறுக்கீடு) கேட்டிருக்கிறார்கள், இன்னும் கொடுக்கவில்லை. ஆக, இது குறித்து நம்முடைய அரசு கூர்ந்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—20

அதேபோல, முல்லைப் பெரியாறு அணைக்காக கேரள அரசு மறுஆய்வு செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திலே போட்ட அந்த மனு நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்குத் தொலைக்காட்சியிலே அதைப் பார்க்கின்றபோது, சந்தோஷமாக இருக்கிறது. ஆனால், உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பைக் கேரள அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சொன்னார்கள்,

136 அடி உயரம் இருக்கின்ற அந்த முல்லைப் பெரியாறு அணையினுடைய உயரத்தை 142 அடியாக உயர்த்த வேண்டுமென்று நாம் கொடுத்த கோரிக்கையை ஏற்று, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஆனால் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத கேரள அரசாங்கம், உடனடியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டு, அதன்மீது மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு மறுபரிசீலனை என்கின்ற அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நமக்கு ஏற்றாற்போல், 142 அடி உயரத்திற்கு முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை உயர்த்தலாம்; அதற்குப் பலம் இருக்கிறது. அந்த அணைக்கு அவ்வளவு பலவீனம் இல்லை. நன்றாக, பலமாக இருக்கிறது. இன்னும்கூட பலப்படுத்திக்கொள்ளலாம் என்ற உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நாம் உடனடியாகச் செயலாக்கத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நதி நீர் இணைப்புக்கு—அகில இந்திய ரீதியிலே எடுத்துக்கொண்டால், இந்திய நதிகளை இணைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 50 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும். நாம் அவ்வளவு பெரிய திட்டத்திற்குப் போகவில்லை என்றாலுங்கூட, நம்முடைய தென்னக நதிகளை இணைப்பதற்கு மொத்தமே 5 ஆயிரம் கோடி ரூபாய்தான் செலவாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மனது வைத்தால், நீங்கள் கேட்கின்ற இடத்திலே மட்டும் இல்லை, கொடுக்கின்ற இடத்திலேயும் நீங்கள்தான் இருக்கின்றீர்கள் என்கின்ற காரணத்தாலே, நீங்கள் கேட்டாலே போதும். எங்கள் அருமை அன்னை சோனியா காந்தியினுடைய பரிந்துரையோடு இந்த நாட்டினுடைய பிரதமராக இருக்கின்ற மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், இந்திய நாட்டினுடைய நிதியமைச்சர் மாண்புமிகு அருமைச் சகோதரர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் 5 ஆயிரம் கோடி ரூபாயை அள்ளிக் கொடுப்பார்கள். நீங்கள் தென்னக நதிகளை ஒன்றுபடுத்தி, ஒருமைப்படுத்தி, நல்லதொரு பலனைத் தமிழகத்திற்கு உருவாக்கித் தர முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, தேர்தலின்போது நீங்கள் வெளியிட்ட ஓர் அறிக்கை. தேர்தல் நேரத்திலேதான் அது பிரச்சினையாக இருந்தது என்றாலுங்கூட, தேர்தல் முடிந்து, ஆட்சியிலே வந்து அமர்ந்ததற்குப் பிறகும்கூட, அது ஓயாத பிரச்சினையாக இருக்கிறது. ஆனால், அது பிரச்சினை அல்ல. அதைத்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

தேர்தலில் நிற்கின்றபோது, வேட்பாளர்களைப் பார்த்து ஓட்டுப் போடுவார்கள். அவர்கள் கட்சியினுடைய சாதனைகளைச் சொல்லி, ஓட்டுப் போடுவார்கள். ஆனால், இந்த முறை தேர்தலில் நின்றது என்னவென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களுக்கு அளித்த அந்தத் தேர்தல் வாக்குறுதிகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்று சொன்னால், அருமை அன்னை சோனியா காந்தி அவர்கள் இங்கே Island Ground கூட்டத்திலே பேசுகின்றபோது, அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்த அறிக்கையிலே எங்களுக்கு உடன்பாடு இருக்கிறது என்று உத்தரவாதம் கொடுத்தார்கள். அதுபோல, பிரதம மந்திரி அவர்களும், கலைஞர் அவர்களுடைய தேர்தல் அறிக்கை நிறைவேற்றக்கூடியதுதான், எங்களுக்கு அதிலே சம்பந்தம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதுபோல, இந்திய நாட்டினுடைய நிதியமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள் சொன்னார்கள், இது நடக்காத ஒன்றல்ல, நடக்கக்கூடியதுதான் என்று அவர்களும் சான்றிதழ் வழங்கியதற்குப் பிறகு, இன்றைக்கு இவை நடந்தேறி வருகின்றன; ஒவ்வொன்றாக நடந்தேறி வருகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி இன்றைக்குப் போடப்பட்டு வருகின்றது. அரிசி தரம் சரியில்லை, அது சரியில்லை, இது சரியில்லை என்று சொல்லலாம். அரிசி போடுகின்றோம். அந்த அரிசியை வேறு யாரும் தனிப்பட்டவர்களின் வீடுகளிலிருந்து கொண்டு வரவில்லை. இந்த நாட்டிலே கொள்முதல் செய்துதான் அதைக் கொடுக்கின்றோம். மத்திய அரசினுடைய தொகுப்பிலிருந்து வருகின்ற அரிசியைக் கொடுக்கின்றோம். ஆகவே, அரிசி நன்றாக இல்லையென்றால், நன்றாக ஆக்கிக்கொள்ளலாம். அந்தத் திட்டம் ரொம்ப நல்ல திட்டம். இன்றைக்கு இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கிடைக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே பாராட்டக்கூடியதுதான். அதற்கு உங்களுடைய கடுமையான உழைப்பு, நீங்கள் ஓர் இளைஞனைப்போல சுற்றிச் சுற்றி வந்தீர்கள். உங்களுக்குத் துணையாகத் தளபதி அவர்களும் சுற்றிச் சுற்றி வந்து இந்த வெற்றிக் கனியினை நீங்கள் தக்க வைத்திருக்கின்றீர்கள் என்பதை உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, நல்ல திட்டங்கள் எதுவாக இருந்தாலும், யார் கொண்டு வந்தாலும், அதை ஏற்றுக்கொள்கின்ற பரந்த மனது உங்களுக்கு இருக்கின்றது. அதன் காரணமாகத்தான், இலவசமாக சைக்கிள் கொடுப்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள், நாங்களும் அதைத் தொடர்வோம் என்றீர்கள்.

*முற்பகல் 11—25*

அதேபோல, கோயில்களுக்கும், எந்த வசதியும் இல்லாத கோயில்களுக்கு—சாமிகளுக்குக்கூட நல்ல காலம் வந்தால்தான் அவற்றிற்குக்கூட நேரம் சரியாக இருக்கும்போல இருக்கிறது. சில கோயில்கள் எல்லாம் பாழடைந்து இருக்கின்றன. Boot Bungalow மாதிரி இருக்கிறது. ஓரளவிற்கு அந்தக் கோயில்களையெல்லாம் செப்பனிடவும், அவற்றைப் புதுப்பிக்கவும், அந்தக் கோயில்களில் ஒரு வேளையாவது பூஜை நடத்துவதற்குரிய அந்த நிதியினை நிச்சயமாக நீங்கள் ஒதுக்கித் தருவீர்கள் என்று நான் நினைக்கின்றேன்.

கூட்டுறவுத் துறையில் ரூ. 7 ஆயிரம் கோடி தள்ளுபடி என்பது சாதாரணம் அல்ல. நாம் கிராமங்களிலே எல்லாம் தீபாவளிக்கு ஒரு கோடி பார்ப்போம், பொங்கலுக்கு ஒரு கோடி பார்ப்போம், இல்லையென்றால் தெருக் கோடியைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கு ரூ. 7 ஆயிரம் கோடியை நீங்கள் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். ஆனால் அந்தத் தள்ளுபடியை முழுக்க, முழுக்க மக்கள் பயன்படுத்தாதவாறு இன்றைக்கு அதிகாரிகள் தடையாக நிற்கிறார்கள். 'சற்றே விலகி நில்லும் பிள்ளாய், சன்னிதானம் மறைக்கிறதே' என்று சொல்லக்கூடிய நிலையிலே கடுமையான நடவடிக்கைகளை இந்தக் கூட்டுறவுத் துறையின்மூலமாக நீங்கள் எடுத்தே ஆக வேண்டும். நீங்கள் சொல்லுகின்றீர்கள், நான்கூட கூட்டுறவுத் துறை அமைச்சர் ஊரில் இல்லாதபோது அவருடைய செயலாளரைப் பார்த்து ஒரு மனுக் கொடுத்தேன். என்னுடைய தொகுதியில் முக்கியமாக 14 கூட்டுறவு வங்கிகளில் கடன் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ரத்துப் பண்ணமாட்டேன் என்கிறார்கள்; இப்போது கேட்கிறார்கள், சிட்டா, அடங்கல் இருந்தால் கொடுக்கிறோம் என்கிறார்கள். சிட்டா, அடங்கல் இப்போது கொண்டு வந்து கொடுங்கள், அப்போதுதான் நகையைத் திருப்பிக் கொடுப்போம், இல்லையென்றால் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள். நானே நேராகப் போய்ப் பேசினேன். அதற்குப் பிறகு மிகவும் தொந்தரவு பண்ணி, காமராஜருடைய அந்தக் கல்வி நாளான அன்றைக்கு எங்கள் மாவட்ட அமைச்சரை வைத்துக்கொண்டு 14 பேருக்கு நாங்கள் ரத்துச் செய்து அந்த ரசீதைக் கொடுத்தோம். ஆனால் இதுவரைக்கும் என்னுடைய தொகுதியிலே ஒரு வங்கியிலேகூட அதைக் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். திட்டங்களை அறிவிக்கின்றீர்கள்.

செயல்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளைச் சொல்கின்றீர்கள். ஆனால், இருக்கின்ற அதிகாரிகளை வைத்துக்கொண்டு நீங்கள் செயல்படுகின்றபோது அவர்களுக்கு அந்தப் பரந்த மனம் இல்லை. அதை நீங்கள் குறிப்பாகக் கவனிக்க வேண்டும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, எங்களுடைய தொகுதிக்கு வருகை தந்தபோது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நாங்கள் நேராகவே கொண்டு போய்க் காட்டினோம். குன்றத்தூரில் ஒரு பிரசவ மருத்துவமனை இருக்கிறது. அது 2001—லிருந்து 2006 வரையிலும் இயங்கவில்லை. மூடிக் கிடந்தது. அது ஒரு சென்டரான இடம். கிட்டத்தட்ட 30 ஆயிரம் மக்கள் இருக்கக்கூடிய பகுதி. 'மழை பெய்வதும், பிள்ளை பெறுவதும் மகாதேவனுக்கே தெரியாது' என்று சொல்வார்கள். அது மாதிரி, பிரசவ வலி எடுக்கின்றபோது, அந்தப் பெண்களைத் தாம்பரத்திற்கோ அல்லது சென்னைக்கோ கொண்டு வருவதற்குள்ளாக இடையிலே பிரசவம் ஏற்படும், இல்லையென்றால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்கிற நிலைமை. அந்தக் குன்றத்தூர் மருத்துவமனை இயங்காமல் இருப்பதைப் பார்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'நான் கட்டாயம் செய்து கொடுக்கிறேன்' என்று சொன்னார். அதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஸ்ரீபெரும்புதூரில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அங்கே எந்த வசதியும் இல்லை.' செத்துப் போனவர்களை வைக்கும் சவக் கிடங்கிற்குள்ளே மந்திரி போய்விட்டு, பாவம், மூக்கைப் பிடித்துக் கொண்டேதான் வெளியே வந்தார். அவர் வந்தார்; மற்றவர்கள் எல்லாம் உள்ளேகூட போகவில்லை. முக்கியமானவர்கள் மட்டும்தான் போய்விட்டு, ஓடியே வந்துவிட்டோம். நாற்றம் பிடித்து, மிகவும் அசுத்தமான சூழ்நிலையிலே அந்தச் சவக்கிடங்கு இருக்கிறது.

அதேபோல, அந்த மருத்துவமனையிலே இன்னும்கூட அவசர சிகிச்சைப் பிரிவு வசதி இல்லை. நிறைய accidents இப்போது. என்றைக்கு ஆப்கன்காரன் வந்து ரோடு போடுகின்ற பணியை எடுத்தானோ, 6 வருடம் ஆகிறது, போட்டுக்கொண்டு இருக்கிறான், போட்டுக்கொண்டு இருக்கிறான், இன்னும் போட்டுக் கொண்டே இருக்கிறான், அந்த ரோட்டை. இன்னும் முடிவடையவில்லை. ஆனாலும்கூட, அவனால் 200, 300 பேர் அங்கே accident—லேயே செத்து விடுகிறார்கள். ஒரு பஸ் தட்டினால் 4 பேர் அவுட். ஒரு லாரி அடித்தால் 4 பேர் அவுட். Highways Minister கூட்டம் நடத்திக்

கொண்டிருக்கிறார் காஞ்சிபுரத்திலே. எனக்கு phone வருகிறது, என்னவென்று கேட்டால், உரக் கிடங்கு கூட்டு ரோட்டிலே 4 பேர் அவுட் என்கிறார்கள். எப்படி என்றேன். முன்னாலே போகின்ற வேனை overtake பண்ணினான் லாரிக்காரன், அடித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டான் அவன்பாட்டிற்கு என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு என்ன பண்ணுவது? மந்திரியை அழைத்துக்கொண்டு போய், அவரிடம் காட்டினோம். அவர் உடனே, வேகத் தடுப்பைப் போடுவதற்கு ஏற்பாடு பண்ணுவதாகச் சொல்லி, இப்போது ஏற்பாடு பண்ணி இருக்கிறோம். அதனாலே, முதலிலே விபத்து ஏற்படாமல் தடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நானும், அவர் சொல்கின்ற மருத்துவமனைகளுக்கு எல்லாம் நேரடியாகச் சென்று பார்த்தோம். அவர்கள் இப்போது சொல்வதைவிட அதிகமாக அப்போது விவரங்களை அவர் மத்தியிலே சொல்லி இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிவாரணப் பணிகளை நம்முடைய அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

*முற்பகல் 11—30*

**திருமதி டி. யசோதா:** ஸ்ரீபெரும்புதூரை 'குட்டி ஜப்பான்' என்று சொல்கின்றார்கள். ஏற்கெனவே நான் சட்டமன்றத்தில் ஜனவரி மாதத்தில்கூட அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். குட்டி ஜப்பானாக இருக்கிறதே தவிர, அங்கேயிருக்கிற ஜப்பான்காரர்களுக்கு அங்கே வேலையில்லை. வெளியில் இருந்துதான் இறக்குமதி செய்கிறார்கள். அங்கே நிறைய கம்பெனிகள்—இப்போது நீங்கள் வந்த பிறகுகூட Motorola வருகிறது. ஏற்கெனவே அங்கே Nokia வந்திருக்கிறது. Hyundai கம்பெனி இருக்கிறது. ஊரில் இருக்கிற எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் எனக்கு லெட்டர் எழுதுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள் அம்மா.

**திருமதி டி. யசோதா:** கொஞ்சம் இருங்கள் சார். ஊரில் இருக்கிற எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் எனக்கு லெட்டர் எழுதுகிறார்கள்; அம்மா, Nokia—வில் வேலை வாங்கிக் கொடுக்க வேண்டும், அப்படியென்று. அவரவர்கள் ஊரில் இருப்பவர்களை அனுப்புகிறார்கள். அதற்குப் பிறகு, எங்கள் கட்சியில் இருப்பவர்களும், இந்த அம்மா செய்யமாட்டாங்க என்கிறார்கள். செய்ய முடியவில்லை. ஒரு ஆளுக்கு ஒரு வேலை, எம்.எல்.ஏ. சொன்னர்கள் என்று இதுவரைக்கும் அவர்கள் கொடுத்தது இல்லை. நான் அவர்களைப் பார்த்ததேயில்லை. கடவுளைக்கூடப் பார்த்துவிடலாம்போல் உள்ளது. இங்கே போனால் அங்கேயிருக்கிறார்கள் என்கிறார்கள். அங்கே போனால் இங்கே இருக்கிறார்கள் என்கிறார்கள். இவர்களைத் தேடித் தேடியே நான் ஓய்ந்து போய்விட்டேன்.

இந்த நிலைமையிலே, என்னை விடுங்கள். நீங்கள்தான் ஒரு சட்டம் போட்டீர்களாம். சிப்காட்டில் அந்தத் தொழிற்சாலைகள் தொடங்கும்போது 10 சதவீதம் உள்ளூர்க்காரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற ஒரு ஒப்பந்தம் சிப்காட்டில் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த ஒப்பந்தம் இருக்குமென்று சொன்னால், அதை அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிற்சாலைகள் பயன்படுத்தியிருக்கின்றார்களா என்கிற ஒரு ஆய்வினை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அப்படியில்லையென்று சொன்னால், அதுபோன்ற ஒரு நிலையினை உருவாக்குவதற்கு நிச்சயமாக நீங்கள் ஒரு புது வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும், செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்ததால்தான் வெள்ளம் வந்தது. 10 ஆயிரம் கன அடித் தண்ணீரை வெளியே திறந்துவிட்டார்கள், இல்லையென்றால் ஏரி உடைந்துவிடும் என்று. Artificial—ஆன ஒரு வெள்ளம்தான் ஏற்பட்டது. ஆனால், எங்களுடைய மக்களுக்குரிய அந்த நிவாரணம் முழுமையாகக் கிடைக்கவில்லை. பெரும் பகுதி கிடைக்கவில்லை. நான் ஓட்டுக் கேட்கப் போனபோதெல்லாம் கேட்டார்கள், எங்களுக்கு வெள்ள நிவாரணம் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். அதே மாதிரி, விவசாயக் கிணறுகள் அந்த வெள்ளத்திலே மூழ்கிப் போய் உடைந்து போயின. பம்புசெட்டுகள் அப்படியே சிதறிப் போயின. இதுபோன்று எல்லாவற்றையும் photo எடுத்துக் கொடுத்தோம். அதற்கும்

நிதியுதவி கொடுத்தார்கள். ஆனால், அதுவும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றவர்களுக்குப் பரவலாகக் கிடைக்கவில்லை. அதனாலே, இப்போது ஏதோ சுனாமியிலே மிச்சம் இருக்கிறது என்று சொல்லி, ரூ.100 கோடியை சுனாமிக்கு வீடு கட்டுவதற்கு என்று இப்போது இந்த வருடத்திற்கு ஒதுக்கியிருக்கிற மாதிரி, அந்த வெள்ள நிவாரணத்திலே மத்திய அரசாங்கம் கொடுத்த தொகையிலே ஏதாவது மிச்சம் சொச்சம் இருந்தால், என் தொகுதிக்கும் அதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இயற்கையான வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பைவிட, செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்ததால் செயற்கையாக ஏற்பட்ட விபத்துதான் எங்களுக்குக் காரணம்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்தார். அவர் வந்து அதைப் பார்க்கும்போது அதிகாரிகள் கண்ணைக் கட்டிக்கொண்டு பொய் சொல்கிறார்கள்—என்ன செய்வது?—ஸ்ரீபெரும்புதூர் பெரிய ஏரியிலிருந்து நான்கு supply channel வழியாகத் தண்ணீர் இந்த செம்பரம்பாக்கம் ஏரிக்கு வருகிறது என்று. Supply channel வேலை செய்தால்தானே? அதெல்லாம் மூடிக் கட்டடம் கட்டிய பிறகு எங்கேயிருந்து supply channel–லிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் வரும்? ஸ்ரீபெரும்புதூர் ஏரிக்கு வரத்துக் கால்வாய் இல்லாத காரணத்தினாலேதான் ஸ்ரீபெரும்புதூர் ஏரியினுடைய தண்ணீர் கொள்ளளவைத் தாண்டி வெளியே வந்து ஸ்ரீபெரும்புதூர் நகரம் வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டது. ஆகவே நீங்களும், கொஞ்சம் அதிகாரிகள் சொல்வதையும் வைத்துக்கொள்ளுங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள் சொல்வதையும் கேளுங்கள். உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற அந்த Chairman–கள், அவர்களுக்கும் கொஞ்சம் விவரம் தெரியும், அவர்களையும் வைத்துக் கேட்டால் உண்மையான நிலைமை உங்களுக்குப் புரியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, இயற்கைச் சீற்றம், பூகம்பம். பூகம்பத்தால் இன்றைக்கு இயல்பான இயற்கை நிலை மாறி வருகிறது. வெப்பமும், குளிரும் அதிகரிக்கின்றது. சுமத்திரா தீவில் ஏற்பட்ட நில நடுக்கம்தான் தமிழ்நாட்டுக்கு சுனாமி வருவதற்குக் காரணமாக இருந்தது. தற்போது சுமத்திரா தீவில் நில நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்பாராமல் ஏற்படும் பேரழிவைத் தடுக்க மத்திய அரசு ஒரு சட்டம் இயற்றியிருக்கிறது. அதில் மத்திய Committee,

மாநில Committee, மாவட்ட Committee என்றும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே மாவட்டத்திற்கு ஒரு Committee என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த Committee அறிவிக்கப்பட்டிருக்கின்றதா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. அறிவிக்கப்படவில்லையென்றால், அது அறிவிக்கப்பட வேண்டும். அந்த Committee-தான், வீடுகளைக் கட்டுகின்றபோது அந்த சுனாமியைத் தாங்கக்கூடிய அளவிற்கு, அந்த அதிர்வினைத் தாங்கக்கூடிய அளவிற்கு அந்த வீடுகள் பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்கிற நிலையில் ஆய்வு செய்து கொடுக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்திலே அவர்கள் நிறைவேற்றியிருக்கின்றார்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பட்டப்பை...

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம். Time ஆகிவிட்டது.

**திருமதி டி. யசோதா:** இரண்டே இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறையப் பேர் பேச வேண்டி இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** பேப்பரே இரண்டே இரண்டு பேப்பர்தான். நான் points-தான் வைத்திருக்கிறேன், எழுதுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** பட்டப்பைக்குப் பேருந்து வேண்டுமென்று நாங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சரைப் போய்ப் பார்த்தோம், நானும், எங்கள் ஒன்றியச் செயலாளரும் பார்த்தபோது, எங்கள் மாவட்ட அமைச்சரும் பரிந்துரை செய்தார்கள். உடனே பேருந்து விட வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். சொல்லி, கிட்டத்தட்ட 25 நாட்கள் ஆகிவிட்டன. அது எங்கெங்கோ சுற்றி, இப்போதுதான் Home Department—க்கு வந்திருக்கிறது. அமைச்சர் பேருந்து விட வேண்டும் என்று order போட்டதற்குப் பிறகும்கூட, இந்தக் காலதாமதம் ஏற்படுகின்ற நிலைமையை நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, பட்டா, அதுதான் எங்களுக்குப் பெரியது. முதியோர் உதவித் தொகையும், பட்டாவும் எல்லா எம்.எல்.ஏ.—க்களுக்கும்

இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் இருந்தபோது பட்டா கொடுத்து இருக்கிறீர்கள், 2001 வரைக்கும். அந்த பட்டா ஒரே ஊரில் பாதிப் பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள், பாதிப் பேருக்குக் கொடுக்கவில்லை. உதாரணத்திற்கு, மாங்காடு என்று எடுத்துக்கொண்டால், பாதிப் பேருக்குக் கிடைத்திருக்கிறது, பாதிப் பேருக்குக் கிடைக்கவில்லை. அதற்குள்ளாக ஆட்சி மாற்றம் வந்தது. ஆட்சி மாற்றம் வந்தவுடனே பட்டா ban பண்ணிவிட்டார்கள். அதனால் பாதிப் பேருக்கு அது கிடைக்கவில்லை. பாதிப் பேருக்குக் கிடைத்தது. அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பின்னால் 2001—க்குப் பின்னால் பட்டா கொடுப்பதையே ban பண்ணிவிட்டார்கள் என்ற கருத்தினை இங்கே சொல்லியிருக்கிறார்கள். 2001—ல் பொறுப்பேற்று 2006 வரைக்கும், மாண்புமிகு அம்மா அவர்களால் 4,33,106 வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,33,000, 4,98,000, அல்லது 5 இலட்சம்கூட நீங்கள் பட்டா கொடுத்து இருக்கலாம். ஆனால், என் தொகுதிக்கு ஒருவருக்குக்கூட பட்டா கொடுக்கவில்லை. அதாவது, belt area என்று சொல்லி, (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். Belt area என்று சொல்லி நீங்கள் பிரித்து, ஸ்ரீபெரும்புதூர் வரைக்கும் கிடையாது. சுங்குவார்சத்திரத்திற்குப் பிறகு கொடுக்கிறீர்கள். சுங்குவார்சத்திரத்திற்குப் பிறகு கொடுப்பதற்கு—அதற்கு நான் போகிறேன். ஒவ்வொரு வருடத்திலும் அவர்கள் கொடுக்கும்போது, 100 பட்டா, 150 பட்டா என்று நாங்களே ஏற்பாடு பண்ணி, அங்கே கொடுக்கிறோம். இந்தப் பகுதியிலே கொடுக்கப்பட்டு இருந்த ஒரே ஊரிலே, 10 பேருக்குக் கிடைத்திருந்தால், 10 பேருக்குக் கிடைக்கவில்லை. 100 பேருக்குக் கிடைத்தால் 100 பேருக்குக் கிடைக்கவில்லை. அந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று சொல்கிறார்கள் என்றால், 168 என்கின்ற ஒரு சட்டத் திருத்தத்தை

நீங்கள் திரும்பப் பெற வேண்டும், அல்லது கொஞ்சம் relax பண்ணிக்கொண்டால், இருக்கிறதை வைத்து நாம் அவர்களுக்குப் பட்டா கொடுக்க முடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதை நீங்கள் செய்தால்—நீங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். இங்கே நிறைய உறுப்பினர்கள் பேசினார்கள். பல ஆண்டு காலமாக ஒரே இடத்தில் இருந்து வீடு கட்டி, வாசல் கட்டி, குடியும், குடித்தனமுமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இனிமேல் எங்கேயும் போக முடியாது என்ற சூழ்நிலை இருக்கும்போது, ஏதாவது ஒரு குறைந்தபட்சக் கட்டணத்தை வைத்தாவது அவர்கள் எல்லோருக்கும் பட்டா கொடுப்பதற்கு, நீங்கள் வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். Time இல்லை. நிறையப் பேர் பேச வேண்டியது இருக்கிறது.

**திருமதி டி. யசோதா:** இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன் நான். அதே மாதிரி, புறம்போக்கு, அதாவது மேய்ச்சல் புறம்போக்கில் எதையும் பயன்படுத்தக்கூடாது. ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். எருமையூர் என்று ஒரு இடம். கொல்லச்சேரி என்று ஒரு இடம். இந்த எருமையூர், கொல்லச்சேரி ஆகிய இடங்களில் 3 பனை மரத்து ஆழத்திற்கு அவர்கள் கல் அறுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஏதோ ஒரு அரசாங்கம்தான் அவர்களுக்கு permission கொடுத்திருக்கிறது. Permission இல்லாமல் அவர்கள் கல் எடுக்கவில்லை, quarry நடத்தவில்லை. இப்போது quarry நடத்தியதன் பலன், 3 பனை மரம் உயரத்திற்குப் போனதற்குப் பிறகு, அங்கு போய் எந்த ஆடு மேயும், எந்த மாடு மேயும்? ஆடு மேய்ந்தாலும், மாடு மேய்ந்தாலும் குருமா ஆகுமே தவிர, அங்கே மேய்ச்சலுக்குப் புல்லே கிடையாது. அதனால் அரசாங்கம் அது மாதிரி quarry—கள் இருக்கிற மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை industries—க்கு எடுத்து, அதை relax பண்ணி அங்கே கொடுத்தால் அரசாங்கத்திற்கு வருமானம் வரும். அது ஒன்று. திருட்டுக் கல் எடுப்பதும் ஒழியும். போய்ப் பார்க்கிற அதிகாரிகளைக் கொலை செய்கிறார்கள். லாரி வைத்து சாகடிக்கிறார்கள். எத்தனை தாசில்தார்கள் என் தொகுதியில் செத்துவிட்டார்கள் தெரியுமா? அது மாதிரி விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். கொல்லச்சேரியில் ஆதி திராவிடர்களுடைய ஒரு society இருக்கிறது, கல் உடைக்கிற society. அந்த society—க்கு அங்கீகாரத்தை ஏன் ரத்துச் செய்தார்கள் என்று தெரியவில்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

இறுதியாக, தமிழ்நாடு சத்துணவு அமைப்பாளர்களாக M.A., B.A., B.Sc., B.Com., M.Com., M.Phil., முடித்தவர்கள் மட்டும் 5,000 பேர் உள்ளனர். 1983 ஆம் ஆண்டில் இருந்து இவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 22 ஆண்டுகள் சத்துணவு அமைப்பாளராகப் பணியாற்றி வருகின்ற இவர்களை, விதிகளைத் தளர்த்தி கருணை அடிப்படையில், அரசுத் தேர்வாணையம்மூலம் சிறப்புத் தேர்வு நடத்தி சத்துணவு பட்டதாரிகளுக்கு இளநிலை உதவியாளர்கள் பணியிடம் வழங்கிட அரசு உத்தரவு பிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

24—9—2001, 23—3—2002 ஆகிய தேதிகளில் நடைபெற்ற சத்துணவு மானியக் கோரிக்கைமீதான விவாதங்களில், சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றி வரும் இளங்கலை, முதுகலை படித்த பட்டதாரிகளுக்கு அரசின் பிற துறைகளில் இளநிலை உதவியாளர் பணியிடம் வழங்கப்படும் என்று இரு முறை இந்த மாமன்றத்திலே அறிவித்தும்கூட அவர்களுக்கு அந்த உதவி கிடைக்கவில்லை. ஆகவே, அந்த உதவியினை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் கூறி, எங்கள் சட்டமன்றத் தலைவருக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குச் செல்லும்முன், என்னுடைய தொகுதியைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைக் கூட்டத்திலே நான் சொன்ன கோரிக்கைகளை எல்லாம் ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மங்களூர் தொகுதிக்குப் பாலம் கட்டித் தருவதாகவும், நலத் திட்டங்களை வழங்குவதாகவும் அறிவித்த அறிவிப்புக்கு என் மனமார்ந்த, நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலே 9 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. 9 சட்டமன்றத் தொகுதிகளிலே மிகவும் பின்தங்கிய தொகுதி

மங்கலூர் தொகுதி. நான் ஏற்கெனவே அந்தத் தொகுதியைப் பற்றியெல்லாம் விரிவாக மாமன்றத்திலே பேசியிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு குழு அமைத்து அந்தத் தொகுதியைப் பார்வையிட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு, நலத் திட்டங்கள், என் தொகுதி மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. இருந்தபோதிலும், எங்களுக்கு அது போதாது என்று இன்னும் சில கோரிக்கைகளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மங்கலூர் தொகுதியிலே வெலிங்டன் ஏரி என்று ஒரு மிகப் பெரிய ஏரி இருக்கிறது. வெள்ளைக்காரர்களால் ஏழை விவசாயிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிழைப்பதற்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டது வெலிங்டன் ஏரி. அந்த ஏரியிலே என்னவோ தெரியவில்லை, கடந்த சில ஆண்டுகளாக உடைப்பு ஏற்படுகிறது. தண்ணீர்ப் பிடிப்பு அங்கே இருக்க இயலவில்லை. காரணம் என்னவென்று கேட்டால், பொதுப் பணித் துறையிலே வருடா வருடம் பல கோடிகள் ஒதுக்கினாலும், அந்த ஏரியைச் சீர்படுத்த முடியாத நிலை அங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே ஒரு கல்லூரிகூட இதுவரை இல்லை. குறிப்பாக, எஸ்.நாரையிலிருந்து, படிக்கும் மாணவிகள் விருத்தாசலம் வரை 80, 90 கி.மீ. பயணம் செய்து படிக்கவேண்டிய ஒரு நிலை அங்கே இருக்கிறது. மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக என்னுடைய தொகுதிக்கு ஒரு கல்லூரி—கலைக் கல்லூரி கட்டித் தர நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலூர் சட்டப் பேரவைத் தொகுதியிலே மின்சாரக் கம்பிகள் எந்த நேரத்தில் அறுந்து விழுமோ என்ற ஒரு நிலை இருக்கிறது. 10 நாட்களுக்கு முன்புகூட மிகப் பெரிய தீ விபத்து வள்ளிமதுரம் என்ற கிராமத்திலே ஏற்பட்டது. நான் அந்தத் தீ விபத்து இடத்தைப் பார்வையிட்டபொழுது, எப்படி இந்தத் தீ விபத்து ஏற்பட்டது என்று கேட்டால், மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கம்பிகள் தாழ்வான பகுதியிலே தொங்கிக் கொண்டிருக்கின்றன, காற்று, மழை வரும்போது ஒன்றோடொன்று ஒட்டி, உரசி, தீப்பற்றிக்கொள்கிறது, ஆகையால் அந்தத் தீ விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள். அதேபோன்று,

பெரம்பலூர் மாவட்டத்திலே திருமானூரிலே கடந்த மாதம் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. அந்தத் தீ விபத்தை விசாரிக்கப் போனபொழுதும், அங்கே மின்சாரக் கம்பிகளால் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். குறிப்பாக, ஏழையெளிய மக்கள் வசிக்கும் கிராமப் பகுதிகளிலே அங்குள்ள மின்சாரக் கம்பிகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன, அறுந்து விழும் அபாய நிலையில் இருக்கின்றன. அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்து கொடுக்குமாறு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். ஆழிப் பேரலை வந்தாலும், வறட்சி வந்தாலும் முதலில் பாதிக்கப்படுகின்ற மாவட்டம் கடலூர் மாவட்டம். கடலூர் மாவட்டத்திலே S.G.R.Y என்ற திட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால், அங்கே சாலை போடுதல், சமூகக் கூடங்கள் கட்டுதல் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர முடியாத நிலை உள்ளது. எனவே, அந்தத் திட்டத்தை மறுபடியும் அந்த மாவட்டத்திற்கு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோமூலமாகக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் பெற்ற தாழ்த்தப்பட்ட மக்களின் கடன் தொகையைத் தள்ளுபடி செய்ய முடியாது என வங்கிகள் மறுத்து வருகின்றன. தாட்கோ வழங்கிய விளிம்புத் தொகை, margin money என்று கூறுகிறார்களே, அதைத் திருப்பிச் செலுத்தினால்தான் கடன் தொகையைத் தள்ளுபடி செய்ய முடியும் என்று கூறி வருகின்றனர். தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ள ரூ.6 ஆயிரம் கோடியில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் 5 விழுக்காடுகூட பயன் பெற மாட்டார்கள். நிலமற்ற அந்த மக்கள் விவசாயக் கடன்களை அதிகம் வாங்கியதில்லை. கடன் பெற்றுள்ள ஒரு சிலருக்கும்கூட இப்படியான பாரபட்சம் காட்டப்படுவது முறையா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசு பரிசீலித்து, தாட்கோமூலமாகக் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களையும் தள்ளுபடி செய்ய உத்தரவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைச் செம்மொழி என்று அறிவிக்க வேண்டுமென முதலில் குரல் கொடுத்தவரும், நூறாண்டுகளுக்கு முன்பே சூரியநாராயணசாஸ்திரி என்ற தனது பெயரை, வடமொழிக் கலப்பு இல்லாமல் பரிதிமாற்கலைஞர் என்று இனிய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டவருக்குச் சிறப்புச் செய்த அந்த முயற்சியை, தமிழக முதலமைச்சரை விடுதலைச் சிறுத்தைகள் சார்பாகவும், தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாகவும் மனதாரப் பாராட்டுகிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கங்களில், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுத்துச் சென்ற இனிய தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொண்டதைப் பின்பற்றியும், சென்ற அரசு கொண்டு வந்த மதமாற்றத் தடுப்புச் சட்டத்தை எதிர்த்தும் 'இந்துப் பெயர்களை மாற்றுவோம், இனிய தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவோம்' என்று அறிவிப்புச் செய்த எங்கள் பொதுச் செயலாளர் அண்ணன் திருமாவளவன் அவர்களின் அறிவிப்பை ஏற்று பல்லாயிரக்கணக்கான தமிழர்கள், இளைஞர்கள் தங்களுடைய பெயரை இனிய தமிழ்ப் பெயராகச் சூட்டிக்கொண்டார்கள். புதிய திரைப்படங்களுக்குத் தமிழிலே பெயர் சூட்டப்பட்டால் கேளிக்கை வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்படும் என்பதுபோல், இனிய தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக்கொண்டவர்களுக்கு அரசிதழில் பதிவு செய்ய, இலவசமாக, கட்டணம் இல்லாமல் நீங்கள் விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் தமிழ்ப் பெயர் சூட்டிக்கொண்ட வேளையிலே, அரசு அதிகாரிகளைச் சந்தித்து நாங்கள் தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக்கொண்டோம், எங்களுக்கு Gazette–லே பதிவு செய்வதற்கு மனுக் கொடுங்கள் என்று கேட்டோம். ஒரு முறை, இரண்டு முறை அந்த மனுவைக் கொடுத்து, நாங்கள் பூர்த்தி செய்து கொடுத்து, தமிழ்ப் பெயர்களாக மாற்றிக்கொண்டோம். ஒரு வாரம், இரு வாரம் கழித்து, இன்னும் ஆயிரக்கணக்கான பெயர்களைத் தமிழ்ப் பெயர்களாக மாற்ற வேண்டும் என்று அங்கே அந்த அதிகாரியைச் சந்தித்துக் கொடுத்தபோது சொன்னார், நீங்கள் முன்பு அளித்த கட்டணத்தைவிட இரண்டு மடங்கு கட்டணம் அதிகமாகக் கொடுத்தால்தான் தமிழ்ப் பெயரை Gazette–லே வெளியிடுவோம் என்று கூறினார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தமிழகத்திலே வசித்துக்கொண்டிருக்கிறோம், தமிழகத்திலே

வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தமிழ்ப் பெயரை மாற்றுவதற்கு எப்படி அந்த அதிகாரிகள் கட்டணத்தை இரண்டு மடங்காக உயர்த்தினார்கள் என்று இந்தப் பேரவைக்கு நீங்கள் தெரியப்படுத்த வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு கட்டணமாக இருந்தது, அதை இரண்டு மடங்கு உயர்த்திய பிறகு எவ்வளவு ஆனது என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 220 ரூபாய் என்று கட்டணம் இருந்ததை 445 ரூபாயாக மாற்றி, திருத்தியமைத்து அதை வாங்கினார்கள். அதற்குப் பிறகு எங்களை ஊக்குவிக்க ஆளில்லை. இதை எடுத்துச் செல்வதற்கு ஆளில்லாமல், அந்தப் பெயர் மாற்றம் செய்த இளைஞர்கள் எல்லாம் Gazette–லே பதிவு செய்ய முடியாமல் இன்று வரை காத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு தமிழ்ப் பெயர்களை யார், யார் எல்லாம் சூட்டிக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு முழு விலக்கு அளிக்கப்படும் என்பதை அறிவிக்குமா என்பதை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 220 ரூபாயாக இருந்த கட்டணத்தை தமிழ்ப் பெயர் சூட்டிக்கொள்வதற்காக ரூ.445 ஆக ஆக்கியிருந்தால், அது தமிழுக்குத் தரப்பட்ட தண்டனை என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. அந்தத் தண்டனையை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது. அந்தத் தண்டனையை விலக்கி, பெயரை மாற்றிக்கொண்டதற்கு அடையாளமாகப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு கட்டணம் தர வேண்டும் என்ற நிலையில், 50 ரூபாய் செலுத்தினால் போதும் என்று இந்த அரசு அறிவிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

*முறபகல் 11–50*

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் சார்பாகவும், தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின்

சார்பாகவும், விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர், என் அருமை அண்ணன் திருமாவளவன் சார்பாகவும், தமிழக முதல்வருக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் வாயிலாக, அதன் தலைவராக இருக்கின்ற எங்கள் இயக்கப் பொதுச் செயலாளர், என் அண்ணன் திருமாவளவன் அவர்கள் நான்கு திசைகளிலேயிருந்து மொழிக்காகப் போராட வேண்டும் என்று ஊர்திப் பயணத்தை மேற்கொண்டார்கள். அந்தப் பயணத்தின் வாயிலாக, சென்னையிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ஐயா தமிழ்க் குடிதாங்கி அவர்களும், புதுவையிலிருந்து எங்கள் இயக்கப் பொதுச் செயலாளர் அண்ணன் திருமாவளவன் அவர்களும், நான்கு திசைகளிலேயிருந்து நான்கு தலைவர்களும் அந்தத் தமிழ் ஊர்திப் பயணத்தை மேற்கொண்டார்கள். நாங்கள் ஏற்கெனவே எட்டு கோரிக்கைகளை வைத்துப் போராடி வந்தோம். அவற்றில் இரண்டு கோரிக்கைகளை நமது தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவருக்கு இன்னொரு முறை தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும், நீதிமன்றங்களிலே தமிழில் வாதாட உத்தரவிட வேண்டுமென்று நாங்கள் கோரியிருந்தோம். காமராஜர் ஆட்சியின் காலத்திலே, 1956-ல், தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் சட்டப் பேரவையில் சட்டமாக்கப்பட்டது. அரசின் தூணாக விளங்கும் அதிகாரப் பிரிவினர் ஆங்கில விரும்பிகளாக இருப்பதாலும், தமிழர்கள் போதிய விழிப்புணர்வு இல்லாது இருப்பதாலும், அன்னைத் தமிழ் அனைத்துத் துறைகளிலும் அரசாட்சி செய்ய முடியாமல் இருக்கிறது. மேற்கூறிய 1956 சட்டப் பிரிவு, 4-ன்படி, தமிழக அரசு 1967-ல் தமிழ்நாட்டில் உள்ள கீழாமை வழக்குமன்றங்களில் சாட்சியங்கள் மட்டுமே தமிழில் பதிவு செய்ய அரசாணை எண் 2087-ன்படி செயலாக்க உத்தரவிடப்பட்டது. மேலும், மேற்கூறிய 1956 சட்டப் பிரிவு 4-ன்படி, 14-11-1976 முதல் தமிழகக் குற்றவியல் கீழாமை வழக்குமன்றங்களிலே மட்டும் வழங்கப்படும் தீர்ப்புகள் தமிழிலே இருக்க வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், இன்று அந்த ஆணை முழுமையாகச் செயல்படாமல் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தையும், தமிழை வளர்க்க வேண்டும் என்று பேசிய எங்களையும் கிண்டலடித்த சிலருக்குக் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம், 1978—ல் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் வழக்குமன்றம் ஒன்றில் சொத்துரிமை பற்றிய வழக்கில் தமிழில் தீர்ப்பு வழங்கப்பட்டது. தமிழில் தீர்ப்பு வழங்கியதால், அந்தத் தீர்ப்பு செல்லாது என 1982—ல் உயர் வழக்குமன்றம் சட்டப்படியே ரத்துச் செய்துவிட்டது. உயர் வழக்குமன்றத் தீர்ப்பால் விழித்துக்கொண்ட தமிழக அரசு, 1982—ல் மீண்டும் ஒரு ஆணையை 1956 சட்டப்படி பிறப்பித்தது. தமிழ்நாட்டிற்கு மட்டுமே உரித்தான சென்னை உயர் வழக்குமன்றத்தில், இன்றைக்கும் சென்னை உயர் வழக்குமன்றம் அல்லது தமிழக உயர் நீதிமன்றம், சென்னை என்று ஆங்கிலத்தில்கூட தலைப்பிட்டு, விண்ணப்பமோ, வழக்கோ போட்டால் உடனே தள்ளுபடியாகும் நிலை இருக்கிறது. The High Court of Judicature at Madras என்றுதான் சட்டப்படி வேறு வகையிலே எழுதினால், நிராகரிக்கப்படும் நிலையிலே இருக்கிறது. 1956 சட்டத்திற்குப் பிறகும் இன்னும் நடைமுறையில் இருக்கின்ற இதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்ட அமைச்சரிடம் தெரிவிக்க வேண்டும்.

மத்திய அரசு, Official Languages Act—முறையார்ந்த மொழிச் சட்டம் 1963—ல் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டது. அதன் பிரிவு 7—ன்படி, 26—1—1965—வது தேதியிலிருந்தோ, அத்தேதிக்குப் பின்போ மாநில ஆளுநர்மூலம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, அம்மாநிலத்து மொழியை உயர் வழக்குமன்றங்களில் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்பட்டது. இதே உரிமை, அரசியல் சாசனப் பிரிவு, 348 (2)—லும் ஏற்கெனவே உள்ளது. ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் உயர் நீதிமன்றங்களிலே இந்தியும், வங்காளமும் வழக்குமன்றத்திலே 1997—க்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

*முற்பகல் 11—55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்றால், அது இயலக்கூடியதாக இல்லை. உயர் நீதிமன்றத்தின் மொழியாக முற்றிலும் தமிழ் இருக்க அரசியல் சட்டத்தில் இடமில்லை. ஆனால், தமிழ் பயன்படுத்த வழி இருக்கிறது. அலகாபாத் உயர் நீதிமன்றத்தில்

பல ஆண்டுகளுக்கு முன்னர், உயர் வழக்குமன்றத்தில் இந்தியைப் பயன்படுத்துவது தொடர்பாக ஒரு உசா (வழக்கு) வந்தது. அதாவது, 1976 ஆம் ஆண்டே வந்தது. விண்ணப்பம் ஒன்று இந்தி மொழியிலே தயார் செய்யப்பட்டு, அலகாபாத் உயர் நீதிமன்றத்திலே பதிவு செய்யப்பட்டது. இந்தி மொழியிலே பதிவு செய்யப்பட்ட மனுவை ஏற்றுக்கொள்ளலாமா, கூடாதா என்ற சிக்கல், வழக்கை அனுமதிப்பதற்கு முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்டது. இரண்டு நடுவர்கள் கொண்ட ஈராயம் அதைக் கேட்டது. இங்கிலாந்தில் ஆங்கிலத்தின்மீது பிரெஞ்ச் மொழியும், லத்தீன் மொழியும் மேல் ஆளுமை செய்த விளக்கங்களை எல்லாம் குறிப்பிட்டு, அன்று இங்கிலாந்தில் இருந்த நிலையிலே இன்று இந்தியா இருப்பதைக் கருதிய நடுவர்கள், பின்னர், அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே சிக்கலைப் பார்த்தார்கள்.

அரசியல் சட்டத்தின் 348 ஆம் பிரிவில் 2-வது உட்பிரிவு, இந்தி மற்றும் மாநில மொழிகள் உயர் வழக்குமன்றத்தில் பயன்படுத்தப்பட வழி செய்கிறது என்று நடுவர்கள் முடிவுக்கு வந்தார்கள். அதே சமயம் நடுவர் ஆங்கிலத்தில் ஆணை அல்லது தீர்ப்பு வழங்குவதைத் தடுத்து நிறுத்த முடியாது என்று சுட்டிக்காட்டினார்கள். உயர் வழக்குமன்றத்திலே, இந்தி அல்லது பிற மொழிகள் பயன்படுத்தப்படுவது என்பது வேறு. வழக்குமன்றம் தன் ஆணையை அதே மொழியில் தர வேண்டும் என்று வற்புறுத்துவது வேறு. இதை வேறு வகையாகச் சொல்வதானால், உயர் வழக்குமன்றத்தினுடைய அரசியல் சட்டப் பிரிவு 301 மற்றும் 345-ல் குறிப்பிடப்பட்டவாறு, ஆங்கிலமே இருக்கும். ஆனால், அதே சமயம் இந்தியை அல்லது மாநில மொழியைப் பயன்படுத்தலாம். அதாவது விண்ணப்பத்தை இந்தியில் பதிவு செய்யலாம் என்று கூறியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரப்பிரதேச மாநிலத்தைப் பொறுத்தவரை, 5-9-1969-ல் அப்போதைய ஆளுநர் அரசியல் சட்டப் பிரிவு 38, உட்பிரிவு 2-ன் தேவைக்கு ஏற்ப, இந்தியை உயர் வழக்குமன்றத்தில் பயன்படுத்த குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு ஆணை பிறப்பித்தார். அந்த ஆணை இந்தியைப் பயன்படுத்த வழி செய்கிறது. அதே சமயம், நடுவர் ஆங்கில மொழிபெயர்ப்புக் கேட்டால், கொடுக்கவும் வழி செய்கிறது. இறுதியில், இந்தி ரிட் மனு தாக்கல் செய்யலாம் என்று அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் நடுவர்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கிலாந்து நாட்டில் 18 ஆம் நூற்றாண்டு வரை ஆங்கிலம் வழக்குமன்ற மொழியாக இருந்ததில்லை. ஆங்கிலேயர்கள் தொடர்ந்து சுமார் 500 ஆண்டுகள் போராடிய பிறகே, 1731 ஆம் ஆண்டு இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஆங்கிலமே வழக்குமன்ற மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. பயன்படுத்தத் தவறினால், 50 பவுண்டு தண்டம் எனவும் சட்டம் இயற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நிலையில், தமிழை நாம் உயர் நீதிமன்றத்திலே பயன்படுத்த முடியவில்லை. ஒருவர் உயர் நீதிமன்றத்திலே சென்று, உன்னுடைய வழக்கு வெற்றி பெற்றதா, தோல்வி அடைந்ததா என்று கேட்கும்பொழுது, அந்தக் கிராமவாசி சொல்கிறார், என்னுடைய வழக்கறிஞர் இரண்டு முறை மேடையைத் தட்டினார். ஆகையால் நான் வெற்றி பெற்று விடுவேன் என்று அந்தக் கிராமவாசி சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் இருக்கும் இந்த அவையிலே இதற்குக் கண்டிப்பாக நீங்கள் சட்டம் இயற்ற வேண்டும். தமிழ் அன்னையை நீங்கள் காக்க வேண்டுமென்று கோரி, தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஏற்கெனவே பல போராட்டங்களைச் செய்திருக்கிறோம். அதன் வாயிலாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர் நீதிமன்றத்திலும் தமிழ் ஆட்சிமொழியாகவும், வழக்கு மொழியாகவும் நடைமுறைப் படுத்தப்பட சட்டத் திருத்தம் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சவலைக் குழந்தைகள். எங்களுடைய கருத்துகளை இங்கே சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் நிறைய நேரம் எடுத்துக்கொண்டீர்கள். உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கு. செல்வம்:** பேரறிஞர் அண்ணாவின் தம்பியான கலைஞர் அவர்களின் தம்பி நீங்கள். அனுமதிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு

முதல்வர் அவர்களின் முயற்சியால் பொறியாளர்கள் படிப்புக்கான பாடத் திட்டம் தமிழ் வழியில் படிக்க ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட பாடத் திட்டங்கள் கிடப்பில் கிடக்கின்றன. இந்த ஆண்டு இதை நடைமுறைப்படுத்த முனைப்பு எடுத்தால், 12 ஆம் வகுப்பு வரை தமிழில் படித்து வரும் மாணாக்கர், உயர் கல்வியும் தமிழிலே படிக்க முடியும். தமிழ் வழியிலே படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் கட்டாயம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அகதிகள் முகாம்களுக்குத் தற்பொழுது மத்திய அரசின் சார்பில் 200 ரூபாயும், அதைச் சேர்த்து தமிழக அரசு 200 ரூபாயும் கொடுக்க முன்வந்ததை மனமாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். ரூ. 34.51 கோடி ஒதுக்கீடு செய்து அகதிகள் நிவாரண உதவிகள் செய்ய முன்வந்துள்ளதைப் பாராட்டுகிறோம்.

ஈழத் தமிழர்களின் ,பிரச்சினையில், குறிப்பாக, தெளிவான ஒரு முடிவினை இந்தப் பேரவை எடுக்க வேண்டும். நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டும் என்று சொல்லும் தமிழக அரசு, ஒரு விஷயத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்காக நாம் எத்தனை முறை கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்போம். பேச்சுவார்த்தையில் நமக்குக் கிடைத்த பாடம் நன்கு அறிந்திருக்கிறோம். அதனால்தான் நடுவர் மன்றத்தை நாம் நாடியிருக்கிறோம். அங்கும் தீர்வு ஏற்படவில்லை. நமக்கே இந்த நிலை என்றால், ஈழத் தமிழர் நிலை எந்த அளவிற்கு அவர்களுக்குப் பாதிப்பை சிங்கள வெறியர்களால் ஏற்படுத்தியிருக்கும் என்பதை நாம் உணர வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை என்று காலம் கடத்துவதைவிட, அங்கு நிரந்தரத் தீர்விற்குத் தாய்த் தமிழகம் எடுக்கும் முடிவே...

நண்பகல் *12—00*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் செல்வம் அவர்கள் நீண்ட நேரம் பேச வேண்டும் என்று விரும்புகிறார். இடையிடையே இந்த 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' என்ற வாக்கியத்தைத் தவிர்த்தால் அதில் ஒரு ஐந்து நிமிடம் மிச்சமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள் சார்.*

**திரு. கு. செல்வம்:** ...ஈழத் தமிழர் வாழ்வுரிமையை மீட்டுத் தரும். அதற்கு மேற்கு வங்காளம் பாடமாக அமைந்துள்ளது. வங்க தேசத்தில் வங்காளிகள் தாக்கப்படும்போது, மேற்கு வங்காளத்தின் முதலமைச்சர், காங்கிரஸ் முதலமைச்சராக இருந்த சித்தார்த்த சங்கர் ரே டெல்லியைப் பார்த்து, உங்கள் இராணுவத்தை அனுப்புவீர்களா, அல்லது எங்கள் காவல் துறையை அனுப்பவா என்று கேள்வி எழுப்பியதன் விளைவாக, இந்திய இராணுவம் சென்று அங்கே வங்க தேசத்தை மீட்டுக் கொடுத்தது. இன்று ஈழர் பிரச்சினையில் அந்த மாதிரி முடிவெல்லாம் எடுக்கத் தேவையில்லை. ஈழத் தமிழர் பற்றி சட்டசபையிலே தீர்மானம் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நமது 40 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்த குரல் கொடுத்தால் போதும், ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்.

ஆழிப் பேரலை தாக்கியபோது சென்னையை அடுத்த ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கண்ணகி நகரில் இன்னும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படாத ஒரு அவல நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

நூறு கோடி ரூபாயில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளை வாங்குவதாக நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சகம் தெரிவித்திருக்கிறது. எத்தனை பேருந்துகள் வாங்கினாலும் அவற்றைச் சரியான நேரத்தில்—குறிப்பாகக் காலையிலே குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்லும் நேரத்திலும், மாலையிலே வீடு திரும்பும் நேரத்திலும், மாலையிலும், இரவிலும் கிராமவாசிகள் வீடுகளுக்குத் திரும்பும் நேரத்திலும் அந்தப் பேருந்துகளை—இயக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997—98—ல் நடந்த கோவை வன்முறைச் சம்பவம் தொடர்பாக, குற்றமற்ற அப்பாவிகள் 167 பேரில் 110—க்கும் மேற்பட்டவர்கள் சிறையில் இருக்கிறார்கள். விசாரணை முடிந்தும் வெளியே விடாமல் சிறையில் அடைத்திருப்பது எந்த வகையில் நியாயமாகும் என்பதைக் கேட்டுக்கொள்கிறோம். ஆகவே, அப்பாவி இஸ்லாமியர்களை விடுதலை செய்யத் தமிழக அரசு முயற்சிக்க வேண்டும்.

முதல்வர் மற்றும் பிரதமர் போன்ற வலுவான அதிகாரம் மிகுந்த பதவிகளை நேரடியாக மக்களே தேர்ந்தெடுக்கும் முறை வர வேண்டும் என்கிற கருத்துடையவர்கள் நாங்கள். அதுதான் ஜனநாயகத்தின் உயர்ந்த நிலைப் பரிணாமமாகும். அந்த வகையிலே உள்ளாட்சி நிர்வாகத்தில் மேயர், நகரமன்றத் தலைவர் பதவிகளுக்கு நேரடித் தேர்தல் முறையைத் தொடர்ந்து அமல்படுத்த வேண்டும் என்ற அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டுவதற்காக, கடந்த அரசு ஓர் அறிவிப்பை அறிவித்திருந்தது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன், பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த அரசு தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டுவதாக அறிவிப்புச் செய்திருந்தது. அந்த நினைவு மண்டபம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூற வேண்டும்.

தமிழ்த்திரு அயோத்திதாச பண்டிதர் அவர்கள் 1907 ஆம் ஆண்டு தமிழகத்தில் தொடங்கிய தமிழர் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர். அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதனால் அவருடைய வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. அவருடைய வரலாற்றையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்கு அறிந்துள்ளார்கள். ஆகவே. தமிழ்த்திரு அயோத்திதாச பண்டிதர் அவர்களது நினைவாக சென்னைக் கடற்கரையில், காமராஜர் சிலை அருகிலே சிலை வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த காலங்களில் தண்டனை பெற்றிருக்கும் சிறைவாசிகளைத் தமிழக அரசு, பேரறிஞர் அண்ணா, மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாட்களிலே சிறை நன்னடத்தையைத் தெரிந்துகொண்டு தண்டனையைக் குறைத்து விடுதலை செய்வார்கள். அது இப்போது நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, மீண்டும் சிறைவாசிகளைப் பெருந்தலைவர் பிறந்த நாளில் தண்டனையைக் குறைத்து விடுதலை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலைத் தீட்சிதர்கள் என்னும் தனி நபர்களிடமிருந்து மீண்டும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறோம். அக்கோயிலில் தேவாரம் பாடிய பெரியவரை அங்கு பாட விடாமல் தடுத்து இழிவுபடுத்திய தீட்சிதர்களைத் தமிழக அரசு கைது செய்ய வேண்டும்.

கோயில்களிலே தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற வாசகம் நீக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். மனமார, நெஞ்சாரத் தமிழக முதல்வரைப் பாராட்டுகிறோம். அதே சமயத்தில், தமிழில் மட்டும்தான் அர்ச்சனை செய்யப்படும் என்ற பலகையை அங்கு வைக்க நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதித் துறையில் சமூக நீதி அடிப்படையிலே பிரதிநிதித்துவம் இல்லாத தமிழர்களுக்கு, உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் மத்தியிலே சமூக நீதி அடிப்படையிலே பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விகிதாச்சார அடிப்படையிலே பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். கிராமங்கள்தோறும் கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12–05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதாவூர். சிறுதாவூர் பகுதியிலே நிலங்களைப் பறிகொடுத்த தலித் மக்களுக்காகப் போராட முன் வந்திருந்த அரசியல் கட்சிகள், மற்ற தலைவர்களுக்கு எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அத்துடன் அந்தப் பிரச்சினை தொடர்பாக விசாரணை கமிஷன் நியமித்திருக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவைத் தலைவர் அவர்களே, அதே வேளையில், நாடு தழுவிய அளவில் இலட்சக்கணக்கான பஞ்சமி நிலங்கள் தலித் மக்களிடமிருந்து பிடுங்கப்பட்டிருக்கின்றன. வீட்டுமனைகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. உரிமை, உடைமைகளை இழந்த

எண்ணிலடங்காத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொரு நாளும் இரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும்போது, அவற்றையெல்லாம் பொருட்டாக மதிக்காதவர்கள், சில அரசியல் கட்சிகள், இன்றைக்கு சிறுதாவூரில் பாதிக்கப்பட்ட 20 தலித் குடும்பங்களுக்காக இத்தகைய திடீர்க் கரிசனம் காட்டுவதை நாங்கள் மனதில் ஏற்றுக்கொண்டு, வரவேற்கிறோம்.

செங்கல்பட்டு அருகே காரணை என்ற இடத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** இது திடீர்க் கரிசனம் அல்ல. செங்கொடியோடு, செங்கொடி இயக்கத்தின் தொப்புள்கொடியோடு சேர்ந்து பிறந்த உறவு என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கமும், தேசிய இயக்கத் தலைவர்களும் தொடர்ந்து இதைக் கையில் எடுத்திருக்கிறார்கள் என்பதையும் பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** அதேபோன்று, செங்கல்பட்டு அருகே காரணை என்னுமிடத்தில், 639 ஏக்கர் பஞ்சமி நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்காகப் போராடிய மக்கள்மீது தடியடி நடத்தி, சான் தாமஸ், ஏழுமலை ஆகியோர் சுட்டுத் தள்ளப்பட்டபோது, தமிழகமே அமைதி காத்தது. அன்றைக்கெல்லாம் வாய் திறக்கவில்லையே என்ற கவலைதான் எங்களுக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தலித் கிறித்துவர்களை அட்டவணைப் பிரிவில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது. தமிழக அரசு இது தொடர்பாக மத்திய அரசை வலியுறுத்தி, தலித் கிறித்துவர்களை அட்டவணைப் பிரிவில் சேர்க்க உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். கிறித்துவ மதத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளிட்ட சேரிவாழ் மக்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில்தானே சேர்க்க வேண்டும்? இவர்களை அதற்கு மேலாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வைத்திருப்பது நியாயமாகுமா? அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன், நீங்கள் பேசுகிறீர்களா? அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லவா? (குறுக்கீடு) ஏன் உரையை முடிக்க மாட்டேன் என்கிறீர்கள்? எத்தனை முறை, உரையை முடியுங்கள் என்று சொல்லிவிட்டேன்?

**திரு. கு. செல்வம்:** தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் அதிகாரம் இந்திய அரசின் கைகளில் உள்ளதால் தமிழக அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, கிறித்துவ தலித்துகளை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதுதானே முறையாகும்? ஆகவே, கிறித்துவ மதத்தைத் தழுவிய தலித்துகள் மற்றும் மறவர், நாடார், பிரமலைக் கள்ளர், வன்னியர் ஆகியோரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பனை மரத் தொழிலாளர்களுக்கு ஆந்திராவைப்போல் கள் இறக்கி விற்கும் உரிமம் தமிழகத்திலே அளிக்கப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களான கிறித்துவ பரதவர்களை, பிற மீனவர்களைப்போல மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன். (குறுக்கீடு) திரு. கண்ணப்பன், இப்போது பேசுகிறீர்களா? அல்லது சிவபுண்ணியம் பேசட்டுமா? (குறுக்கீடு) திரு. கண்ணப்பன், பேசுங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளபடி, மொத்தப் பற்றாக்குறை 7,231 கோடி ரூபாய். இந்தப் பற்றாக்குறையை நிகரக் கடன்களாலும், எதிர்பாராச் செலவு நிதியினாலும் எதிர்கொள்ளலாம் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. நிகரக் கடன் என்று பார்த்தால், 31-3-2006 அன்று அரசின் கடன்கள் 56,094 கோடி ரூபாய். அதற்காக வட்டி மாதந்தோறும் 446 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கடன்களும், இந்தப் பற்றாக்குறைக்கும் சேர்ந்து கடன் வாங்குவதானால் அரசின் மொத்தக் கடனும், வட்டியும் உயரும். எனவே, மிகக் குறைந்த சதவீதமே பற்றாக்குறை உள்ள வரவு-செலவுத் திட்டம் என்று எங்களாலே இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

விவசாயிகளினுடைய கூட்டுறவுக் கடன் 6,866 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து, அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த சில குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கின்றது. பல கூட்டுறவு நிறுவனங்களில் விவசாயிகளினுடைய பெயரால், அந்த விவசாயிகளுக்கே தெரியாமல், பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் விவசாயிகளினுடைய பெயரைப் பயன்படுத்தி, பினாமியாக இலட்சக்கணக்கான ரூபாயைக் கடனாக வாங்கி, அது இப்போது அரசாங்க அறிவிப்பு வந்து, சம்பந்தப்பட்ட விவசாயிக்கு அந்த அறிவிப்பு போய்ச் சேரும்போது, நான் கடனே வாங்கவில்லையே, எப்படித் தள்ளுபடி ஆயிற்று என்று விவசாயி திகைக்கக்கூடிய ஒரு நிலைமை பற்றி கோவை மாவட்டத்திலே பல இடங்களிலே எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இவையெல்லாம் இப்போது வாங்கிய கடன் அல்ல. கடந்த காலத்திலே வாங்கப்பட்ட கடன்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

பிற்பகல் 12—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** நான் தி.மு.க. ஆட்சியையோ, அண்ணா தி.மு.க. ஆட்சியையோ குறிப்பிடவில்லை. இந்தக் கடன்கள் எல்லாம் வாங்கி 15 ஆண்டுகள், 13 ஆண்டுகள், 10 ஆண்டுகளுக்குக்கூட மேலாகி இருக்கின்றன. ஆகவே, கட்சிப் பிரச்சினையைப் பேசுவதற்கு, அரசியல் பேசுவதற்கு நான் முன்வரவில்லை. இருக்கக்கூடிய யதார்த்தமான உண்மைகளை இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, விவசாயிகள் பெயரில் அதிகாரிகள் வாங்கியது மட்டுமல்ல, வேறு சிலரும் அவர்களுடைய பெயர்களைப் பயன்படுத்தி, அதிகாரிகளுடைய துணையோடு கோடிக்கணக்கான ரூபாய்களைக் கூட்டுறவு நிறுவனங்களிலே இருந்து பினாமியாகப் பெற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற அறிவிப்பு வெளியிட்டதிலேயே ஒரு அறிவிப்பையும் வெளியிட்டார்கள். அந்தச் சங்கங்களில்

யார், யாருக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற பட்டியலைத் தயாரித்து அந்தச் சங்கங்களுக்கு முன்னால் ஒட்டப்பட வேண்டும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், நாங்கள் கிட்டத்தட்ட 600, 700 ரூபாய் செலவாக இருந்தாலும் பரவாயில்லை என்று எல்லா இடங்களிலும் டிஜிட்டல் போர்டு எழுதப்பட்டு, அவை வைக்கப் பட்டிருக்கின்றன. அதிலே யாராவது கடன் வாங்காதவர்களுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்குமானால், அவர்கள் கோரிக்கை கொடுக்கலாம். இதுவரை எந்தக் கோரிக்கையும் எழுத்துமூலம் எங்களுக்கு வரவில்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப்போல், எப்படியாவது அந்த நிலவரங்கள் அவருக்குத் தெரியுமானால், சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டு அழைத்துப் பேசி, அதை எழுதி வாங்கி எழுத்துமூலம் எனக்கு அனுப்பினால், நிச்சயமாக இந்த அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி வெளியிலே Notice Board-லே அந்தப் பெயர்கள் போடப்பட்ட பிறகுதான், தன்னுடைய பெயரும் அதில் இருக்கிறது என்று கடன் வாங்காத விவசாயிகள் தெரிந்துகொண்டு, அந்தத் தகவல்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் மாறுபட்டுச் சொல்லவில்லை. ஆகவே அந்த உண்மையான நிலைமைகளை விசாரித்து, யார், யாருடைய பெயர்கள் அப்படி இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விரைவில் நான் எழுதி அனுப்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குக் கட்டுப்படியாகாத நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு கடனை நாம் தள்ளுபடி செய்து புதிதாகக் கடன்களை விவசாயிகளுக்குத் தருகிறோம். மீண்டும் கடனாளியாகித்தான் விவசாயத் தொழிலை அவன் தொடங்குகிறான். ஆனால் என்ன நிலைமை இருக்கிறது? வேளாண் விளைபொருட்களைத் தவிர அனைத்துப் பொருட்களுக்கும் அவற்றின் உற்பத்தியாளர்களே விலையை நிர்ணயம் செய்கிறார்கள். சாதாரணமாக ஒரு செருப்பு, கடையிலே போய் வாங்குவது என்று சொன்னாலுங்கூட, அதை உற்பத்தி செய்தவர்கள்தான் 399 ரூபாய் 99 பைசா என்று போடுகிறார்கள்.

ஆனால் விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய எந்தப் பொருளுக்கும் விவசாயி விலை நிர்ணயம் செய்யக்கூடிய நிலைமை இன்றைக்குக் கிடையாது. அதனாலேதான், தான் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விவசாயி விலையை நிர்ணயம் செய்ய முடியாத காரணத்தால், இடைத் தரகர்கள் நிர்ணயம் செய்கிறார்கள். கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைப்பதில்லை. நஷ்டம் ஏற்படுகிறது. வாங்கிய கடனைக் கட்ட முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயி உற்பத்தி செய்கின்ற எல்லாப் பொருட்களுக்கும் மத்திய அரசாங்கத்தின்மூலம் ஒரு விலை நிர்ணயிக்கப்படுகிறது; அதைத்தான் எல்லா மாநிலங்களிலும், அரசாங்கம் கொள்முதல் செய்கிறபோது, அது இந்த விலைக்கு விற்கப்பட வேண்டும் என்று நாம் முடிவெடுக்கின்றோம். ஆனால், தமிழ்நாட்டிலே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும், விலையை அவர்களே நிர்ணயிக்க வேண்டும்; அதே நேரத்தில் நுகர்வோருக்கும் குறைந்த விலையில் பொருள் கிடைக்க வேண்டும் என்று, 1996–லே நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள், 103 உழவர் சந்தைகளை முதல் கட்டமாகத் தொடங்கினார். அதன்மூலம் விவசாயிகளும் பயன்பெற்றார்கள்; நுகர்வோர்களும் பயன்பெற்றார்கள். பொது மக்களுடைய பாராட்டுதல் இருந்தது. அந்த உழவர் சந்தை முடக்கப்பட்டது. அது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கருதுகிறார்?

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. மு. கண்ணப்பன்:** உழவர் சந்தை நிச்சயமாக விவசாயிகளுக்கு நல்ல பயனைக் கடந்த காலத்திலே கொடுத்தது. மூடப்பட்ட அந்த உழவர் சந்தைகள் இன்றைக்கு விவசாயிகளுக்குப் பயன்படுவதில் என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய சர்க்கார் ஏற்கெனவே விவசாயிகளுடைய விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யலாம் என்ற ஒரு குழுவை

ஏற்படுத்தி, அது இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஆனால், யதார்த்தமான நிலைமைகள் அந்தக் குழுவிற்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. மத்தியிலேயிருந்து வரக்கூடிய அதிகாரிகள்—அந்தக் குழுவிலே விவசாயிகளினுடைய பிரதிநிதி கிடையாது. யாரோ நான்கு அதிகாரிகள் உட்கார்ந்து, கம்புக்கு என்ன விலை? சோளத்திற்கு என்ன விலை? அதே மாதிரி ராகிக்கு என்ன விலை? மிளகாய்க்கு என்ன விலை என்று அவர்கள் நிர்ணயம் செய்யும்போது, விவசாயிகளினுடைய உண்மையான செலவு எவ்வளவு ஆகிறது, கட்டுப்படியாகக்கூடிய விலை என்ன என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே, அந்தக் குழுவை மாற்றியமைத்து, மாநில அரசாங்கமே ஒரு குழுவை நியமிக்க வேண்டும். விவசாயத் துறை நிபுணர்கள், நல்ல பண்பட்ட விவசாயிகள் அந்தக் குழுவிலே இடம் பெற்று, மாதந்தோறும் அந்தக் குழு கூடி, என்னென்ன விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறதோ, அந்த விவசாய விலை நிர்ணயித்ததனுடைய முடிவை, ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலேயும், கிராமந்தோறும் Notice Board—லே போடவேண்டும். பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் இடைத் தரகர்கள் விவசாயிகளை ஏமாற்றுகின்ற நிலை குறையும். கடனாளியாக இருக்கக்கூடிய விவசாயி கடனைப் பெற்று மீண்டும் கடனைக் கட்ட முடியாமல், இன்னொரு நான்கு வருடம், ஐந்து வருடம் கழித்து, மீண்டும் இதேபோலக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்படாமல் இருப்பான். ஆகவே, அதைச் செய்ய வேண்டும். அதோடு, அரசாங்கம் நிர்ணயம் செய்யக்கூடிய விலைக்குக் குறைவாக நாட்டிலே விற்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டால், அதற்கான ஆதரவு விலையை அரசாங்கம் தந்து, அந்த நஷ்டத்தைக் காத்து, விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயப் பயிர்களுக்கு Insurance. அந்தத் திட்டம் ஏற்கெனவே மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், முழுமையாகச் செயல்படுத்தப்படுவதில்லை. வெள்ளத்தினால் சேதப்படுகிறது; வறட்சியினாலே அழிந்து போகிறது. ஆனால், தற்போது நடைமுறையிலுள்ள பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள், கிராமியக் காப்பீட்டுத் திட்டங்கள் ஆகியவற்றில் விவசாயிகளுக்கு எந்தப் பலனும் கிடையாது. இழப்பீடு பெறும் முறைகள் எளிதாக்கப்பட வேண்டும். Premium தொகை குறைக்கப்பட வேண்டும். காப்பீட்டுத் திட்டத்தில்

மானாவாரிப் பயிர்களையும் சேர்க்க வேண்டும். அப்படிச் செய்தால்தான், உருப்படியாக விவசாயிகளுக்கு இந்தப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தினாலே நன்மைகளைச் செய்ய முடியும். அது மட்டுமல்ல, பயிர்க் காப்பீடு செய்யப்பட்டால், அந்தப் பயிர்கள் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு உள்ளாகி அழிந்து போனால், காப்பீட்டு அலுவலர்கள் நேரடியாகப் பார்த்து, அந்த நஷ்டஈட்டை நிர்ணயம் செய்ய முடியாது. அரசாங்கம் வறட்சிப் பகுதி என்று அறிவிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களாலே செய்ய முடிகிற நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றது. இந்த இடர்ப்பாடுகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பற்றிய குறிப்பு எதுவும் நம்முடைய வரவு–செலவுத் திட்டத்திலே குறிப்பிடப்படவில்லை.

அதைப்போல, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம். சமீபத்திலே கேரள மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார். அந்தப் பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்தார். பார்த்துவிட்டு, தமிழ்நாடு அரசாங்கம் ஒப்பந்தப்படி எங்களுக்குத் தரவேண்டிய நீரைத் தரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை, நம்முடைய தமிழகத்தின்மீது கூறிவிட்டுச் சென்றிருக்கிறார். உண்மையிலேயே வறட்சி இங்கே வாட்டிக்கொண்டிருக்கின்ற நேரம். நமக்குப் போதுமான தண்ணீர் கிடையாது. ஆனால், அங்கே கடலிலே கலந்து தண்ணீர் வீணாகிக்கொண்டிருக்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால், அந்த அமைச்சர் இதைச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தைப் பொறுத்தவரையிலே, கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்கு முன்னர்லே கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டிலே இருந்துகொண்டிருக்கின்றது. விவசாயிகளுக்கு நான்கரை ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தண்ணீர் விவசாயத்திற்குக் கிடைக்கின்றது. அதற்குக் காரணம், அந்தத் திட்டம் முழுமையாக்கப்படவில்லை. ஆனைமலையாறு, நல்லாறு ஆகியவற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டும். ஆனால், கேரளா அரசு அதற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருக்கிறது. பல முறை பேசியும் அந்தப் பேச்சினால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று மிகுந்த பணிவோடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—20*

அதே மாதிரி பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்; தேர்தல் வந்தால், ஒவ்வொரு கட்சியும் இதைத் தேர்தல் அறிக்கையிலே சேர்ப்பது என்பது சாதாரணமாக இருக்கும் ஒன்று. ஆனால், நடைமுறையிலே உண்டா என்று கேட்டால் கிடையாது. கோவை மாவட்டத்திலே மேட்டுப்பாளையம், அவினாசி, பல்லடம், ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை, சென்னிமலை, காங்கேயம் போன்ற வறட்சிப் பகுதிகளுக்குப் பயன்படக்கூடிய ஒரு திட்டம். கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதை முடிப்பதற்கேற்ற சூழலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி இன்னொரு திட்டம். அத்திக்கடவு—அவினாசி திட்டம். அது பவானிசாகர் அணையில் மழைக் காலங்களிலே வெளியேறும் உபரி நீரைக் கால்வாய்மூலமாகத் திருப்பி, அங்கேயிருக்கக்கூடிய சுமார் 85 பெரிய குளங்கள், 500 பெரிய குட்டைகளிலே நிரப்பக்கூடிய திட்டம். இதற்குக் கேரளாவோடு பேசவேண்டிய அவசியம் இல்லை. 1996—1997 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, செய்யப் போகிறோம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அது நின்று போய்விட்டது. அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டம், நம்மாலேயே செய்ய முடிகின்ற திட்டம், இந்த வரவு—செலவுத் திட்டத்திலே இடம் பெறாதது வருந்தத்தக்க ஒன்று என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நிலமற்ற ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் தருவதாக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கொடுத்தால் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய யதார்த்தமான உண்மை நிலைமை, முன்னாலே ஒரு கிராமத்திலே 200 வீடுகள் என்று சொன்னால், 200 குடும்பங்கள் என்று சொன்னால், இப்போது 400 குடும்பங்கள், 500 குடும்பங்கள் என்று பெருகியிருக்கின்றன. ஒரே குடும்பத்திலே 4 பேர், 5 பேருக்கு வீடு கட்டுவதற்கு இடம் தேவைப்படுகிறது. கிராமத்திலே புறம்போக்கு இடங்கள் கிடையாது. ஆகவே, பல கிராமங்களில், நாங்கள் தொகுதிக்குள்ளே செல்லும்போது, வீடு கட்டுவதற்கு இடம் வேண்டுமென்று மனுக்கள் கொடுக்கிறார்கள்; ஒன்றும் செய்ய முடிவதில்லை. அப்படிப்பட்ட ஒரு நியாயமான கோரிக்கையைச்

செய்வதற்கு, எந்தெந்தக் கிராமங்களிலே வீடு கட்டுவதற்கு இடம் தேவை என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமோ, அலுவலர்கள் மூலமோ அறிந்து, அங்கே எப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறோமோ, அதேபோல, எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இல்லாமல், அனைவருக்கும் கிடைக்கின்ற வகையில் ஒரு திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு முக்கியமான கோரிக்கையும் இந்த வரவு—செலவுத் திட்டத்திலே இடம் பெறவில்லை.

இந்த வரவு—செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், திட்டம் சாராத செலவுகள் மிகுந்திருக்கின்றன. வளர்ச்சிப் பணிக்கான 'Planned Expenditure—திட்டம் சார்ந்த செலவுகள்' என்ற வகையில் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. வேலைவாய்ப்பை உருவாக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கத் திட்டங்கள் எதுவும் வகுக்கப்படவில்லை. விவசாயிகளின் பிரச்சினை தீர வழிவகை செய்யப்படவில்லை. ஏழையெளிய மக்கள், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் துயரங்கள் போக்கப்படுவதற்கு ஏற்படுத்தப்பட்ட எந்த வழியும் செய்யப்படவில்லை. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், "புத்தகங்கள் இல்லாத நூலகமாக, கருவிகள் இல்லாத விஞ்ஞானக் கூடமாக இருக்கிறது" என்ற கருத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்—Libraries without books; Laboratories without equipments.

அடுத்து, மிக முக்கியமான, நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு உண்மையான நிலைமையை அனைவரும் பேசுவதற்குத் தயங்கினாலும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக 1967—லே இருந்தபோது, நிதிநிலை அறிக்கை விவாதத்திலோ அல்லது வேறொரு விவாதத்திலோ பேசும்போது, எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய ஓர் உறுப்பினர், 'நிதிப் பற்றாக்குறை என்று இந்த அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காரிலேயிருந்து, புதிதாக மதுவிலக்கை அமல்படுத்தக்கூடிய மாநிலங்களுக்கு நிதி கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள், குறிப்பிட்ட காலத்திற்கு மதுவிலக்கை ரத்துச் செய்து, மீண்டும் மதுவிலக்கை நீங்கள் அமல்படுத்தினால்,

மத்திய சர்க்காரிலேயிருந்து பணம் வாங்கலாம்' என்று ஓர் உறுப்பினர் எதிர்க்கட்சியிலேயிருந்து பேசினார். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், "உறுப்பினர் இப்படிப் பேசினார்; ஆனால், மூடப்பட்ட மதுக்கடைகளை ஒரு மணி நேரம் திறந்து, அடுத்த மணி நேரத்திலே மூடுவதாக இருந்தாலுங்கூட, அந்தப் பாதகச் செயலைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு மதுவிலக்கு எங்கேயிருக்கிறது? குஜராத் மாநிலத்தைத் தவிர, இந்தியாவினுடைய எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்குக் கிடையாது; ரத்துச் செய்யப்பட்டு, எல்லா இடங்களிலும் கடைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 12—25*

குறிப்பாக, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மதுக்கடைகள், கிராமந்தோறும், நகரந்தோறும், வீதிகள்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், சுற்றியுள்ள கேரள மாநிலம், ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், புதுச்சேரி, அங்கேயெடுத்துக் கொண்டு பார்த்தால், எல்லா வகையான மதுக்களையும் அங்கே விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இலட்சக்கணக்கான மரமேறும் தொழிலாளிகள், தென்னை, பனை மரங்களிலேயிருந்து பதநீர் இறக்கி விற்பனை செய்வதற்கு அனுமதித்திருக்கிறார்கள். அதற்கு licence வாங்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான மரமேறும் தொழிலாளர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். மரமேறும் தொழிலாளர்களுடைய வேதனை என்ன என்பது, சுட்டெரிக்கும் வெயிலுக்கும், வழிந்தோடும் வியர்வைக்கும் மட்டுந்தான் தெரியும். அப்படிப்பட்ட வேதனையிலே அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழைத் தொழிலாளர்கள்மீது, காவல் துறை பல இடங்களில், பதநீருக்குப் பதிலாகக் கள் விற்பனை செய்கிறீர்கள் என்று பொய்யாக வழக்குப் போட்டு, ஜாமீனில் விட முடியாத sections மூலம் சிறைச்சாலையிலே அடைக்கின்றார்கள். ஆனால், உண்மையான நிலைமை என்ன? கள்ளைவிட அதிகமாகப் போதை தரும் பானங்கள் தாராளமாக விற்கப்படுகின்றன. மென்பானங்கள் என்று கருதப்படுகின்ற கள், பீர் போன்றவற்றில் ஆல்கஹால்—போதை தருகின்ற அந்த ஆல்கஹால்,

நான்கிலிருந்து எட்டு சதவிகிதம் வரைதான் இருக்கின்றது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அந்நிய மதுவகை—I.M.F.L. பானங்களில், அதேபோல, சாராயம் போன்றவற்றில், 25—லிருந்து 30 சதவிகிதம் வரை ஆல்கஹால் உள்ளது என்று சொல்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே, கள் தடை செய்யப்பட்ட பானம். I.M.F.L., அதிகமாகப் போதை, கெடுதல் தரக்கூடிய பானம், சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், அந்நிய வகை மதுபானங்களின் உற்பத்தி மிகப் பெரிய முதலாளிகளாலே செய்யப்படுகிறது. இவர்களால், இந்திய அரசியலிலும், மாநில அரசியலிலும் தலையிட்டு, தங்கள் வசதிக்கேற்றவாறு எதையும் செய்ய முடிகிறது. ஆனால், தென்னை மரம், பனை மரம் ஏறக்கூடிய தொழிலாளி, மரத்துக்குச் சொந்தக்காரன், கள் குடிப்பவன், அத்தனை பேரும் ஏழையெளிய மக்கள். அரசியல் அதிகாரத்திலே தலையிட்டு, ஆட்டிப் படைக்க முடியவில்லை. அரசாங்கம் மக்கள் நலன் கொண்டதாக இருக்க வேண்டுமே தவிர, முதலாளிகளின் இலாப நோக்கத்திற்காக உதவக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

அதேபோல, தென்னை வளர்ப்பில் கேரளா முதலிடத்திலும், தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும் நமது நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. தமிழகத்திலே சுமார் 7 இலட்சம் ஏக்கரில், 5 கோடி தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. நீண்ட காலப் பயிரான தென்னை, கடந்த 6, 7 ஆண்டு காலமாக மிகப் பெரிய சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. அதிலே, சிவப்புச் சிலந்தி—Eriophyte — என்கின்ற நோய் பிடித்து, மிகப் பெரிய சேதத்திற்கும், அழிவிற்கும், நஷ்டத்திற்கும் அந்த மரங்கள் ஆளாகியிருக்கின்றன. தென்னை விவசாயிகள் மிகப் பெரிய வேதனைக்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

அதே நேரத்திலே, இருக்கின்ற காய்களுக்கும் நியாயமான விலை, கட்டுப்படியாகக்கூடிய விலை கிடையாது. அதற்குக் காரணம், பாமாயில், சோயா எண்ணெய் போன்றவை தேங்காய் எண்ணெய்க்குப் போட்டியாக வந்து, சந்தையிலே நியாயமான விலை கிடைப்பதில்லை. தேங்காய் விலை சரிந்து போகின்றது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைப்பதில்லை. Eriophyte போன்ற நோயிலிருந்து தென்னை மரங்கள் காப்பாற்றப்பட, கட்டுப்படியாகும் விலை விவசாயிக்குக் கிடைத்திட, மரமேறும் தொழிலாளர்கள் உட்பட 5 இலட்சம்

பேருக்கு வேலை கிடைத்திட, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு, ஏழை மக்களின் உடல் நலத்தைப் பாதுகாப்பதற்கு, அரசுக்குக் கூடுதல் வருமானம் கிடைப்பதற்கு, தென்னை, பனை மரங்களிலேயிருந்து கள் இறக்கி விற்பனை செய்ய அரசு முடிவெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. சங்க காலத்திலேயே இந்த மது இருந்திருக்கிறது என்று சங்க இலக்கியம் படித்தவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இதில் பெரிய விமர்சனம் வருமென்று நீங்கள் கருத வேண்டிய அவசியமில்லை. பக்கத்திலேயிருக்கின்ற கேரளா, காங்கிரஸ் ஆளக்கூடிய மாநிலம், கொஞ்ச நாட்களுக்கு முன்னாலே வரை. அதேபோல, கர்நாடகம், ஆந்திரா, புதுவை, எல்லா இடங்களிலும் காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருக்கிறது. வடக்கேயிருக்கின்ற மாநிலங்களிலும் அது இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, தயக்கம் இல்லாமல், விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு, ஏழையெளியவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த முடிவுகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—30*

அடுத்தபடியாக, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள். அது இந்த வரவு—செலவுத் திட்டத்தில் இடம் பெறவில்லை என்று, என்னிடத்திலே பத்திரிகையாளர்கள் கேட்டபோது நான் கருத்தைத் தெரிவித்திருந்தேன். இரண்டு, மூன்று நாட்களில் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவது சம்பந்தமாக, இதற்கு முன்பு 1999 முதல் 6 ஆணைகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அரசாங்க ஆணைகள். அவற்றில் எதிர்பார்த்தது எதுவுமே நடக்கவில்லை. எல்லாமே படுதோல்வி அடைந்துவிட்டன.

தற்போதைய அரசாணை எண் 59, நாள் 25—7—2006; இதிலே சில பிரிவுகளில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகள் குழப்பமடைந்து, அதைக் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள்.அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது, அரசாணை

எண் 59, பத்தி 5, அதிலே சொல்லப்பட்டிருப்பது, மனை உரிமையாளர்களிடமிருந்து மேற்கண்ட தொகையினை வசூலித்துக் கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புதல் பெறாத வீட்டுமனைப் பிரிவுகளுக்குப் பொதுவான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, குடிநீர் வசதியை உடனடியாகச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பத்தி 5—லே இருக்கின்றது. அதற்குண்டான பொருள்—மனைப் பிரிவு உரிமையாளரிடமிருந்து, வரன்முறைபடுத்தப்பட்ட கட்டணம் முழுவதையும் வசூல் செய்துகொண்டு, அடிப்படை வசதிகளை—தவறு—அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் முறைப்படுத்துதல் மற்றும் அப்பகுதிகளுக்குக் குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அதிலே விளக்கம் சொல்லப் பட்டிருக்கின்றது.

இதிலே வரக்கூடிய சந்தேகம், சில பேர் அந்தக் கட்டணத்தைச் செலுத்தவேண்டியது. 1,000 வீடுகள், 2,000 வீடுகள் இருக்கக்கூடிய பகுதியில், 10 வீட்டுக்காரர்கள் அந்தக் கட்டணத்தைச் செலுத்தவில்லையென்று சொன்னாலும், ஒட்டுமொத்தமாக, அந்தப் பகுதி அபிவிருத்திக் காரியங்கள் நின்று போகுமா என்பது ஒரு சந்தேகம்.

அடுத்தபடியாக, பத்தி 7—ல், இதற்கு முந்தைய ஆணைகளின்படி, தொகை செலுத்தி வரன்முறை செய்யப்பட்ட மனைப் பிரிவுகள், வீட்டுமனைகளுக்கு இந்தத் திட்டம் பொருந்தாது. அதாவது, ஏற்கெனவே போட்ட ஆணைகளில், சில வீட்டுமனைகளுக்குச் சொந்தக்காரர்கள், சில பேர் நூற்றுக்கு 2% கூட இருக்காது, தொகை அதிகமாக இருந்தாலுங்கூட, அதைக் கட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீண்டும் இப்பொழுது கட்டணம் கட்ட வேண்டுமா? இந்த இரண்டு சந்தேகங்களுக்கும் விளக்கத்தை உரிய வகையிலே அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் கேட்ட சந்தேகத்திற்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே உள்ள திட்டத்தின்படி முழுதும் கட்டியிருக்கக்கூடியவர்களுக்கு

நிச்சயமாக மீண்டும் கட்டவேண்டிய ஒரு சூழ்நிலை அமையாது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) Time ஆகிவிட்டது. Brother, கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** கோவை மாவட்டத்தில், வடக்கு வட்டத்திற்குட்பட்ட, தொண்டாமுத்தூர் தொகுதிக்குட்பட்ட வீரகேரளம் என்னும் கிராமத்தில், 1982—வது ஆண்டில் வீட்டு வசதித் திட்டத்திற்காக 567 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்காக notice கொடுக்கப்பட்டது. ஆனால், அப்படிக் கொடுக்கப்பட்ட notice வீரகேரளம் பேரூராட்சிக்கோ அல்லது பேரூராட்சி மன்றத்திற்கோ அல்லது வேறு அங்கு இருக்கக்கூடிய பதிவாளர் அலுவலகத்திற்கோ தெரிவிக்கப்படவில்லை. ஆனால், அதற்குப் பிறகு இந்த notice-ஐ விவசாயிகளுக்கு மட்டும் கொடுத்தார்கள். நிலச் சொந்தக்காரர்களுக்கு, இருக்கக்கூடிய உரிய அலுவலர்களுக்குத் தெரியாத காரணத்தால், பேரூராட்சி மன்றம் வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுத்து, சுமார் 4,500 வீடுகள் கடந்த காலத்திலே கட்டப்பட்டு, குடியிருந்துகொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 30, 35 ஆண்டுகளாகத் தொழிற்சாலைகளும் கட்டப்பட்டுள்ளன. 10 சதவிகிதம் தென்னந் தோப்புகளும் அங்கே இருக்கின்றன. வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், L.I.C. மற்றும் பல வகைகளிலும் கடன் பெற்று, வீடுகளைக் கட்டியிருக்கின்றார்கள். சுமார் 20,000 பேர் அங்கு வசித்து வருகின்றார்கள். பேரூராட்சி மன்றமும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலேயிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்தும் அனைத்து அடிப்படை வசதிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் செய்து முடித்திருக்கின்றார்கள். இந்த நிலையில், 24 ஆண்டுகளுக்குப் பிறகு வீட்டு வசதி வாரியம் 7—2—2006, 12—4—2006 ஆகிய தேதிகளில் தொண்டாமுத்தூர் சார் பதிவாளருக்கும், பேரூராட்சிக்கும் ஒரு notice கொடுத்து இருக்கின்றார்கள். அதில் நிலங்களைக் கையகப்படுத்தியிருப்பதாகவும் பத்திரப் பதிவுகளை நிறுத்தவும், வீடுகள் கட்ட அனுமதி கொடுக்க வேண்டாம் எனவும் அதிலே சொல்லியிருக்கின்றார்கள். கொடுத்த அனுமதியை ரத்துச் செய்யப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். 567 ஏக்கரில் வீட்டு வசதி வாரியம் இதுவரை கட்டியுள்ள வீடுகளினுடைய எண்ணிக்கை ஐந்தே ஐந்து சதவிகிதம்தான். ஆகவே, நிலம் கையகப்படுத்தும்

நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு கட்டப்பட்டுள்ள வீட்டு வசதி வாரியத்தினுடைய வீடுகளுக்கு 30 ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட இதுவரை கிரயப் பத்திரம் வழங்கவில்லை. அதிலே குடியிருக்கின்ற அந்தச் சொந்தக்காரர்கள் எல்லாத் தவணைகளையும் செலுத்திவிட்டார்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, தமிழ்நாடு எங்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி, அவை எல்லாம் கண்டறியப்பட்டிருக்கின்றன. இதற்கு ஒரு முக்கியமான காரணம், ஒரு பெரிய இடத்தை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிறபோது, குறிப்பிட்ட சில நிலவுடைமையாளர்கள் வழக்குமன்றத்திற்கு—நீதிமன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். அவர்கள் கூடுதல் தொகை கேட்டு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிற காரணத்தினால், அதனுடைய தீர்ப்பு வந்து, அதன் பிறகு இந்த வீட்டுமனைகளுக்கு மறு மதிப்பீடு செய்து, அந்தத் தொகையை வசூல் செய்துதான் பத்திரங்கள் பதிவு செய்ய வேண்டியிருக்கிறது என்றாலும், இன்னும் சில இடங்களில், நம்முடைய திண்டுக்கல் இராணி மங்கம்மாள் நகர் போன்ற இடங்களில் இதுபோன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்ட காரணத்தினால், மற்ற Court-களுக்குச் செல்லாத பகுதிகளைச் சேர்ந்த மனைகளுக்கு அப்பொழுதே பத்திரம் பதிவு செய்யப்பட்டு, அதன் பிறகு மீதம் உள்ள, வழக்குமன்றத்திற்குச் சென்ற இடங்களுக்குக் கூடுதலான தொகை நிர்ணயித்து, நீதிமன்றம் சென்ற காரணத்தினால், அனைத்து மனைக்கட்டுகளுக்கும் சமமான முறையில் பங்களிப்பு நிதியைச் செய்ய முடியாமல், இந்த ஒரு குறிப்பிட்ட பகுதியிலே வழக்குமன்றம் சென்றவர்களுடைய வாங்கிய இடம் 10 மடங்கு, 15 மடங்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும், இதுபோன்றதைப் பரிசீலித்து உடனடியாக, மூன்று மாத காலத்திற்குள் இது தீர்க்கப்பட வேண்டுமென்று கருதி, வரவிருக்கின்ற திங்கட்கிழமை, முகப்பேரில் இந்தப் பணியைத் துவக்கி 360 பத்திரங்கள்—முதல் கட்டமாகத் துவக்கி வைக்கப்படுகிறது. தொடர்ந்து மூன்று மாத காலத்திற்குள், நீதிமன்றத்தில் இருக்கின்ற இடங்கள் தவிர, மற்ற இடங்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரம் ஆகியிருக்கிறது. சீக்கிரம் இரண்டு நிமிடங்களில் முடியுங்கள். நீங்கள் senior member. மற்றவர்களும் பேச வேண்டும். கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** ஒன்றும் இல்லை. வேண்டாம் என்று சொன்னால், உட்கார்ந்துவிடலாம். ஏன் வீணாக time waste ஆகிறது?

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. வீரகேரளத்தில் இருப்பதைப்போலவே, கணபதி மாநகரிலும், காந்தி மாநகர், கோவை மாநகருக்கு உட்பட்ட பகுதி. வ.உ.சி. நகர், வெற்றி விநாயகர் ஆகிய நகரப் பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தால் 5 ஆயிரம் வீடுகள் 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவை. ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் வாழக்கூடிய பகுதி. அரசாங்க ஊழியர்கள் வாழக்கூடிய பகுதி. இந்த ஒதுக்கீட்டாளர்கள் அனைவரும் செலுத்த வேண்டிய தொகைகள் அத்தனையையும் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால், வீட்டு வசதி வாரியத்திலிருந்து ஒதுக்கீட்டாளர்களுக்கு இதுவரை கிரயப் பத்திரம் வழங்கவில்லை. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுதான் காரணம். ஆனால், வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களைத் தனியார்களுக்கு விற்கும்போது, அல்லது வீடுகள் கட்டி விற்கும்போது, நிலம் ஆர்ஜிதம் செய்ததால் ஏற்பட்ட பிரச்சினைகளை வீட்டு வசதி வாரியம்தான் தீர்வு செய்து அதற்குப் பிறகு வழங்க வேண்டும். அதேபோல, பிரச்சினை இருக்கும்போது அதிலே வீடுகள் கட்டி ஏன் பொது மக்களுக்குத் தர வேண்டும் என்பதை வீட்டு வசதி வாரியம் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, பிரச்சினையிலுள்ள நிலங்களைப் பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்த காரணத்தால், அதில் ஏற்படும் இழப்புகளை வீட்டு வசதி வாரியமோ அல்லது அரசாங்கமோ ஏற்றுக்கொண்டு, அனைவருக்கும் கிரயப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலே பாரதியார் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு 30 ஆண்டுகள் ஆகின்றன. 1977 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக ஆயிரம் ஏக்கருக்கு மேல் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகை மிகக் குறைவாக இருந்த காரணத்தினால் விவசாயிகள் அனைவரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். 30 ஆண்டுகள் ஆகியும் வழக்கு முடியவில்லை. நிலச் சொந்தக்காரர்கள் பலர் வறுமையால் இறந்துவிட்டனர். நிலச் சொந்தக்காரர்களின் குடும்பத்தினருக்குப் பல்கலைக்கழகத்திலே வேலை வழங்கப்படும் என்று

அறிவிக்கப்பட்டது. சிலருக்கு மட்டும் வேலை வழங்கப்பட்டது. கோவை மாவட்ட நீதிமன்றத்தில் 30 ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கக்கூடிய வழக்கை முடித்து, நிலம் இழந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கவும், பல்கலைக்கழகத்திலே வேலைவாய்ப்புகளுக்கு முன்னுரிமையும் கொடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—40

இன்னொரு முக்கியமான கோரிக்கை. என்னுடைய தொகுதி, கேரள எல்லையில், மலையினுடைய அடிவாரத்திலே அமைந்திருக்கின்ற ஒரு பகுதியாகும். அடர்ந்த காட்டுப் பகுதிகள் அங்கே இருக்கின்றன. அருகிலே இருக்கக்கூடிய விவசாய விளை நிலங்களில் விளைவிக்கப்படும் பயிர்கள், யானைகள், காட்டுப் பன்றிகளால் சேதப்படுத்தப்படுகின்றன. விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். இப்படிப்பட்ட இழப்புகள் ஏற்படாமல் இருப்பதற்கு, மின் வேலி அமைத்து அல்லது அகழிகள் வெட்டி, வன விலங்குகள் வேளாண்மைப் பயிர்களை அழிக்காமல் பாதுகாப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டாமுத்தூர் பகுதியில் திராட்சை, காய்கறிப் பயிர்கள் அதிகமாக விளைவிக்கப்படுகின்றன. அவற்றிற்குரிய விலை கிடைக்காத காரணத்தால், அவற்றையெல்லாம் அழுகிப் போகாமல் பாதுகாத்து வைப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சம்பந்தப்பட்ட மானியத்திலே பேசிக்கொள்ளலாம் என்று கூறி, தலைவருக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

## 2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

### (ஆ) மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்லூரிகளில் அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் விவரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை தினசரிப் பத்திரிகையிலே, மருத்துவக் கல்லூரி சார்ந்த இட ஒதுக்கீடு சம்பந்தமான ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள்; தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். சரியான தகவல் பொது மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு 110—வது விதியின்கீழே இந்த அறிக்கையை நான் அளிக்கிறேன்:

"தமிழகத்தில் இந்தக் கல்வி ஆண்டில் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக, சுய நிதி தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிப்பதற்கு அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் சுமுகமாக நிர்ணயம் செய்யப்பட்டன. அதேபோல, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக, மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவம் சார்ந்த கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் உயர் கல்வித் துறையில் இட ஒதுக்கீடு செய்த அதே அளவில் பின்வருமாறு படிப்பதற்கு இட ஒதுக்கீடு பெற்றுத் தந்துள்ளார் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்:

*சிறுபான்மை அல்லாத கல்லூரிகள்:*- அரசு ஒதுக்கீடு — 65 சதவீதம். நிர்வாக ஒதுக்கீடு — 35 சதவீதம்.

*சிறுபான்மைக் கல்லூரிகள்:*- அரசு ஒதுக்கீடு — 50 சதவீதம். நிர்வாக ஒதுக்கீடு — 50 சதவீதம்."

## 4. திருத்திய வரவு—செலவுத் திட்டம், 2006—2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையிலும், வேதம், சாஸ்திரம், சம்பிரதாயம், சாமி, பூஜை, ஜோசியம், ஆரூடம், பஞ்சாங்கம், விரதம், முழுக்கு, மந்திரம், தந்திரம், பில்லி, சூனியம், இவற்றை எல்லாம்

ஏற்றுக்கொள்ளாதவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றையும் சொல்ல வேண்டுமானால், நரபலியை அறவே ஏற்றுக்கொள்ளாதவன். ஆகவே, அறிவியல்பூர்வமாகச் சிந்தித்துப் பேச வேண்டுமென்பதற்கான வகையிலே இந்த அவையைப் பயன்படுத்த விரும்புகின்றேன். (குறுக்கீடு) வாஸ்து, சாஸ்து, இந்தப் பெயர்களே வந்து சேராது. ஆகவே, எல்லாவற்றிலும் எனக்கு உடன்பாடு இல்லை என்ற காரணத்தினாலே அதைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன், பதிவு செய்ய விரும்புகிறேன். காரணம், பகுத்தறிவுக் கருத்துகளைத் தன்னுடைய கொள்கையாகக் கொண்டு சிறப்பாகத் தமிழகத்திலே வலம் வந்து கொண்டிருக்கிற, நமது அரசியல் கட்சிகளிலேயே மூத்த தலைவராக, முன்னோடித் தலைவராக விளங்கிக்கொண்டிருக்கிற, (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, மூளை பலம் மிக்க ஒரு முதல்வரின் தலைமையிலே செயல்படுவதிலே நான் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—45

ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, பல்வேறு சாதனைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நான் ஆளுநர் உரையின்மீது பேசுகிறபோது பல்வேறு கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறேன். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை பற்றி இங்கே விரிவாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சகோதரர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மிகச் சிறப்பாக அந்தக் கருத்துகளைச் சொன்னார்கள். ஆகவே, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல், அனைவருமே விவாதிக்கக்கூடிய ஒரு அறிக்கையாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை அமைந்துவிட்டது என்பது சிறப்புக்குரிய ஒன்று. ஆகவேதான், தமிழகத்திலே நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தல் ஒரு புதுமையான தேர்தல், ஒரு முன்மாதிரியான தேர்தல் என்ற கருத்தை நான் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட கருத்துகளெல்லாம்— டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவிக்கிறபோது சொன்னார்கள்— என்னுடைய தேர்தல் அறிக்கை என்பது ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே அதுவே நிதிநிலை அறிக்கையாக மாறும் என்று அறிவித்தார்கள். இப்போது நிதிநிலை அறிக்கையாக அப்படியே மாற்றப்பட்டு இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது, சலுகைகள்

வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதுதான் யதார்த்தமான உண்மை. இதை யாருக்காகவாவது வக்காலத்து வாங்கிப் பேசுவதற்குரிய முயற்சியாகத் தயவுசெய்து எடுத்துக்கொள்ளக்கூடாது. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டவை இதிலே வந்திருக்கின்றன இல்லையா? (குறுக்கீடு) என்ன, இதிலே என்ன கூக்குரல் என்று தெரியவில்லை. (குறுக்கீடு) அதை எல்லாம்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) எதுவாக இருந்தாலும் சொல்லிவிடுங்களேன். நான் அப்புறம் பேசுகிறேன். (குறுக்கீடு) சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதி, அமைதி. அமைதியாக இருங்கள். உறுப்பினர் பேசும்போது குறுக்கிடக்கூடாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆனால், தேர்தல் அறிக்கை என்பது இந்த ஆட்சியினுடைய வரவு-செலவு அறிக்கையாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை. யார் ஒருவரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிக்கையைச் செயல்படுத்துகிறபோது குற்றங்கள் வருமானால், குறைகள் வருமானால், தவறுகள் வருமானால், தட்டிக் கேட்பதிலே உங்களைவிட முதன்மையாக எங்களுடைய கட்சி இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதையெல்லாம் போன தடவை நடத்தவே முடியவில்லை. பல பேர்களுக்கு, புதிதாக வந்தவர்களுக்குத் தெரியாது. இப்படியெல்லாம் பேசவே முடியுமா என்பதெல்லாம் பல சந்தர்ப்பங்களிலே பிரச்சினையாக இருந்தது.

மேலும், திட்டம் என்று சொல்கிறபோது, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம். இது ஒரு மகத்தான சாதனைத் திட்டம் என்று இந்தியா முழுமையிலும் பாராட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. மறுக்க முடியாத உண்மை இது. ஆகவே, 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி—ஆனால், நான் ஏற்கெனவே சொன்னேனே, மூடப் பழக்கவழக்கங்களை ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையின் அடிப்படையிலே பல செய்திகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன—கோயிலிலே அர்ச்சனை செய்வதற்குப் போனால், ஓர் அர்ச்சனைத் தட்டை வாங்குவதற்கு 20 ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே, 10 கிலோ அரிசிக்குரிய தொகையைத்தான் ஓர் அர்ச்சனை செய்வதற்குச் செலுத்த வேண்டிய நிலையிலே இருக்கிறது தமிழகம். ஆனால், 2 ரூபாய்க்கு ஒரு கிலோ என்று அந்த அறிவிப்பைச் செய்து,

ஏழைகளுக்கு வயிற்றில் பால் வார்த்திருக்கிறார் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மனதாரப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்தக் கருத்தோடு நான் சொல்ல விரும்புவது, உணவுப் பொருட்கள் வழங்குகிற துறையைப் பற்றிப் பல்வேறு கருத்துகள் பேசப்பட்டன. நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டவாரியாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, பல்வேறு நல்ல கருத்துகளைத் தெரிவித்து, தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொண்டு, பல்வேறு திட்டங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை அவருடைய மானியக் கோரிக்கையிலே அறிவிப்பதற்கான முயற்சிகளை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன். குறிப்பாக, உணவுப் பொருட்களை வழங்குகிறபோது, கிராமப்புற அங்காடிகள்மூலமாக வழங்குகிறபோது, உணவுப் பொருட்கள் எடை குறைவாக வழங்கப்படுகின்றன என்ற ஒரு பிரச்சினை தொடர்ந்து இருக்கிறது. கூட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திலே கொண்டு வரப்பட்டு—இது தொடர்ந்து பல ஆண்டு காலமாக இருக்கக்கூடியது. இது அந்த ஆட்சியா, இந்த ஆட்சியா என்பது அல்ல. நடைமுறையிலே இருக்கிற தவறுகள் அவை. ஆகவே, அவற்றைச் சரி செய்வதற்கு உரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று ஆய்வுக் கூட்டத்தில் கோரப்பட்டது. ஆகவே, இதை வழங்குவதற்கான முயற்சியை எடுக்கிறபோது, என்னுடைய ஆலோசனையாக—மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் பங்குகொண்டார்கள். அவர்களிடத்திலே நான் தெரிவித்துக்கொண்டபடி, எடை வைத்து வழங்குவதற்குரிய அந்தத் தராசுகள் இருக்கின்றனவே, அவை போதுமான அளவிற்கு மக்களுக்கு நம்பிக்கைக்குரியதாக இல்லை. ஆகவே, அவை எப்படி வேண்டுமானாலும் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, அவற்றை மின்னணுத் தராசாக—electronic தராசாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்தச் சபையிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் இதை நிறைவேற்றச் செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—50*

அடுத்து, குறிப்பாக, மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கிற காவிரி நீர்ப் பிரச்சினை. அதற்குத் தீர்வு காண்பதற்கான முயற்சி, விரைவான

நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று சொன்னாலும், இறுதித் தீர்ப்பை விரைவாகப் பெறுவதற்காக நம்முடைய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்கு நாம் அனைவருமே ஒத்துழைக்க வேண்டும். நான் திரும்பவும் சென்ற கூட்டத்தில் கேட்ட கோரிக்கையை டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்குரிய முயற்சி என்ற வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று சொன்னாலும், நம்முடைய சட்டமன்றத்தின்மூலமாக ஒருமித்த ஒரு தீர்மானத்தை, விரைவான தீர்வினைப் பெறச் செய்வதற்குரிய முயற்சியாக இந்த அவையிலேயே தாங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று உங்களை நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும்; காரணம், கர்நாடக அரசினுடைய வேகமான நடவடிககை என்பது நம்முடைய தமிழகத்தை மிகப் பெரிய அளவிலே பாதிக்கச் செய்வதற்குரிய முயற்சியாக இருக்கிறது.

குறிப்பாக, *1965* ஆம் ஆண்டு முதல் *1995* ஆம் ஆண்டுகளுக்குள்ளாகவே பல்வேறு அணைகள் கட்டப்பட்டன என்று இங்கே அவையிலே எல்லாம் விவாதிக்கப்பட்டு இருக்கிறது; *37* அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். இது குறித்து நம்முடைய மாநில அரசாங்கத்தை எவ்விதத்திலும் அவர்கள் கலந்து பேசுவதும் இல்லை, கேட்பதும் இல்லை, கருத்துக் கேட்பதும் இல்லை. இப்படியாகத்தான் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோல இப்போது, *2003* ஆம் ஆண்டு முதல் மேலும் புதிய திட்டங்களைக் கர்நாடக அரசாங்கம் ஏற்பாடு செய்து, காவிரி நீர் ஆதாரத் திட்டம் என்ற பெயராலே உலக வங்கியிலே சுமார் *5,500* கோடி ரூபாய் கடன் பெற்று, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய *4,000*-க்கும் மேற்பட்ட ஓடைகளையெல்லாம் மிகப் பெரிய ஏரிகளாக மாற்றி, நமக்கு வரக்கூடிய தண்ணீரைச் சேமித்து, அந்த மாநில மக்கள் பயன்படுத்துவதற்காக, விவசாயத்திற்காகச் செய்வதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து, கிட்டத்தட்ட *4½* இலட்சம் ஏக்கர் நிலத்தைத் கூடுதலாக, புதிய பாசனமாக உருவாக்கியிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியைத் தெரிவிக்கிறார்கள். ஆகவே, இப்படியே இந்த நிலை போய்க்கொண்டே இருக்குமானால், காவிரி நீர் என்பது தமிழகத்திற்குக் கானல் நீராக மாறச் செய்வதற்கான முயற்சி கர்நாடக அரசால் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, விரைவான தீர்வு, இறுதித் தீர்ப்பு என்பதுதான் அதற்குரிய ஒரு சரியான தீர்வாக இருக்க முடியும் என்று நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பொதுப் பணித் துறையினுடைய அதிகாரிகள், நீரியல் துறை ஆய்வாளர்கள் எல்லாம் சொன்ன கருத்து, காவிரி நீரோட்டம் என்பதே சுமார் 671 டி.எம்.சி. அளவுக்குத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதிலே Master Plan என்ற பெயராலே கர்நாடகம் எடுத்துக்கொண்டது, 465 டி.எம்.சி. என்று சொல்கிறார்கள். இப்போது நீர் ஆதாரத் திட்டத்தின்மூலமாக மேலும் எடுத்துக்கொள்ள இருக்கிற அளவு என்பது 170 டி.எம்.சி. என்று சொல்லப்படுகிறது. ஆகவே, மிச்சம் இருப்பது என்பது 36 டி.எம்.சி. அளவுக்குத்தான் கபினியிலிருந்து நமக்கு வந்து சேர்வதற்கான வாய்ப்பு இருப்பதான ஓர் அபாயத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்படி இருக்குமானால், காவிரியை நம்பி இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 2 கோடி மக்களுடைய வாழ்க்கை என்பதே கேள்விக்குரியதாக மாறுகிற அபாயம் இருக்கிறது. இதைப் போக்கச் செய்வதற்குரிய முயற்சியை டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு தீர்மானத்தின்மூலமாக மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, விரைவாகப் பெற்றுத் தருவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதனுடைய நிலைமைகளை எல்லாம் உணர்ந்துதான் கர்நாடக மாநிலத்திலே அப்படிப்பட்ட காரியத்தைச் செய்து, விவசாயத்தைப் பாதுகாக்க முயற்சியை எடுக்கிறார்கள் என்று சொல்கிறபோது, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நம்முடைய இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சுமார் 3,900 கோடி ரூபாய்க்கான, வேளாண்மையை நவீனப்படுத்துவதற்குரிய நீர் ஆதாரத் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறபோது, உண்மையிலேயே தமிழக விவசாயிகள் நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள், உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை விரைவாகச் செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து, கூட்டுறவு. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலே இங்கே பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டன. இந்த 6,866 கோடி ரூபாய் தள்ளுபடி என்பது ஒரு மகத்தான சாதனை. அது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, எல்லோராலும் சொல்லப்படுகிற செய்தி. நாடுகள் என்று எடுத்துக்கொண்டால், ஆசியக் கண்டத்திலேயே எங்கும் நடைமுறைப்படுத்தாத ஒரு மாபெரும் திட்டம். *(மேசையைத்*

தட்டும் ஒலி) ஆகவே, இது சாதாரண விஷயம் அல்ல. ஒரு மகத்தான சாதனை படைத்திருக்கிற திட்டம். விவசாயிகளைக் கடன் சுமையிலிருந்து மீளச் செய்திருக்கிற இந்தத் திட்டம் என்பது மிகப் பெரிய பாராட்டுதலுக்குரிய திட்டமாக இருக்கிறது. இது அனைவருமே மனதார வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால் அதே நேரத்திலே, பல்வேறு பிரச்சினைகளைப் பேசுகிறபோது, ஒரு கருத்தை நம்முடைய ஆய்வுக் கூட்டங்களிலே சொன்னார்கள். இந்தத் திட்டத்தின்மூலமாக விவசாயிகள் பலன் பெற்றுவிட்டார்கள்; கூட்டுறவு இயக்கத்தை நலிவு பெறாமல் நடைபெறச் செய்வதற்குரிய முயற்சி என்னவென்று கேட்டார்கள். அதற்குரிய தீர்வு இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை வலுவாகவும், உறுதியாகவும், தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி, மேலும் பாதுகாத்து, கூட்டுறவுச் சங்கங்களை நலிவடையாமல் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளைத் தொடர் கவனத்தின்மூலமாக நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சியை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய தேர்தலை நடத்த வேண்டும். கடந்த 5 ஆண்டு காலத்திலே கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்தப்படவே இல்லை. அதைக் கலைத்தார்கள், தனி அதிகாரிகளைப் போட்டார்கள், அவர்கள் விருப்பப்படி செயல்பட்டார்கள். ஆகவே, மீண்டும் கூட்டுறவுத் தேர்தலை நடத்தச் செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2004 ஆம் ஆண்டிலே பாரதப் பிரதமர் அவர்கள், கூட்டுறவுத் துறை அமைச்சர்களைக் கொண்ட ஒரு மாநாட்டினை நடத்தி, அதிலே அவர் ஒரு சிறந்த கருத்தைச் சொல்லி இருக்கிறார்; கூட்டுறவுக்கான பூரணத் தன்னாட்சி பெறுவதற்கான அரசமைப்புச் சட்டத்தையே திருத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதை வலியுறுத்தி, கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயல்படச் செய்வதற்குரிய முயற்சிகளை நம்முடைய மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—55

காலத்தின் அருமை கருதி, நான் விரைவாகச் சில செய்திகளைச் சொல்ல வேண்டும். நெல் கொள்முதலைப் பற்றி இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது. சென்ற ஆட்சிக் காலத்திலே மத்திய அரசாங்கத்தினுடைய முகவராகச் செயல்பட்டுத்தான்

கொள்முதல் நடைபெற்றது. ஆனால் இந்த ஆட்சிக் காலத்திலே நம்முடைய ஆட்சியின்மூலமாக, நேரடியாக நெல் கொள்முதலைச் செய்வதற்குரிய முயற்சியை அறிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அறிவிப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதுதான் உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடைமுறையாகத் தொடர்ந்து இருக்கிறது. அதோடு, தேவையான கோரிக்கை என்ற முறையிலே, நெல்லுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத காரணத்தாலே, மத்திய அரசு அதை வழங்கச் செய்வதற்குரிய முயற்சியை எடுப்பதோடு, மாநில அரசாங்கம் அதற்கு ஊக்கத் தொகையாக, குவின்டாலுக்கு 100 ரூபாய் வழங்கச் செய்வதற்கான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கையை உறுதி செய்வதற்குரிய வகையில் உதவி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தென் மாவட்டங்களில் 13–5–2006 ஆம் நாளன்று, சூறைக் காற்று மிகப் பெரிய அளவிலே வீசி, பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. அதிலே வாழை, தென்னை ஆகியவற்றுக்குப் பெருமளவிலே அங்கே 5, 6 மாவட்டங்களிலே பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்குரிய நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான கணக்கெடுப்புகளும் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் நிவாரணம் வழங்கப்படவில்லை என்ற கருத்தை நம்முடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் சொன்னார். அந்தப் பகுதியில் அப்படி இருக்குமானால், அதை விரைவாக வழங்கச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையின்மூலமாக நிருவகிக்கப்படக்கூடிய குழு வீடுகள். இதை நான் சென்ற முறையும் சொன்னேன். இந்தக் குழு வீடுகள் மத்திய அரசாங்கத்தினுடைய நிதியுதவியோடு, மாநில அரசாங்கத்தினுடைய நிதியையும் இணைத்து கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தக் குழு வீடுகள் அமைப்பது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆழமான கருத்தை உருவாக்க வேண்டும். அதைத் தேசிய அளவிலான கருத்தாக உருவாக்கி, அதை இந்தியா முழுமையும், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குரிய வாய்ப்பாக ஏற்படுத்துவதற்குரிய சிந்தனையை, செயல் வடிவத்திலே செய்வதற்குரிய வாய்ப்பு தங்களுக்கு இருக்கிறது என்ற காரணத்தாலே,

குறிப்பாக, 40 ஆயிரம் ரூபாய்க்குள்ளாக, அல்லது 50 ஆயிரத்திற்குள்ளாகத்தான் அதில் செலவு செய்யப்படுகிறது. ஆகவே, அந்தக் குழு வீடுகளை அமைப்பதில், அது போதிய வசதிகளுடன் இல்லாத காரணத்தால், தேசிய அளவிலேயே சுமார் ஒரு இலட்சத்திற்குக் குறைவில்லாத செலவிலே அந்தக் குழு வீடுகளை அமைக்க வேண்டும் என்பதற்குரிய ஒரு கருத்தை வலியுறுத்தி, அதை இந்திய அளவிலேயே செயல்படுத்தச் செய்வதற்குரிய வாய்ப்பை மத்திய அரசாங்கத்திடம் பெறுவதற்கான முயற்சியை எடுத்து, அதை இந்தியாவிலேயே பெற்றுத் தந்த பெருமையை டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற அந்தக் குழு வீடுகளெல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அந்தப் பழுதடைந்த குழு வீடுகளைப் பழுது நீக்கம் செய்வதற்கான முறையிலே தனி நிதியை அறிவித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இது சென்ற ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்டது என்பதைவிட, அது புதுப்பிக்கப்பட்டு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரால் அறிவிக்கப்பட்டது. ஆனால், அதன் பெயரால் கிராம ஊராட்சி, சிற்றூராட்சி மக்களால் நேரடியாக எந்தப் பலனும் அனுபவிக்க முடியாமல் போனது. சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இந்தத் திட்டத்தின்மூலமாகப் பல ஊராட்சிகள் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்று மிகச் சிறப்பாகப் பலன் அடைந்து கொண்டிருந்தன. அதை உணர்ந்து திரும்பவும் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஆட்சியை மனதார இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுகூட, நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில், ஒரே ஆண்டிலேயே 2,500 ஊராட்சிகளில், ஒவ்வோர் ஊராட்சிக்கும் தலா 20 இலட்சம் வீதம் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் நிறைவேற்றப்படும் என்ற அறிவிப்பு சிறப்புக்குரியது. இதில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற வகையில், இந்த ஆண்டே 500 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த

5 வருடங்களிலேயே இந்தப் பணியை அனைத்து ஊராட்சிகளுக்கும்— 12,000—க்கும் மேற்பட்ட ஊராட்சிகளுக்கும் நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே பல்வேறு கருத்துகளை இங்கே பேசிக்கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, ஒப்பந்த முறை ஆசிரியர்கள் சுமார் 45,987 பேர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு, நிரந்தரப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இது ஒரு சாதாரண காரியமா? எல்லாவற்றிலுமே சென்ற ஆட்சியில் என்ன நடைபெற்றது? இதில் கோபித்துக்கொள்ளக்கூடாது. எல்லாமே தொகுப்பூதியம், தொகுப்பூதியம், தொகுப்பூதியம் என்ற பெயரிலே போடப்பட்டது. அவர்களுக்குப் பணி எப்போது வரும், போகும் என்ற நிலையான கொள்கை இல்லாத நிலை இருந்ததை மாற்றி, அந்த ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது என்பதைக்கூடப் பார்க்காமல், இதிலே அரசியல் கலப்படம் இல்லாமல், இந்த 45,987 ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண விஷயமல்ல. ஆகவே, இதை மனதார யாராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் இதில் இருக்கிற யதார்த்தமான உண்மை.

பிற்பகல் 1—00

அதேபோல, காமராசர் பிறந்த நாளில் சத்துணவில் இரண்டு முட்டைகள். ஆனால் ஒரு முட்டை போட்டபோது அது தட்டிப் பறிக்கப்பட்டுவிட்டது சென்ற ஆட்சியிலே. தட்டிப் பறிக்கப்பட்டாலும், திரும்பவும் தட்டிலே இரண்டு முட்டைகளைச் சேர்த்து bonus ஆக வழங்குகின்றேன் என்று நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டம் பற்றிச் சொல்கின்றபோது, எம்.ஜி.ஆர். அவர்களுடைய சத்துணவுத் திட்டம் என்றுதான் பெயர் இருக்கிறது. அதிலே மாற்றமில்லையே! அதிலே அரசியல் கலப்பு இல்லையே! அது, தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இங்கே பேசுகின்றபோது சில பேர் சொன்னார்கள். இதேபோலப் பல திட்டங்கள், சென்ற ஆட்சியின்மூலமாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் எல்லாம் திரும்பவும் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதற்குரிய சான்றாக, இந்தத் திட்டத்திலே மீண்டும் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் இதிலே இருக்கிற யதார்த்தமான உண்மை என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

இதிலே குறிப்பாக, நமது கல்விக் கொள்கை என்று சொல்கிறபோது, பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையிலும், நம்முடைய தமிழகத்திலே தொடர்ந்து எல்லாப் பகுதி மக்களுக்கும் வழங்கப்படுகிறது என்ற ஒரு செய்தி சொல்லப்படுகிறது. சென்ற 5 ஆண்டு காலத்திலே, இங்கே முன்னாள் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், நான் பல முறை பேசுகின்றபோது நிறைய வாக்குவாதங்களிலே இங்கே ஈடுபட்டிருக்கின்றோம். அது இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்தி நாட்டு மக்களுக்குத் தேவையானதைச் செய்ய வேண்டும் என்கின்ற முயற்சியிலேதான். அப்படி நாங்கள் சொல்கின்றபோது, அடிப்படைக் கல்வி என்று சொல்கின்றபோது, ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளாகவே அனைவருக்கும் கல்வி கிடைக்கச் செய்வதற்குரிய முயற்சி என்பது மத்திய அரசினுடைய திட்டமாக இருக்கிறது. அதை மாநில அரசு ஏற்று நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதைச் செய்வதற்குரிய முயற்சியை எல்லா வகையிலும் சிறப்பாகச் செய்துவிட்டோம் என்றுதான் சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சொல்லப்பட்டது. அப்படியானால், கும்பகோணத்தில் தீ விபத்திலே 94 குழந்தைகள் மாண்டார்கள். அது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், அந்த கிருஷ்ணா என்ற தனியார் பள்ளியிலே சேர ஒரு கிராமத்திலேயிருந்து மட்டும் வந்த 13 பிள்ளைகள் உயிரிழந்து போனார்கள், நத்தம் என்ற கிராமத்திலே. அந்த நத்தம் என்ற கிராமம் பக்கத்திலே இல்லை. கும்பகோணத்திற்கும், அதற்கும் 7 கிலோ மீட்டர் இருக்கிறது என்று செய்தித்தாள்மூலமாக ஒரு செய்தி வந்திருக்கின்றது. 7 கிலோ மீட்டர் தூரம் கடந்து சென்று கும்பகோணத்திலே படிக்க வேண்டிய நிலை இருக்கின்றது என்று சொன்னால், மத்திய அரசாங்கத்தின்மூலமாகச் சொல்லப்பட்ட திட்டம் என்ன ஆனது? அது நடைமுறைப்படுத்தப்பட்டதா, இல்லையா? ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவே பள்ளி இருக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறதே, அது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் நத்தம் கிராமத்திலேயிருந்து வந்த பிள்ளைகள், சாதாரணக் கூலித் தொழிலாளர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த 13 குழந்தைகள் மரணமடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்பதுதான் இதிலிருக்கின்ற உண்மை. நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நடந்த சம்பவத்தைச்

சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதிலே கூடுதலாகவோ, குறையாகவோ அல்லது அரசியல் காரணத்திற்காகவோ நான் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)* இதை நான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் குறுக்கிடுவதற்கு ஒன்றும் இல்லை. ஒரு சம்பவத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்வதற்குக் காரணம், அந்தச் சம்பவம் என்பது ஏன் நடைபெறுகிறது என்பதற்காகச் சொன்னேன். ஒரு கிலோ மீட்டருக்குள்ளாக அந்தக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் இல்லாத காரணத்தினாலே பல சம்பவங்கள் நடைபெறுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது என்பதுதான் இதிலே இருக்கின்ற யதார்த்தமான உண்மை. அந்தச் சம்பவம் நடந்தது என்பது ஒரு துயரச் சம்பவம். அதை யார் மீதும் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. ஆனால், அந்தத் துயரச் சம்பவம் நடந்துவிட்டதற்குப் பின்னாலே அரசு என்ன செய்தீர்கள் நீங்கள்? 24 மணி நேரத்திற்குள்ளாக, தமிழகம் முழுமையும் இருக்கின்ற அனைத்துக் கூரைப் பள்ளிக்கூடங்களையும் பிரித்தெறிந்துவிட்டீர்கள். அதுதான் நடந்தது. ஓராண்டு, இரண்டு ஆண்டு காலம் மொட்டை வெயிலிலே, மரத்து நிழலிலேதான் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன, அதை மறுக்க முடியாது. மாணவர்களிடத்திலிருந்து கட்டாய நன்கொடை வசூலித்துத்தான் அந்தக் கொட்டகைகள் திரும்பப் போடப்பட்டன என்பதை மறுக்க முடியுமா? இவை பல காலங்களிலே நடைபெற்றுக்கொண்டிருந்த சம்பவங்கள். இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், என்னுடைய உணர்வு என்னவென்றால், தரமான கல்வி, ஏழையெளியவர்களுக்கு இலவசக் கல்வி எல்லா வகையிலும் எட்டாக் கனியாக மாறாமல், அதைக் கிட்டத்திலே கிடைக்கின்ற கனியாக மாற்றச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். ஆகவே இந்த நிலையை நமது அரசு கவனத்திலே கொண்டு, எதிர்காலத்திலே பள்ளிக் கல்வித் துறையின்மூலமாக அதைச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, கும்பகோணத்தில் மரணமுற்ற அந்த 94 குழந்தைகளுடைய நினைவைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் அங்கே நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் பணிவாக வேண்டிக்கொள்வது, அவர்களுடைய வேண்டுகோள் என்பதும் பத்திரிகையின்மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஜூலை 16 ஆம் தேதியை 'குழந்தைகள் பாதுகாப்பு நாள்' என்று அரசாங்கம் அறிவித்து, அந்த விழாவினை நடத்துவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும் என்று அந்தக் குழந்தைகளுடைய பெற்றோர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை நம்முடைய அரசு ஏற்று, அந்த நாளை, அந்த நினைவு நாளாக, குழந்தைகள் நாளாகக் கொண்டாட, நினைவைப் போற்றுவதற்குரிய முயற்சியாக எடுக்க வேண்டும் என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, நமது கல்வித் துறையின்மூலமாகப் (குறுக்கீடு) பல்வேறு பணிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கக்கூடியவர்களை-

பிற்பகல் 1—05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், எவ்வளவு பெரிய துயரமான செய்தியை அவர் வருத்தத்தோடு சொல்கிறார்? நீங்கள் இடையிலே குறுக்கிடுகிறீர்களே, என்ன அர்த்தம்? இல்லை, எவ்வளவு துயரமான செய்தியை இந்த நாட்டுக்குச் சொல்கிறார்? நீங்கள் குறுக்கிட என்ன இருக்கிறது? சிவபுண்ணியம், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, துயரமான செய்தியைக்கூடச் சொல்ல விடமாட்டீர்களா?

**திரு. சி.வி. சண்முகம்:** அது சம்பந்தமான ஒரு செய்தி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிவபுண்ணியம், ஒரு நிமிடம் இருங்கள். ஜெயக்குமார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜெயக்குமாரை நான் பேசக் கூப்பிட்டிருக்கிறேன், சிவபுண்ணியம்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே நான் தெரிந்துகொள்ள வேண்டியது, ஏற்கெனவே ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 ஆம் தேதி அன்று நேரு பிறந்த நாள் விழா, குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கும்பகோணம் சம்பவத்தை வைத்து விழா எடுக்க வேண்டுமென்று சொல்கிறார். விழா என்பதே தவறு. அந்தத் துயர நிகழ்ச்சிக்கு, விழா என்பது எடுக்க முடியாத ஒன்று. நான் தெரிந்துகொள்ள வேண்டியது, நம்முடைய உறுப்பினர், குழந்தைகள் தின விழாவாகக் கொண்டாடுவதை நிறுத்திவிட்டு, இந்த விழா கொண்டாட வேண்டுமென்று கூறுகின்றாரா? நேரு பிறந்த தினத்தைக் கொண்டாடக்கூடாது என்று சொல்கின்றாரா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'குழந்தைகள் தினம்' என்று சொல்லவில்லை, 'குழந்தைகள் பாதுகாப்பு தினம்' என்றுதான் சொன்னார். திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**திரு. சி.வி. சிண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) விளக்கம் சொல்லிவிட்டார் அல்லவா? (குறுக்கீடு) அவர் பேசி முடித்த பிறகு பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் குழந்தைகள் தினத்தை மாற்ற வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைக்கவில்லை. குழந்தைகள் பாதுகாப்பு நாள் என்று, அந்த ஜூலை 16 ஆம் தேதியை நினைவு நாளாகக் கொண்டாட வேண்டுமென்று அறிவிக்க வேண்டுமென்றுதான் கோரிக்கை வைத்திருக்கிறேன். ஆகவே, இதிலே வேறு கருத்துக்கு இடமில்லை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சி.வி. சண்முகம் ஏதோ சொல்ல வருகிறார்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, கும்பகோணம் தீ விபத்திலே இறந்த குழந்தைகள் நினைவாக, 'குழந்தைகள் பாதுகாப்பு தினம்' அனுசரிக்கப்பட வேண்டுமென்று சொல்கின்றார். நாங்கள் அதை வரவேற்கின்றோம். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே அந்தக் கும்பகோணம் தீ விபத்து சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்ற அதிகாரிகள் உடனடியாகப் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு என்ன விளக்கம் அளிக்கின்றது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் அரசுமீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். அதிலே குற்றஞ்சாட்டப்பட்டிருக்கக்கூடிய அந்த அதிகாரிகளுக்கு— (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். அவர்களுடைய suspension—ஐ revoke செய்ய வேண்டுமென்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அது மாத்திரமல்ல, ஒரு படி மேலே சென்று, அவர்களுக்குப் பணியிடம் வழங்க வேண்டுமென்றும் நீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. எனவே, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை என்றைக்கும் மதிக்கக்கூடிய முதல்வர் கலைஞர் அரசால் நீதிமன்றத்தினுடைய ஆணைப்படிதான் அந்த நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. Court order—ஐ comply பண்ணியிருக்கிறார்கள். இதில் இரண்டு கருத்துகள் உங்களுக்கு இருப்பதற்கு chance இல்லை. (குறுக்கீடு) சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தீ விபத்து நடந்தது. அதைத் தவிர்ப்பதற்கான ஓர் ஆலோசனையை வழங்க வேண்டும் என்பதற்காக அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சம்பத் என்ற நீதிபதியின் தலைமையிலே குழு அமைக்கப்பட்டது. அன்றைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தது என்பது, அந்த நீதியரசர்மூலமாக மூன்று

மாத காலத்திற்குள்ளாக அதனுடைய அறிக்கையை இங்கே வைக்க வேண்டும், அதை இந்த அவையிலே வைக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், ஓராண்டு காலம் முடிகின்ற வரையிலும் அந்த அறிக்கையைப் பெறுவதற்குரிய முயற்சியை நீங்கள் எடுத்தீர்களா? அதற்கான தீர்வு காணுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டதா? அந்தப் பள்ளிகளிலே தீ பரவாமல் தடுப்பதற்கான அந்த முயற்சியில் அவர் என்ன சொன்னார் என்று இந்த அவையிலே சொன்னீர்களா? கடைசி வரையில் சொல்லவேயில்லை. ஆகவே, இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நீங்கள் சொல்வதற்காகத்தான் சொல்கிறேன். ஆகவே, சென்ற ஆட்சியிலே அதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை.

குறிப்பாக, கணினி ஆசிரியர்கள் தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டபோது இந்த அவையிலே கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு மீண்டும் மாதம் இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே அந்தக் கோரிக்கை பற்றி நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு தினசரி வந்து, அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும், அவர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். அந்தக் கணினி ஆசிரியர்களைத் தயவுசெய்து—நன்கு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள், கல்விக்காகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை—நிரந்தரம் செய்வதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். B.Ed., பட்டதாரி ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், நிறைய நேரம் எடுத்திருக்கிறீர்கள். பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** வேகமாகப் பேசி முடித்துவிடுகிறேன். அவர்களைப் பதிவு மூப்பு அடிப்படையிலே பணி நியமனம் செய்ய வேண்டுமென்று கோருகிறார்கள். காரணம், தேர்வாணையத்தின் மூலமாகப் போனால்—10, 20 வருடங்கள் ஆகிறது அவர்கள் படித்து முடித்து.— புதியதாக வந்தவர்களோடு அவர்கள் போட்டி போட்டுத்

தேர்வு எழுதி வெற்றி பெறுவது என்பது இயலாத காரியம். ஆகவே, அவர்களைப் பதிவு மூப்பு அடிப்படையிலே பணி நியமனம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—10*

அதேபோலத்தான், கல்லூரி விரிவுரையாளர்கள் பற்றிய கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, தமிழக மக்கள் கணக்குக் கணிப்புப் பணியில் இருந்து 1992 ஆம் ஆண்டு அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுமூலமாக 510 பேர்களுக்குப் பணி வழங்கப்பட்டது. மீண்டும் மீதம் பேர்களுக்குப் பணி வழங்கவேண்டும். அவர்களைத் தகுதிக் குறைவான பணிகளிலே சேர்ப்பதற்கான முயற்சி எடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அதைப் பரிசீலித்து அவர்களுக்கு உரிய பதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை, உலகத் தமிழ் செம்மொழி ஆய்வு நிறுவனம் ஆக்கிடுவதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் சந்தித்து ஒரு கோரிக்கை வழங்கி இருக்கிறேன். அந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்பது சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை மேலும் செம்மை செய்வதற்கான முயற்சியை, மத்திய அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியைத் தாங்கள் மேற்கொண்டிருக்கிறீர்கள். அதிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய சுமார் 30 ஊழியர்களுக்குரிய, ஓய்வூதியம் பெறுவதற்குரிய வாய்ப்பு நமது அரசு ரீதியாக அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே அதைச் செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். அதை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கையாக வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை ஏற்று, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய ஊழியர்களுக்கு, அந்த ஓய்வுக் கால நன்மைகளும், பயன்களும் கிடைக்கக்கூடிய வகையிலே நீங்கள் உத்தரவினை வழங்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்வழிக் கல்வியைப் பொறுத்தவரையில் இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழைக் கணினி மென்பொருள்மூலமாக

உயர்த்தச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும் என்று ஒரு ஆய்விலே சொல்லப்பட்டிருக்கிறது. பல அறிஞர்கள் அந்தக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். உலக அளவிலே கணினியினுடைய பயன்பாடு சிறப்பாக வளர்ந்து வருகின்ற காரணத்தினாலே, அது ஒரு முக்கியமான செய்தி என்ற காரணத்தினாலே நான் சொல்ல விரும்புகின்றேன். ஆங்கிலத்தில் கணினியில் தட்டச்சு செய்யும்போது, சொற்பிழையோ, தொடர்பிழையோ செய்தால், ஆங்கில மென்பொருள் தானாகவே சுட்டிக்காட்டித் திருத்துகின்ற வாய்ப்பு ஆங்கிலக் கணினியிலே இருக்கிறது. இதேபோன்ற வசதி தமிழிலே இல்லாத காரணத்தினாலே, அதை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நமக்குத் தேவையான தகவல்களைக் கணினியில் சேமித்து வைத்து, தேவையான வினாக்களுக்கு விடைகளை அளிப்பதற்கான மென்பொருள் தமிழில் இல்லை. அதையும் நிறைவேற்றச் செய்வதற்கான முயற்சிகளை நமது அரசு மேற்கொள்ள வேண்டும். அதை ஒரு புதிய முயற்சியாக எடுத்துச் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மென்பொருள் ஆய்வில் உலக அளவில் சிறந்து நிற்பவர் யார் என்றால், அமெரிக்காவில் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழன் இந்திரஜித் மணி என்பவர்தான் சிறப்பானவர் என்று உலக அளவிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் அமெரிக்காவிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர் பல்வேறு சாதனைகளைச் செய்துகொண்டு இருக்கிறார். ஆகவே, நம்முடைய தமிழிலே அதைச் செய்ய வேண்டும். ஒரு கட்டுரையை அல்லது நூலைக் கணினியே படித்துப் புரிந்து, அதனுடைய சுருக்கத்தை நமக்கு அளிக்கும் மென்பொருள் மேலை நாட்டில் இருக்கிறது. அது நம்முடைய தமிழில்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Time ஆகிவிட்டது. *(குறுக்கீடு)* மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவிலேதான் நாம் பேசி முடிவு செய்து, 31 ஆம் தேதி எதிர்க்கட்சித் தலைவர் பேசி, நிதியமைச்சர் பேசுவதாக முடிவு எடுத்தோம்.

இன்னமும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருக்குப் பிறகு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பா.ம.க., காங்கிரஸ், அ.தி.மு.க. தலைவர்கள் எல்லாம், (குறுக்கீடு) இல்லை, நாளைக்கு சுதர்சனம் பேசுகிறார். இத்தனை பேர் பேச வேண்டி இருக்கின்ற காரணத்தினால், நிதியமைச்சர் பேசுவதற்கு நேரம் கிடைக்காது. அதையும் மனதிலே வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாக இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இது ஒரு முக்கியமான விஷயம் என்ற காரணத்தினால் சொன்னேன். திரும்ப வேண்டுமானால் கல்வி மானியக் கோரிக்கையில் அதை நாம் விரிவாகச் சொல்வதற்குரிய முயற்சிகளை எடுக்கலாம்.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

குறிப்பாக, ஒரே ஒரு கோரிக்கை. 1998 ஆம் ஆண்டில் மாண்புமிகு கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்திலேதான், இங்கே சட்டமன்றத்திலே அறநிலையத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் ஒரு விவாதம் நடைபெற்றது. அதிலே குறிப்பாக, அறநிலையத் துறைக்குக்கீழ் இருக்கக்கூடிய மனைப் பகுதிகளிலே வாழ்ந்துகொண்டு இருக்கிறவர்களுக்குக் கட்டணம், நியாய வார வாடகைக் கட்டணம் என்ற பெயராலே, 1998 ஆம் ஆண்டு ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, 10 மடங்காக இருந்த கட்டணம் என்பது 100 மடங்காக உயர்ந்துவிட்டது என்று இந்த அவையில் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதைத் திரும்ப ஏற்றுக்கொண்டு, "இப்படிப்பட்ட தாக்கீதுகள் எனக்கும் வந்து இருக்கின்றன. ஆகவே, நியாய வார வாடகையை உயர்த்தி இருப்பதைப் பழைய நிலையிலேயே தொடர்வதற்கான வகையில் அந்த அரசாணையை நிறுத்தி வைக்கிறேன்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள் சென்ற 1998 ஆம் ஆண்டு. அந்த ஆட்சிக் காலம்வரையிலும் அப்படியே பழைய நிலை தொடர்ந்தது. ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, பழைய சட்டத்தை அப்படியே எடுத்து திரும்பப் புதுப்பித்து, நடைமுறைப்படுத்தி, அந்த 100 மடங்கிற்கான வாடகையை உயர்த்தி, இவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். அதை முன்னாள் முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், அன்றைய அறநிலையத் துறை அமைச்சர்

அவர்களிடத்திலேயும் எவ்வளவோ கூறியும், அதைத் திரும்ப வாபஸ் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அதை நியாய வார வாடகையாக நிர்ணயிக்க வேண்டும். அது ரொம்ப அநியாய வார வாடகையாக இருக்கிறது. ஆகவே, நீங்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவித்து, மனைப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழைகளைப் பாதுகாப்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கோரிக்கை என்ற முறையிலே, என்னுடைய மன்னார்குடி நகர் வழியாக பட்டுக்கோட்டைக்கு ரயில் கேட்டிருந்தேன். ரயில் வருவதற்கான முயற்சிகளை எடுப்பேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே உறுதியளித்தீர்கள். மத்திய அரசாங்கத்திடம் அதை வலியுறுத்தி, இந்த நிதி ஆண்டிலேயே அதைப் பெறுவதற்கான, அந்தத் திட்டத்தைத் தீட்டுவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு, பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அதை நேரில் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறேன். கொடுக்கவில்லை, திரும்பவும் கொடுக்கிறேன். நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 1—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தைக்குப் பக்கத்திலே ஏற்பட்ட அந்தத் தீ விபத்தில் இறந்த குழந்தைகளுக்கு அவர்களுடைய பெற்றோர்களை அங்கே பார்த்து நம்முடைய தலைவர் அவர்கள், முதலமைச்சராக இல்லாதபோதும், கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திலும் நேரடியாக தாய், தந்தையரை விசாரித்து, தலா 25,000 ரூபாய் நிதியையும் கட்சிப் பொறுப்பில் வழங்கினார் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையை மார்க்சீய

கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அறிக்கையில் இடம் பெற்றிருக்கிற பல்வேறு நல்ல அம்சங்களைப்பற்றி ஏற்கெனவே எங்கள் கட்சியின் சார்பாக இங்கே உரையாற்றிய உறுப்பினர்கள் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேரத்தின் அருமை கருதி, திரும்ப அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு முன்னாலே கொடுக்கப்பட்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களைத் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முழுமையான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. இந்தப் பணியில் மேலும் தொடர்ந்து முன்னேற மார்க்சீய கம்யூனிஸ்டு கட்சி இந்த அரசாங்கத்திற்குத் துணையாக நிற்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக ஒன்றை இங்கே சொல்லி, நான் பட்ஜெட்டிற்குள் செல்ல விரும்புகிறேன். கடந்த சில தினங்களுக்கு முன்னாலே எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய கூட்டத்தை நடத்தினோம். கடந்த சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த உறுப்பினர்களும் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் பொதுவாக விவாதிக்கிறபோது, ஒரு செய்தியைச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன அனுபவம் என்னவென்றால், கடந்த 5 ஆண்டு காலம் எங்களுக்கு எந்தத் தொல்லையும் இல்லாமல் இருந்தது. ஏனென்றால் எந்த மகஜரும் வராது. சட்டமன்ற உறுப்பினர்களை பொது மக்கள் நம்பிக்கையோடு மனுக் கொடுத்து, இதை நிறைவேற்ற வேண்டும் என்கிற அதுபோன்ற கோரிக்கைகள் எங்களை நாடி வரவில்லை. ஆனால், இந்த 2 மாத காலத்தில் பல ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினர் நேரடியாக அமைச்சரையோ அல்லது முதலமைச்சரையோ சந்தித்து இந்தத் தேவைகளை எடுத்துச் சொல்லி கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய ஒரு வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில், மக்களும் அந்த நம்பிக்கையை இழந்த காரணத்தினாலே மனுக் கொடுக்கவில்லை. ஆகவே, அமைச்சர்களை மட்டுமல்ல, முதலமைச்சரையே சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புகிற

நேரங்களிலெல்லாம் சந்திக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) நிலைமையை இப்பொழுது தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலேதான், சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி, பல வருடங்களாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளையெல்லாம் இந்த முறையாவது நீங்கள தலையிட்டுத் தீர்வு காண வேண்டும் என்ற பெரும் நம்பிக்கையோடு இப்பொழுது மனுக்கள் வந்துகொண்டிருப்பது, இந்த அரசாங்கம் எந்த அளவில் மக்கள் நலனில் அக்கறையோடு செயலாற்றுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அடுத்ததாக, பொதுவாக இந்த பட்ஜெட்டைப்பற்றி நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி எங்கள் உறுப்பினர்கள் வரவேற்றுச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழுகிற மக்கள் எந்த அடிப்படை வசதிகளும் அற்றவர்களாக சாக்கடையின் மத்தியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு ஒரு நல்ல தீர்வு வேண்டுமென்று கடந்த கூட்டத்தொடரிலே நான் இந்த அவையிலே வலியுறுத்தினேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அப்போதே அதற்கு உறுதியளித்தார்கள். நிதிநிலை அறிக்கைக்காகக் கூடுகிற அந்தக் கூட்டத் தொடரில், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்குரிய ஒரு நல்ல நிலைமை நிச்சயமாக உருவாக்கப்படும் என்று இங்கே தெரிவித்தார்கள். தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், இந்த இடைப்பட்ட காலத்திலே ஒவ்வொரு மாவட்டமாக, அவர்களோடு பேசுகிறபோது நான் அறிந்த வரை, கடந்த மாதம் 6 ஆம் தேதி காஞ்சிபுரத்திலே துவக்கி, தமிழகம் முழுவதும் எல்லா நகராட்சிகளிலும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, அந்த அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளில் வாழ்கிற மக்களின் அவல நிலையை நேரில் கண்டறிந்து, அதற்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்ற வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு, நேற்றைய முன்தினம் 110—வது விதியின்கீழ் ஒரு மிகச் சிறப்பான செய்தியை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள சற்றேறக்குறைய 90 ஆயிரம் குடும்பங்கள் மிகப் பெரிய அளவிலே பயன்பெறத்தக்க அந்த நல்ல திட்டத்தை அறிவித்தமைக்காக, திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாக மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழகத்தில் வாழ்கிற அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகளில் வாழ்கிற மக்களின் சார்பில் மகிழ்ச்சியான எனது வாழ்த்துக்களை, பாராட்டுதல்களை, நன்றியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1—20*

குறிப்பாக, கடந்த ஜனவரி மாதம் ஏற்கெனவே இருந்த அரசாங்கம் இதேபோன்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அந்த அறிவிப்பின்படி, அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவதற்கான அந்தத் திட்டத்தின்படி—பொதுவாக எங்கள் திருப்பூருடைய அனுபவத்தைச் சொல்கிறேன்—2,400 சதுர அடி, 5—1/2 சென்ட் ஒரு வீட்டுமனைக்கு 3, 4 slab-களில் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அந்தக் கட்டணத்தை, மூன்று வகையான கட்டணங்களைத் தொகுத்துப் பார்த்தால், ஒரு குடியிருப்பு மனைக்கு ரூ.24,000-லிருந்து ரூ.1,25,000 வரை அவர்கள் development charge கட்ட வேண்டுமென்று அது நடைமுறையிலே வந்தது. அநேகமாக அதை யாருமே கட்டவில்லை. ஆகவே, இன்றைக்கு அறிவித்திருக்கிற, 110—வது விதியின்கீழ் அறிவித்திருக்கக்கூடிய இந்தப் புதிய ஆணை உண்மையிலேயே மகிழ்ச்சியானது. பேரூராட்சிப் பகுதியிலே ஒரு சதுர அடிக்கு ஒரு ரூபாய் என்ற முறையில், ஒரு மனைக்கு 2,400 ரூபாய் என்றும், நகராட்சிப் பகுதியிலே ஒரு மனைக்கு 4,800 ரூபாய் என்றும், மாநகராட்சிப் பகுதியிலே 12,000 ரூபாய் என்றும் இன்றைக்கு இந்தப் புதிய அறிவிப்பின்மூலம் வந்திருக்கிற அந்தச் செய்தி உண்மையிலேயே அந்த மக்களுக்கு, இந்தக் கட்டணத்தைச் செலுத்தி தங்கள் பகுதிக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குக் கிடைத்திருக்கிற ஒரு நல்ல வாய்ப்பு என்ற முறையில், நன்றியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, திருப்பூர் நகரத்தை மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையும் போன முறை எழுப்பப்பட்டு, இந்த முறை நிதிநிலை அறிக்கையிலேயே அது இடம் பெற்று, திருப்பூருடைய முழு வளர்ச்சிக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் பயன் தரத்தக்க வகையில் மாநகராட்சியாக அறிவித்ததற்கும், 70 கோடி ரூபாயிலே வட்டச் சாலை, அணுகு சாலை, பாலங்கள் கட்டுவதற்காக ஒப்புதல் வழங்கியமைக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூரினுடைய உள் நாட்டு பனியன் வரி விதிப்பால் மத்திய அரசினுடைய அந்த வரித் திருத்தச் சட்டத்தின்மூலம் ஏற்கெனவே நீக்கப்பட்ட அந்த வரி மீண்டும் அங்கே அவர்களுக்குப் போடப்பட்டு, அதனால் அவர்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளானார்கள். 2002 ஆம் ஆண்டிலிருந்து அது அமலுக்கு வந்தது. ஆனால், கடந்த

அரசாங்கம் 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலே அவர்கள் செலுத்துகிற வரியில் 90 சதத்தைத் திருப்பிக் கொடுக்கிற ஊக்கத் திட்டம் என்கிற வகையிலே அறிவிப்பை வெளியிட்டார்கள். அதைக்கூட நடைமுறையிலே வாங்குவதிலே பல சிரமங்கள் இருந்தன. அந்தத் தொழிலை நடத்தக்கூடியவர்கள் என்னிடத்திலே சொன்னது, கடந்த முறை நிதி அமைச்சரைப் பார்க்க 28 முறை நாங்கள் படையெடுத்து சென்னைக்கு வந்தோம். ஆனால் எங்களுக்கு உரிய, எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்று தெரிவித்து, இந்த முறை ஒரே ஒரு முறை சட்டமன்ற உறுப்பினரான என்னோடு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து ஒரு முறை முறையிட்டதற்கு, அந்தக் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே அந்தப் பழைய தேதி, 2002 ஆம் ஆண்டிலிருந்து இந்த 90 சதம் திருப்பித் தருகிற ஊக்குவிப்புத் திட்டம் அமலுக்கு வரும் என்று சொல்லி மிகப் பெரிய ஒரு வரிச் சலுகையை வழங்கியமைக்காகவும் திருப்பூர் பகுதி மக்களின் சார்பில், தொழில் நடத்தக்கூடிய நண்பர்களின் சார்பில் உள்ளபடியே நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இதற்குத் துணைசெய்த நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும், இவற்றிற்கெல்லாம் மேலாக, இதற்கு உரிய வழிகாட்டி, இதை நடைமுறையில் அமலாக்குவதற்கான ஆணையிட்டிருக்கிற நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

பிற்பகல் 1—25

அடுத்ததாக, சில செய்திகளை இந்த அவையிலே பதிவு செய்யக்கூடிய வகையிலே குறிப்பிட விரும்புகிறேன். நேரம் நீட்டித்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நிறைய விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?

**திரு. சி. கோவிந்தசாமி:** நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இன்னும் எவ்வளவு நேரம் தேவைப்படும்?

**திரு. சி. கோவிந்தசாமி:** இந்த time -ல் முடிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் தேவைப்படும்?

**திரு. சி. கோவிந்தசாமி:** இன்னும் 15 நிமிடங்களாவது தேவைப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஒரு கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நேரடியான கவனத்திற்கும், அவருடைய ஒப்புதலுக்காகவும் முன் வைக்க விரும்புகிறேன். கடந்த சில தினங்களுக்கு முன்னாலே நடைபெற்ற தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினுடைய மாநிலக் குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்தச் செய்தியை இந்தச் சபையிலும் நீங்கள் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், நம்முடைய தமிழகத்திலே, நம்முடைய பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில், உலகத் தமிழ் மாநாடு நடத்த வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக இங்கே எழுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அதை வலியுறுத்தி இங்கே நானும் குறிப்பிட விரும்புவது, தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், உலகத் தமிழ் மாநாடு உங்கள் தலைமையிலே நடத்துவது, உண்மையிலே தமிழுக்குப் பெருமை சேர்ப்பது மட்டுமல்ல, தமிழ் வளர்ச்சிக்கும், அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் உண்மையிலேயே அந்த உலகத் தமிழ் மாநாடு மிகப் பெரிய பயனுள்ளதாக அமையும் என்ற முறையில், அந்த மாநாட்டை நடத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, அடுத்து வருகிற ஆண்டு, 2007. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1957 ஆம் ஆண்டு முதன்முறையாகச் சட்டமன்றத்திற்குள்ளே அடியெடுத்து வைத்தீர்கள். வருகிற 2007 உடன் 50 ஆண்டு பொன் விழா காண இருக்கிறீர்கள். ஆகவே, இடையிலே அநேகமாக ஒரு முறை—நான் படித்த செய்தி சரியாக இருக்குமானால்,

ஒரு முறை மேலவையிலும், மற்ற தொடர்ச்சியான இந்தக் காலம் முழுவதும் சட்டப் பேரவையிலும் நீங்கள் இடம் பெற்றிருக்கிற இந்த நல்ல சூழ்நிலையில், உங்களுடைய சட்டமன்ற அனுபவத்தின் தொடர்ச்சியாக ஏற்பட்டிருக்கிற இந்தப் பொன் விழா ஆண்டில் இந்த உலகத் தமிழ் மாநாடு நடத்துவது என்பது பொருத்தமாக இருக்கும் என்ற முறையில், அதற்கான நல்ல செய்தியை நீங்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, நிதிநிலை அறிக்கையிலே, பத்தி 54-ல், திராவிட இயக்கம் சம்பந்தமான ஒரு ஆய்வை மேற்கொள்வது என்று அறிவித்திருப்பது நல்ல செய்தி. அதை நடத்த வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதோடு, 20 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டு, இந்தப் பணிகளில் தொடர்ச்சியாகத் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருக்கிற பொதுவுடைமை இயக்கத்தினுடைய செயல்பாடுகள் குறித்தும், 19 ஆம் நூற்றாண்டு முதல் செயலாற்றி வருகிற தேசிய இயக்கம் குறித்தும் ஒரு ஆய்வினை மேற்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற பேறிஞர் அண்ணா வழியிலே நடைபெறுகின்ற நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள், இந்தப் பொதுவுடைமை இயக்கம் சம்பந்தமாகவும், தேசிய இயக்கம் சம்பந்தமாகவும் ஒரு ஆய்வினை மேற்கொள்வதற்கு நீங்கள், ஆணையிட வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளையும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்ததாக, தமிழகத்திலே கடந்த சில நாட்களாக வருகிற சில பத்திரிகைச் செய்திகள் கவலை அளிப்பதாக இருக்கின்றன. பயங்கரவாத சக்திகள், தீவிரவாதிகள், பொதுவாக இந்தியாவின் பல பகுதிகளில் தங்களுடைய வன்முறைச் செயல்களை நிகழ்த்தக்கூடிய வகையிலே பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதுதான் மும்பையில் ஏற்பட்ட அந்தத் துயரச் செய்தி என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, அதனுடைய தொடர்ச்சியாகத் தமிழகத்திற்குள்ளேயும் ஆங்காங்கே தங்களுடைய வன்முறைகளை நடத்துவதற்குச் சில முயற்சிகள் நடந்து வருவதனுடைய அடையாளம்தான், கோவையிலே, மதுரையிலே மற்றும் வேறு சில இடங்களிலே கிடைத்திருக்கக்கூடிய தகவல்கள். ஆகவே, பத்திரிகையில் வருகிற செய்திகள், இவற்றையெல்லாம் நாம் நிச்சயமாக முளையிலேயே கிள்ளி எறிகின்ற அடிப்படையில்...

*பிற்பகல் 1—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. நீங்கள் 5 நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி**: ஆகவே, அந்த வகையில் இதன்மீது உறுதியான சில நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன என்பதோடு, சிறுபான்மை, பெரும்பான்மை, எந்த மதத்தைச் சார்ந்த தீவிரவாதிகளாக இருந்தாலும், அவர்கள் நடத்துகிற வன்முறை பயங்கரவாதத்தினால் பாதிக்கப்படுவது சாதாரண அப்பாவி மக்கள் என்ற முறையில், இரு மதங்களைச் சார்ந்திருக்கிற மிகப் பெரும்பான்மையான மக்கள், மத நல்லிணக்கத்தை, மக்கள் ஒற்றுமையைத்தான் விரும்புகின்றார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் தீவிரவாதிகளாக மாறி, இதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடக்கூடிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஆகவே, இதை உரிய முறையில் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதோடு, இந்த வன்முறையில் ஈடுபடக்கூடியவர்களை வலுவான மக்கள் சக்தியின்மூலமாக, நாம் அவர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்துகிற நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அதற்காக மக்களைத் திரட்ட வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். மத நல்லிணக்கத்திலும், மக்கள் ஒற்றுமையிலும் பலமான நம்பிக்கை கொண்டிருக்கிற நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள், இந்த அரசின்மூலம் நிச்சயம் உறுதியான நடவடிக்கை மேற்கொள்வார்கள், மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, நம்முடைய உளவுத் துறை. இன்னும்கூட தன்னுடையபணிகளை இந்த நோக்கத்தோடு,அதனுடைய செயல்பாடுகளை வேகப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, அதற்குரிய முறையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மக்களுடைய நலன் கருதி, இதுபோன்ற மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளில் அரசு எடுக்கக்கூடிய இந்த நடவடிக்கைகளுக்கு, அரசியல் வேறுபாடின்றி அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

அண்டை மாநிலத்தோடு நல்லுறவு பேணப்படும் என்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க நல்ல நிகழ்ச்சி. இதன்மூலம் நதி நீர் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தையின்மூலமாக

ஒரு சுமுகமான தீர்வினை எட்டுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்ற முறையில், இதை வரவேற்கின்றோம்.

அதேபோல, மத்திய அரசாங்கத்தோடு நல்லுறவு என்பது உண்மையிலேயே தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு மிகப் பெரிய பயனுள்ளதாக அமையும் என்கிற அதே நேரத்தில், மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டிய நிதி, இந்தத் தேவையையொட்டிக் கூடுதலாக நிதியைப் பெறுவதற்கும் உறுதியோடு அரசு முயற்சிக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

அதேபோல, நம்முடைய தேசம் விடுதலை பெற்று, பொன் விழா எல்லாம் கொண்டாடிய பிறகும், இன்றைக்கும் தீண்டாமைக் கொடுமை என்பது நாடு முழுவதும் தலைவிரித்து ஆடுகின்ற காட்சியை நாம் பார்க்க முடியும். அதனுடைய விளைவுதான், 10 ஆண்டுகளாகத் தமிழகத்திலே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் போன்ற ஊராட்சிகளில் இன்றைக்கு ஒரு தலித் அங்கே வெற்றி பெற முடியவில்லை. வெற்றி பெற்றாலும், அவர் பதவியிலே தொடர முடியாத ஒரு அவல நிலை இன்றைக்குத் தமிழகத்திலே நிலவிக்கொண்டிருப்பது தீண்டாமையினுடைய கொடுமை, ஆதிக்க சக்திகளினுடைய நடவடிக்கை எந்த அளவிற்கு அதிகரித்திருக்கிறது என்பதற்கு இவை எல்லாம் நல்ல எடுத்துக்காட்டுகள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறோம். ஆகவே, இதற்கு அரசாங்கம் நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுப்பதோடு, மக்கள் மத்தியிலே ஒரு விரிவான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு, தேவைப்பட்டால் சினிமா, குறும்படம், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை அரசே, நாமே தயாரித்து, தமிழக மக்கள் மத்தியிலே எடுத்துச் சென்று, இந்த சாதியக் கொடுமைகளுக்கு எதிராக மக்கள் மத்தியிலே ஒரு விழிப்புணர்வை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிறு தொழில்கள். சிறு தொழில்கள் சம்பந்தமாக இந்த அறிக்கையிலே நிறைய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், சிறு தொழில்கள் என்பவை பொதுவாகத் தமிழ்நாட்டிலே மிக அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழில்களாக இன்றைக்கு விளங்குகின்றன. அவற்றைப் பாதுகாப்பதும், பலப்படுத்துவதும், அவற்றிற்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதும்

பல இலட்சக்கணக்கான மக்களின் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடியது என்ற வகையிலே அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–35*

மத்திய அரசாங்கம் சமீபத்திலே சர்க்கரை இறக்குமதிக்கான சுங்க வரி முழுமையாக விலக்கு அளிப்பது என்று எடுத்திருக்கக்கூடிய முடிவு, சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருக்கக்கூடிய நம்முடைய தமிழ்நாடு போன்ற மாநிலங்களைக் கடுமையாக பாதிக்கக்கூடியதாக அமையும். ஆகவே, மத்திய அரசு அந்த இறக்குமதி வரியை, சர்க்கரைக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

சுற்றுச்சூழல் சம்பந்தமாக, அது கடுமையான பாதிப்பைப் பொதுவாக ஏற்படுத்தி வருகிறது. சாயக் கழிவு, தோல் கழிவு, சர்க்கரை ஆலைக் கழிவு போன்ற பல்வேறு கழிவுகளால் நிலத்தடி நீர் மாசுபடுகிறது. குடிநீர், விவசாயம் உட்பட கடுமையான பாதிப்பு ஏற்படுகிறது. மறுபுறத்திலே இந்தத் தொழிலை நம்பி பல இலட்சக்கணக்கான மக்கள் வேலை செய்து வாழ வேண்டிய இன்னொரு சூழ்நிலையும் இன்றைக்குத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இந்த இரண்டையும் பாதுகாக்க வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்து வருவதை நான் நன்கு அறிவேன். இடையிலே நீதிமன்றத்தின் தலையீடுகள் இருக்கின்றன. நான் அதற்குள்ளே, விவாதத்திற்குள் செல்ல விரும்பவில்லை. நீதிமன்றத்திற்கு வெளியே, சம்பந்தப்பட்ட விவசாயிகள், தொழில் உடைமையாளர்களை அழைத்து வைத்துப் பேசி, ஒரு நல்ல தீர்வை எட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு காரணங்களால் நம்முடைய பொதுச் சுகாதாரம் மிகக் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. சாதாரண ஏழையெளிய, நடுத்தர மக்கள் இப்போது கடும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்தப் பொதுச் சுகாதாரத்தை உறுதிப்படுத்த மாவட்ட அரசு மருத்துவமனைகள், வட்ட அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை வளப்படுத்த வேண்டும், நவீனப்படுத்த வேண்டும்; அங்கே காலியாக இருக்கிற இடங்களில் மருத்துவர்களை உடனடியாக நியமிக்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு மருத்துவர் இருக்கிறார். அதே மாதிரி, பல நோய்களுக்கு மருத்துவர்களே இல்லாத நிலைமை மாவட்ட அரசு மருத்துவமனையிலே இருக்கிறது. அந்த நிலைமைகளை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கண்டறிந்து, உடனடியாக அதையெல்லாம் நிரப்பி, மருத்துவமனையை நவீனப்படுத்துவதன்மூலமாக சாதாரண ஏழை மக்களின் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையிலே நிறையப் பேசலாம். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** கல்வி என்பது இன்றைக்கு முழுக்க, முழுக்க வியாபாரமாக மாறியிருக்கிறது. சாதாரண ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் தொழில் கல்வி பயிலுவதற்கு இடம் என்பது எட்டாக் கனியாக மாறியிருக்கிறது. அரசு சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்குப் பொறியியல் கல்லூரியிலே இரண்டு இலட்சத்திலிருந்து, 15 இலட்சம் ரூபாய். மருத்துவக் கல்லூரிக்கு 40 இலட்சம் ரூபாய் வரை கட்டணம் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. 65, 35 என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை, அந்த நிர்வாகத்திற்கு ஒதுக்கப்படுகிற அந்தக் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக்கூட கட்டணத்தை நிர்ணயித்து, அவர்கள் கொள்ளையடிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் கடந்த காலத்திலே சாராய வியாபாரிகள் எல்லாம் கல்லூரி முதல்வராக மாறி விட்டார்கள். ஆனால் அரசாங்கம் சாராயக் கடை நடத்த வேண்டிய நிலைமைக்கு கடந்த காலத்திலே ஆளாகியிருந்தது. அதனுடைய விளைவுதான் இன்றையதினம் கொள்ளையடிக்கப்படுகிறது கல்வி நிலையங்களிலே.

மக்களின் வாழ்க்கை சூறையாடப்படுகிறது. ஆகவே, இதில் கூடுதலான கவனம் தேவை என்பதை இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

மெட்ரிகுலேசன் பள்ளியிலும் இதேபோல கட்டணங்கள் கூடுதலாக, LKG, UKG—க்கே பெரும் கட்டணம் செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் அதற்கு விதிமுறைகள் தேவைப்படுகின்றன, ஒழுங்குபடுத்த வேண்டும். அதே நேரத்திலே, அந்தப் பள்ளியிலே ஆசிரியர்களாகப் பணியாற்றக்கூடியவர்களுக்கு எந்த scale—ம் இல்லை. மிகக் குறைந்த சம்பளத்திலே அவர்கள் மறு பக்கத்திலே சுரண்டப்படுகிறார்கள். ஆகவே, அதற்கும் ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பட்டதாரி ஆசிரியர்களுக்கு, B.Ed., படித்தவர்களுக்கு ஏற்கெனவே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலேயும். அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்த அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்; அதில் 50 சதம் பெண்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இடையிலே, தேர்வு வாரியத்தின்மூலமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். மானியக் கோரிக்கையிலே பேசலாம். எவ்வளவு time ஆகிறது? உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அவர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாக மாறியிருக்கிறது. 40 வயதை நெருங்கிக்கொண்டிருக்கக்கூடிய அவர்களுக்கு வேலைவாய்ப்பு, ஏற்கெனவே அவர்கள் பதிவு செய்த அடிப்படையிலே—பதிவு மூப்பு அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட வருடத்தைத் தீர்மானித்து, 1997 அல்லது 1996 என்று தீர்மானித்து, அதற்கு முன்பு இருந்தவர்களுக்குப் பதிவு மூப்பு அடிப்படையிலே அந்தப் பணிக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நல வாரியம் என்பது கடந்த ஆட்சிக் காலத்திலே இருக்கிறதா என்ற ஒரு கேள்வி எழுகிற அளவிற்கு, அது செயலற்ற தன்மையதாக மாறியிருக்கிறது. ஆகவே கூட்டுப் பேர உரிமை என்பது முற்றாக அங்கே பறிக்கப்பட்ட நிலையில், அதை மீண்டும் உயிர்ப்பித்து,

கூட்டுப் பேர உரிமையை உத்தரவாதப்படுத்தக்கூடிய வகையில் தொழிலாளர் நல வாரியம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களுக்கான சில கோரிக்கைகளை நான் அமைச்சரிடத்திலே கொடுத்திருக்கின்றேன். வேலைக்கான உத்தரவாதம், அவர்களுக்கான P.F. போன்ற பல்வேறு கோரிக்கைகளைக் கேட்டிருக்கிறார்கள். அவற்றைப் பரிசீலித்து, சிலவற்றை நிறைவேற்ற அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு வேலை பாதுகாப்பு; ஏனென்றால், அவர்கள் மனித மலத்தை எடுக்கிறார்கள் என்று, ஏற்கெனவே அதிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்குரிய வேலைப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அவர்கள் குடியிருக்கிற இடங்கள்கூட குடியிருப்பதற்குத் தகுதியற்ற இடங்களாக இருக்கின்றன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அடுக்கு மாடி வீடுகள்—குடியிருப்புகள் உருவாக்கி, அவர்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவினாசி—அத்திக்கடவு திட்டம், பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்தினுடைய பாசனத்தில் ஆனைமலையாறு, நல்லாறு அணைத் திட்டம் போன்றவை முக்கியமானவை. அவற்றை எடுத்து, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—40

நிறையச் செய்திகளைச் சொல்ல வேண்டுமென்று இருந்தாலுங்கூட, பேரவைத் தலைவர் அவர்கள் தொடர்ந்து மணியடிக்கிற காரணத்தினால்—ஏனென்றால், கடைசி நேரத்திலே பேசுகிற எங்களுக்கு இப்படிப்பட்ட சிக்கல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீதான விவாதத்திலே நிறையப் பேசலாம்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, இந்த மாதிரி சிக்கல் இருக்கிறது. இருந்தாலும், அந்தச் செய்திகளை உரிய அமைச்சர்களினுடைய கவனத்திற்குப் பிறகு எடுத்துச் செல்லுகிறேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 31—7—2006 (திங்கட்கிழமை) அன்று காலை 9—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1—40 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—

*****

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS